# காலம் எனும் காட்டாறு



முனைவர் மு.தமிழ்க்குடிமகன்

தமிழ்மண் பதிப்பகம்

# காலம் எனும் காட்டாறு


முனைவர் **மு. தமிழ்க்குடிமகன்**

சட்டப்பேரவை மேனாள் தலைவர்,

மேனாள் அமைச்சர்



**தமிழ்மண் பதிப்பகம்**

அகமது வணிக வளாகம்

293, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,

இராயப்பேட்டை, சென்னை – 600 014.

நூற் குறிப்பு

| | |
|---|---|
| நூலின் பெயர் | **காலம் எனும் காட்டாறு** |
| ஆசிரியர் | முனைவர் மு.தமிழ்க்குடிமகன் |
| முதற்பதிப்பு | செப். 1996 |
| மறு பதிப்பு | சூன் 2002 |
| படிகள் | 1000 |
| தாள் | 60 ஜி.எஸ்.எம். வெள்ளை |
| அளவு | 1/16 கிரவுன் வடிவம் |
| பக்கங்கள் | 16+72=88 |
| விலை | உரு . 50/– |
| நூலாக்கம் | பாவாணர் கணினி,<br>293, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,<br>இராயப்பேட்டை, சென்னை – 600 014. |
| அட்டை வடிவமைப்பு : | நாணன் |
| அச்சு | Prompt Press<br>34, திப்பு தெரு,<br>இராயப்பேட்டை, சென்னை – 14. |
| கட்டமைப்பு | இயல்பு (சாதாரணம்) |
| வெளியீடு | கீழையியல் ஆய்வு நிறுவனக் கல்வி<br>அறக்கட்டளை சார்ந்த<br>**தமிழ்மண்** பதிப்பகம்<br>அகமது வணிக வளாகம்,<br>293, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,<br>இராயப்பேட்டை, சென்னை – 600 014 |

# படையல்

‘காலமானார்கள்’ என்று

ஒருநாள்செய்தி வந்தாலும்

நல்லவர்கள் உள்ளங்களில் –

மொழி, இனம், நாடு பற்றிச் சிந்திக்கும் மனங்களில்

வரலாற்று ஏடுகளில்

காலம்கடந்தும் வாழும்

மேன்மை மிக்க மாந்தர்களுக்கு

இந்த நூல் படையல்

– ஆசிரியன்

# காணிக்கை

1875–இல் பிறந்து, தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் என்னும் பெயரில் நீதிக்கட்சி தொடக்கம் பெறுவதற்கு முன்பே 1912–இல் 'திராவிடர் சங்கம்' எனும் பெயரில் ஓர் அமைப்பை நிறுவி, 'திராவிடர் இல்லம்' என்கிற மாணவர்களுக்கான விடுதியையும் நடத்தி, பின்னர் பிட்டி தியாகராயர், டாக்டர் டி. எம். நாயர் ஆகியோரோடு இணைந்து நீதிக்கட்சியைத் தோற்றுவித்து, ஏராளமான பார்ப்பனரல்லாதார் மாநாடுகளையும், கூட்டங்களையும் நடத்தி, இருமுறை சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்து, மிகவும் பயனுள்ள தருக்கங்களில் பங்கெடுத்து, கடைசிவரை தனக்கென வாழாமல் பிறர்க்காகவே உழைத்து, நீதிக்கட்சிக்காகவும், பார்ப்பனரல்லாத மக்களுக்காகவும் அல்லும் பகலும் அயராது பாடுபட்டு 1937 பிப்ரவரி 18–ஆம் நாள் மறைந்த திராவிட இயக்கத்தின் விடிவெள்ளி

மருத்துவர் **சி. நடேசனார்**

அவர்களுக்குக் காணிக்கை.

# முதற் பதிப்பின் முன்னுரை

பதினான்குக்கு மேற்பட்ட நூல்களை எழுதியிருக்கிறேன். நாடகம், கவிதை, பயணநூல், ஆய்வு நூல், உரைநடை என அவை விரிகின்றன. ஒவ்வொரு நூலும் என் கோணத்தில் சிறந்ததுதான். ஆனாலும் இப்போது வெளியிடப்படும் 'காலம் எனும் காட்டாறு' என்மனத்தை வெகுவாகக் கவர்ந்த ஒன்றாகும். மற்றவற்றில் கற்பனை, விரிவுரை, எரிச்சலுரை, புகழுரை, வருணனை என்று எல்லாமே இடம்பெற்றிருக்கும். துல்லியமான தாக்குதல்களையும் அவற்றில் தொடுத்திருப்பேன். அவற்றை மீண்டும் படிக்கும் போது மகிழத்தான் செய்கிறேன்.

ஆனால் இந்த நூலில், என்னையுமறியாமல் ஒரு வேதனை, புலம்பல் ஊடாடிக் கொண்டிருப்பது புலனாகிறது.

உமார் கய்யாம் பாடல்களை – கவிமணியின் மொழியிலும், பிட்செரால்டின் ஆங்கிலக் கவிதையாகவும் ஒரே ஆண்டில் பயிலக் கிடைத்த வாய்ப்பு – என்னை வெகுவாக மாற்றியிருக்கிறது. துள்ளும் இளமைக் காலத்தில் கூடக் கேளிக்கையை நாடாத – கேள்விச் செல்வத்தை நாடும் மனப்பாங்கை இந்தக் கல்வி எனக்குத் தந்திருக்கிறது. சட்டப் பேரவைத் தலைவராக இருந்த போதும் சரி, அமைச்சராக இயங்கிய போதும் சரி 'வேகம்! வேகம்! ஓடு! ஓடு!' என்று ஏதோ ஒன்று என்னைப் பின்னின்று துரத்திக் கொண்டிருந்ததாகவே உணர்கிறேன். அதுதான் காலம்!

காலம் உணர்ந்தவன் ஞாலம் உணர்ந்தவன்!

ஞாலம் உணர்ந்தவன் ஞானி யாகிறான்!

நான் 'ஞானி' யாகிவிட்டேன் என்று சொல்லிக் கொள்ள முடியாது. ஆனால் வாழ்வின் இனிப்பு, கசப்பு, பொது வாழ்வில் ஏற்படும் புளிப்பு, பூரிப்பு ஆகிய இரண்டு நிலைகளையும் உணர்ந்திருப்பவன் என்ற முறையில் நான்

கற்றது ஒருவகைக் கல்விதான்! பெற்றது 'ஞானம்' (அறிவு) தான் என்பதை ஒப்புக்கொள்வதில் தவறில்லையே!

எனவே இந்த நூலில் ஆங்கிலக் கல்வியால் கிடைத்த ஒப்புநோக்குச் சிந்தனை துல்லியமாகக் கை கொடுத்திருக்கிறது. உமார்கய்யாம் தாக்கம் பளிச்சிடுகிறது.

மூன்று நான்கு இடங்களில் நான் ஆற்றிய இலக்கிய உரைக்குக் 'காலம் என்னும் காட்டாறு' எனும் தலைப்புக் கொடுத்தேன். முக்கிய இடங்களிலெல்லாம் வரவேற்பு. செய்திகளின் சாரம் அவையோரிடம் ஏற்படுத்திய நெகிழ்ச்சி! – இவற்றை நேரில் கண்டதால், அந்தக் குறிப்புகளை நூலாக்கிட நினைத்தேன்.

'காலம்' பற்றிச் சிந்தித்தவர்களை இணைத்தேன். ஏற்கனவே 'வாழ்ந்து காட்டுங்கள்!' எனும் நூலை வெளியிட்ட பகுத்தறிவாளர் வை. ஞானசேகரனிடம் கொடுத்து விட்டேன் : அவர் நூலாக்கி விட்டார்.

இடையில் தேர்தல் அறிவிப்பு. அலைச்சல் – வெற்றி – ஆட்சி அமைப்பு – தமிழை வளர்க்கும் பெரும் பொறுப்பு : அமைச்சராக இருந்து கொண்டு இந்த முதல் பதிப்புக்கான முன்னுரையை எழுதினேன்.

கொடுக்கப்பட்ட காலத்துக்குள் தமிழ் வளர்ச்சியில் பல முத்திரைகளைப் பதித்தாக வேண்டும் எனும் வேகத்தை – அறிவுரையை இந்த நூல் எனக்கே வழங்கியது.

இந்த நூலைப் படித்து உணர்ந்தால், உங்கள் வாழ்வு இந்த மண்ணுக்குப் பயன்படும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை உடையவன் நான்.

ஒரு சிலரையாவது இந்த நூல் தடுத்து நிறுத்தி நன்னெறி நோக்கி நடக்க வைத்தால் அதுவே இதன் பயன்.

நீங்கள் காலவெள்ளத்தையும் நீந்திப் புகழேணியின் உச்சத்திற்குப் போகமுடியும்!

"காலத்தைப் போற்றுங்கள்" என்று கைகூப்பி வணங்குகிறேன்!

திருவள்ளுவராண்டு 2027 அன்பன்,
ஆனித்திங்கள், 30. மு. தமிழ்க் குடிமகன்.

# இரண்டாம் பதிப்பின் முன்னுரை

முதற்பதிப்பு பரபரப்புமிக்க 'அமைச்சர்' பதவியில் இருந்தபோது வெளிவந்தது. இந்த இரண்டாம் பதிப்பு எந்தப் பரபரப்பும் அற்ற அமைதியான வேளையில் வருகிறது.

சுட்டெரிக்கும் கத்தரி வெயில்; இடைத்தேர்தல்களில் ஏற்படும் பரபரப்பு; இந்திய வட எல்லையில் போர் மூளும் நிலை; குசராத் வன்முறைகள் அடங்கிவிட்டன என்று சொல்லக்கூடிய சூழல் –

இந்த நிலையில் 'காலம் எனும்' அந்த ஆற்றலைத் தமிழன்பர்கள் பலரும் உணரச் செய்யவேண்டும் எனும் உந்துதலோடு எழுதுகிறேன்.

எத்தனையோ தமிழ்ப்பணிகள் செய்தோம்; கடுமையாக எச்சரித்தோம்; ஆணைகள் பல அணிவகுத்து வந்தன. தமிழ் ஆட்சிமொழிச் செயலாக்கத்தில், தமிழை வழிபாட்டு மொழியாகப் பயன்படுத்துவதில், தமிழ்வழிக் கல்வியைக் கொண்டுவருவதில், விளம்பரப் பலகைகளில் தமிழ் இடம் பெறுவதில் எத்தனையோ முன்னேற்றங்களைக் கண்டிருக்கிறோம் என்றாலும் தொலைக் காட்சிகளின் 'தமிழ்க்கொலை', திரைப்படங்களுக்கு ஆங்கிலத் தலைப்புகள், ஆணைகளை உள்வாங்கிக் கொண்டு உணர்வோடு செயல்படுத்தாமல் இன்னும் சிலர் செக்கு மாடுகளாகவே வலம்வரும் நிலை ஆகியவற்றையும் பார்க்கிறோம்.

எனவே நம் பணிக்கு ஓய்வில்லை;

நாம் ஓயவில்லை.

இந்த நினைவோடு செயல்புரிய எழும்போது மணிப்பொறியை ஒரு தடவை பார்த்துக் கொள்கிறேன். வேகத்தோடு நடக்கிறேன். 'காலம் எனும் காட்டாறு' எனும் நூலும் கையில் இருக்க வேண்டாமா?

அதற்காகவே இந்த இரண்டாம் பதிப்பு. பாவாணர் நூல்களை முழுமையாக வெளியிட்டு, பதிப்புத் துறையில் சிறப்பு முத்திரை படைத்த இளவழகன், 'தொய்வின்றி இயங்குபவன்' என்பதால் என்மீது அன்பு கொண்டு இந்த நூலை வெளிக் கொணர்ந்துள்ளார்.

இருவரும் இணைந்தே செயற்படுகின்றோம்

எனவே 'நன்றி' கூறுவதைவிட

நலம் பாராட்டி நடப்பதே நல்லது.

வாழ்க!

இந்த நூலுக்கு என்னை முழுவதும் அறிந்த முனைவர் இரா. இளவரசு அணிந்துரை எழுதி உள்ளார். இது வெறும் அணிந்துரை மட்டுமல்ல. எங்கள் வாழ்க்கையின் பதிவுகள். அவற்றில் சில இடங்கள் என்னைப் பெரிதும் நெகிழ்த்து விட்டன.கலங்கிய கண்களுடன் அவருக்கு என் நன்றி.

**தி.பி.2033** **மு. தமிழ்க்குடிமகன்**

**வைகாசித் திங்கள், 6**

**(20.5.2002)**

# என்றும் தமிழோடு இருப்பவர்

நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்...

அப்போதுதான் நாட்குறிப்பு எழுதும் பழக்கத்தைத் தொடங்கியிருக்கிறேன்.

ஒருநாள் இப்படி எழுதியிருக்கிறேன்

"சாத்தையா, உன் பேச்சு அனைத்தும் சத்தையா" என முன்னிலையில் தொடங்கி "இவரால் நாடும் மொழியும் நல்ல பயன்களைப்பெறும்" எனப் படர்க்கையில் முடித்திருக்கிறேன்.

அன்று தொடங்கிய நட்பு வளர்ந்ததும், 'தமிழ்ப்பேராயம்' கண்டதும், முதல் கதைத் தலைவனாய் அவரும் இரண்டாம் கதைத் தலைவனாய் நானும் 'போராட்டம்' நாடகத்தில் நடித்ததும், அவர் ஊர்க்கு நானும் என் ஊர்க்கு அவரும் வந்ததும், ஒருவரைப் பார்த்தால் மற்றவரை நினைவுகூரும் வகையில் எங்கள் இருவரையும் பலபேர் இணைத்தே நோக்கியதும், உறவினும் மேலாய் நட்பு மலர்ந்ததும் பசுமையான நினைவுகள்!

முன்னேற்றக்கழக ஈடுபாட்டோடு தனித்தமிழைக் கடைப்பிடியாகக் கொண்டு 'தென்மொழி'த் தாளிகையை மீண்டும் கொணர நாங்கள் மேற்கொண்ட பணிகள் பல.

உலகத் தமிழ்க் கழகம் தொடங்கப்பட்டது. அதில் எங்களுக்கும் பொறுப்புகள் அளிக்கப்பட்டன. முகவை மாவட்ட அமைப்பாளராகிய அவர் முதல் மாநாட்டை உ. த. க. வரலாற்றில் முன்னும் பின்னும் காணாதமுறையில் எழுச்சி யோடு நடத்திக் காட்டினார். மாநாட்டு எழுச்சி பாவாணர்க்கு வியப்பளித்தது. மேடையிலேயே 'அடுத்து நாம் தான் ஆட்சி அமைப்போம்; அப்போது தமிழ்க் குடிமகன்தான் முதலமைச்சர்' என்று அறிவித்து விட்டார்! பாவாணர் அளித்த 'பதவி' சிலர்க்குக் கலக்கம் தந்தது. தமிழ்க்குடிமகன் 'மேலே' வந்துவிடக் கூடாது என்பதில் விழிப்பாய் இருந்தனர்.

பாவாணர், 'தமிழன் பிறந்தகம் தீர்மானிப்பு'க் கருத்தரங்கிற்குத் தஞ்சை வருகிறார். சில நாட்கள் தங்கியிருந்த பாவாணரொடு பல செய்திகளைப் பேசும் வாய்ப்பு கிடைக்கிறது. ஆங்கிலப் பட்டந்தாங்கியரே உ. த. க பொதுச் செயலாளராக வேண்டும் என்னும் நாட்டமுடைய பாவாணர், என்னை அப்பொறுப்பேற்க வேண்டும் என்கிறார். நானோ 'என்னினும் வினையாண்மை உடையவர் தமிழ்க்குடிமகன், அவரே இப்பொறுப்பேற்றல் நல்லது' என்கிறேன். அப்போது பாவாணர் குறிப்பிட்ட ஒரு செய்தி எனக்குச் சிறிது அதிர்ச்சியளித்தது. 'தமிழ்க்குடிமகனை உ. த. க விலிருந்து நீக்கிவிட வேண்டும்' என்று பாவாணரிடம் கூறப்பட்டிருக்கிறது.

பின்னர் உ. த. க மாதிகையான 'முதன்மொழி' (நவம்பர் 1971) இதழில் பாவாணர் அவர்கள் என்னைப் பொதுச்செயலாளராக அமர்த்துவதாகவும், வருகின்ற உ. த. க ஆட்டை விழாவில் என் பணி தொடங்கும் என்றும் அறிவிக் கிறார். நெய்வேலியில் முறைப்படி உ.த.க ஆட்சிக்குழு 24.05.72இல் கூடு கிறது. மாநில, மாவட்டப் பொறுப்பாளர்கள் பலபேர் கலந்து கொள்கின்றனர். உ.த.க.வை முனைப்போடு வளர்த்துச் செல்வதற்கான முடிவுகள் மேற் கொள்ளப்படுகின்றன. தமிழ்க்குடிமகன் அனைவராலும் பொதுச் செயலாள ராகத் தேர்ந் தெடுக்கப்படுகிறார். கூட்டத்திற்கென வந்த வெளியூர் நண்பர் ஒரிருவர் கடலூரிலேயே இருந்துவிட்டதும், கூட்ட முடிவுகளுக்கு முதலில் இசைவளித்த பாவாணர், பின்னர் இசைவை மறுத்து அறிக்கை விட்டதும் வருந்தத்தக்க வரலாற்று நிகழ்ச்சிகள்.

தமிழ்க்குடிமகனின் வினையாண்மையில் பலர்க்கும் இருந்த நம்பிக்கையைப் புலப்படுத்துவதற்காகவே அந் நிகழ்ச்சிகள் இங்குப் பதிவு செய்யப்படுகின்றன.

'இந்தக் காலத்திற்குள் இதை முடித்தாக வேண்டும்' என்று திட்ட மிட்டுக் கொண்டு ஏற்ற பணிகளை விரைந்து முடிக்கும் ஆற்றல் இளமைக் காலந்தொட்டு அவரிடம் இருந்து வருகிறது. கலைஞரைக் காதலிக்கும் தமிழ்க் குடிமகன் கலைஞரால் அமைச்சராக்கப்படுகிறார். கல்வித்துறை அமைச்ச ராவார் என்று பலரும் எதிர்பார்த்த நிலையில் ஒரு புதிய துறை இவர்க்கென உருவாக்கப்பட்டு அதன் பொறுப்பை ஏற்கிறார். அதிகார வரம்பு குறைந்த அந்தத் துறையிலும் தனது முத்திரையைப் பதிக்க அவர் தவறவில்லை. 'நமக்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது, அதைப் பயன்படுத்திக்கொண்டு நமக்கு உவந்ததை, நம்மால் முடிந்ததை எப்படியும் செய்தாக வேண்டும்'

என்னும் தவிப்பும் துடிப்பும் அவரிடம் இருந்ததைப் பல நேரங்களில் நான் பார்த்திருக்கிறேன்.

அரசியல் என்பது கொள்கைகளை நிறைவேற்றுவதற்கான களம் என்பது இன்றைய நடைமுறையில் இல்லை. தமிழ்க்குடிமகன் இன்று கலைஞரோடு இல்லை என்பதில் பல தமிழன்பர்களுக்கு வருத்தம் இருக்கிறது. அவர்களுக்கு நான் சொல்வது : அருமை நண்பர்களே, தமிழ்க்குடிமகன் இன்றும் என்றும் தமிழோடு இருப்பவர்' என்பதுதான்.

எதையும் காலத்தோடு செய்யவேண்டும் என்பதில் என்றும் கருத்தாய் இருக்கும் தமிழ்க்குடிமகன் திருச்சி தூயவளனார் கல்லூரிப் படிப்பு முடிந்து பிரியும்போது எனக்களித்த சிறிய ஒளிப்படம் ஒன்றை அண்மையில் பார்த்தேன். அதன் பின்புறம் "கடந்த காலங்களில் உங்கள் உள்ளங்களில் உலவிய ஏழை; எதிர் காலத்தில் எப்படியோ என எண்ணிக்கசியும் எளியவன்" என்று எழுதியிருந்தார். காலத்தில் கருத்தூன்றி நிற்கும் தமிழ்க்குடிமகனைக் காட்டும் வரிகள் இவை.

பன்னூலாசிரியராகிய தமிழ்க்குடிமகனின் இந் நூல் – 'காலம் எனும் காட்டாறு' – அவர்க்கு மிகவும் பிடித்த நூலாகும். அவர்க்கு மட்டுமா? படிக்கும் அனைவர்க்கும் பிடிக்கும்.

'என்னையும் அறியாமல் ஒரு வேதனை; புலம்பல் இந் நூலில் ஊடாடிக் கொண்டுள்ளது' என்கிறார் ஆசிரியர். ஆனால் ஆங்காங்கே ஊக்கமளிக்கும் நம்பிக்கைக் குரலே ஓங்கி ஒலிக்கின்றது. தமிழ்நாட்டின் சிறந்த பேச்சாளர் களில் ஒருவராகிய தமிழ்க்குடிமகனின் சொற்பொழிவைக் கேட்பதைப் போன்ற உணர்விலேயே நூல் நடையிடுகின்றது. இளந் தலைமுறையை 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' – என்று நன்றின்பால் உய்க்கும் நோக்கம் நன்கு நிறைவேறியிருக்கின்றது.

காலம் மாந்தனால் காணப்பட்டது; வகுக்கப்பட்டது. தமிழர்கள் காலத்தை முதற்பொருளாகக்கருதினர். கடவுளை முதற்பொருளாகக் கருதுவது பிற்காலச் சிந்தனை. கருப்பொருள்களில் ஒன்றாகத் தெய்வத்தை வைத்தது பழந்தமிழ்ச் சிந்தனை. காலத்தை நிலத்தோடு இணைத்து முதற்பொருளாக்கி அதனைப் பெரும்பொழுதுகள், சிறுபொழுதுகள் எனப் பகுத்துக் கருப்பொருள், உரிப் பொருள்களை அவற்றோடு இணைத்துக்கண்ட தமிழ்ச் சிந்தனை உலகின் தனிச் சிந்தனை இதனை எண்ணிப் பெருமித உணர்வோடு தமிழ்க்குடிமகன் இந் நூலில் நெஞ்சு நிமிர்த்துகிறார். (ப. 53)

காலத்தை, ஓடிக்கொண்டிருக்கும் ஆற்றுக்கு உவமையாக்கிய வியாசர், மார்க்கசு அரேலியசு, கிறித்தோபர் மார்லி முதலியவர்களைச் சிந்திக்கச் செய்யும் இந் நூல் இளங்கதிர் எழும் காலையில் தொடங்கிப் "பொழுது புலர்ந்து விட்டது; புள்ளினங்கள் ஆர்ப்பரிக்கின்றன. இன்னும் எவ்வளவோ தொலைவு போக வேண்டும்" என்று புலரும் பொழுதிலேயே போகவேண்டிய தொலைவையும் நினைவுபடுத்தி நிறைவடைகிறது.

காலத்தின் இனிமை, அதன் கடுமை, காலம் செய்யும் கோலங்கள், காலத்தின் ஆற்றல், காதல், வறுமை ஆகியவற்றிடம் காலம் அடையும் தோல்வி, காலம் எனும் மருந்து என்று காலம் பூணும் பலவகைக் கோலங்கள் நூலின் பக்கங்கள் தோறும் நடமிடுகின்றன. 'காலத்தின் குரல்' என்று ஆசிரியர் பேசும் பகுதி அவரின் ஆய்வுத்திறனைப் புலப்படுத்தவல்லது. இலக்கியத்தின் நடை, உள்ளடக்கம், வடிவம் காலந்தோறும் மாறி வந்திருப் பதை நறுக்குத்தெறித்தாற் போல் விளக்கிச் செல்கிறார். (ப. 18)

தமிழ்நாடு, வடநாடு, வெளிநாடு எனப் பற்பல நாடுகளின் சிறந்த அறிஞர் களின் அறிவார்ந்த கருத்துகளோடு உறவாட வைக்கிறார் ஆசிரியர். தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள், நாலடியார், பாரதி, பாரதி தாசன் எனப் பலரின் கருத்துகள் பொருத்தமுற ஆளப்பட்டுள்ளன. பட்டுக் கோட்டை கல்யாண சுந்தரத்தின் பாடல்வரிகளில் விட்டுப்பிரியாத வேட்கை உடையவர் தமிழ்க்குடிமகன் என்பது பல இடங்களில் பளிச்சிடுகிறது.

செல்லி, பேகன், சேக்சுபியர் முதலிய அயல்நாட்டு அறிஞர்களை நம்மோடு பேசவிடும் ஆசிரியர் உமார்கய்யாம் மீது ஒப்பற்ற காதல் கொண்டவர் என்பதைப் பல பக்கங்கள் நமக்குக் காட்டுகின்றன. சுருங்கச் சொன்னால் நூலின் உயிர்ப்பாக அமைபவை உமார்கய்யாம் கருத்துகளே எனலாம். உமார்கய்யாம் பாடல்களைத் தமிழில் தந்தவர் பலர். ச. து. சு. யோகியார், சாமி–சிதம்பரனார், அரு. சோமசுந்தரம் என அவர்கள் பட்டியல் நீள்கிறது. தமிழ்க் குடிமகன் கவிமணி தழுவிய உமார்கய்யாம் பாடல்களையே பயன்படுத்தி யுள்ளார். தமிழர்களுக்கு அதிக அளவில் அறிமுகமாகியுள்ள தமிழ்த்தழுவல் கவிமணியுடையது. ஆங்கிலவாக்கம் செய்த பிட்செரால்டின் பாடற்பகுதி களையும் ஆசிரியர் இணைத்துப்பேசும்போது ஒப்புநோக்குந்திறன் புலனாகின்றது.

பத்தாண்டுகளில் தமிழ்க்கவிதைகளை ஆய்வுசெய்து முனைவரானவர் மு. தமிழ்குடிமகன். இந் நூலிலும் பெரும்பாலும் கருத்து விளக்கக்

கருவிகளாக அமைபவை பாடல்களே. பாடல்களை எளிமையும் இனிமையும் அழகும் தோன்ற ஆசிரியர் விளக்கிச் செல்லும் பாங்கு தனித்துக் குறிப்பிடத்தக்கச் சிறப்பு வாய்ந்தது. தொடித்தலை விழுத்தண்டினார்தம் புறநானூற்றுப் பாடல் பள்ளிச் சிறுவனும் மயக்கத்திற்கிடமின்றி தெளிவாகப் புரிந்துகொள்ளும் வகையில் விளக்கம் பெறுவதைச் சான்றாகச் சுட்டலாம். இத்தகு தெளிவான விளக்கங் களைப் பார்க்கும்போது பழந்தமிழ் நூல்களுக்குத் தமிழ்க்குடிமகன் உரைவிளக்கம் வரையவேண்டும் என்று கேட்கத் தோன்றுகிறது.

இச் சிறு நூலில் தமிழ்க்குடிமகனின் தன் வரலாற்றுக்குறிப்புகள் பல இடங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. தமிழகத்தின் பொற்காலம், இருண்டகாலம் பற்றியெல்லாம் பேசும் ஆசிரியர் தன் வாழ்வின் பொற்காலம் எது என்பதை இறுதிப்பகுதியில் சுட்டுகிறார். பள்ளியில் பணியாற்றியபோது கூட்டத்திற்கு அழைத்த பேச்சாளர் வராத நேரத்தில் அவரே பேசியதையும் 'காலத்திற் செய்தலுக்கு' எடுத்துக்காட்டாகப் பேராசிரியர் வ. ஐ. சுப்பிர மணியம், பேராசிரியர் வா. செ. குழந்தைசாமி ஆகியோரைக் குறிப்பிட்டுத் தானும் அவர்களோடு தொடர்புகொண்டதையும், பரணி பாடும் செயங் கொண்டாராக நாடகத்தில் நடித்ததையும் ஆசிரியர் குறிப்பிட்டுச் செல்கிறார்.

பொதுவாழ்வுப் பட்டறிவு நிகழ்ச்சிகளும் ஆங்காங்கே பதிவு செய்யப்பட் டுள்ளன. காலம் எவ்வாறு பாழாகிறது என்பதை நன்றாக விளக்கும் ஆசிரியர் 'இராகுகாலம்' என்ற பெயரில் ஒவ்வொரு நாளும் பாழாகும் நேரத்தைப் பட்டிய லிட்டுக் காட்டுவதோடு நின்றுவிடவில்லை. தான் கலந்துகொண்ட ஒரு பொதுக்கூட்டத்தின் அச்சிடப்பட்ட சுற்றறிக்கையில் 221 பேர் இடம்பெற்றிருந்த தையும் அவர்களில் முப்பது பேராவது பேசியதையும் பேசியவர்கள் ஒருவர் மற்றவர்களை விளித்து 'அவர்களே.....அவர்களே' என்று பேசுவதால் ஏற்படும் கால இழப்பையும் சுட்டிக்காட்டுகிறார். கல்லூரி முதல்வராய்ப் பணியாற்றியவர் என்பதைப் புலப்படுத்தும் வகையில் அங்கு விடுமுறை நாட்கள் எத்தனை, வேலை நாட்கள் எத்தனை என்பதைப் பகுத்துக் காட்டும்போது காலம் வீணாவதை எளிதாகத் தெரிந்து கொள்கிறோம். இப்படிப் பட்டறிவுத் தெறிப்புகள் பல!

ஆற்றோட்டம் போல நடைபயிலும் இந் நூலில் வழக்கமாகக் குறிப்பிடப் படும் சில மொழிகள் உரசிப் பார்க்கப்படுகின்றன. 'காலம் பொன் போன்றது' என்பதை முதலில் சுட்டிப் பின்னர் 'பொன்னை வாங்கி விடலாம்; பொழுதை

வாங்க முடியாதே' என வேறுபடுத்தித் தன் கூற்றுக்கு அரணாக ஒரு சீனப்பழ மொழியையும் இணைத்துச்செல்லும் பகுதி (ப. 36) சிறப்பானது. திரும்பப் பெறமுடியாதவை மூன்று என்று வழக்கமாகச் சொல்லப்படுபவற்றை உரைத்துப்பார்க்கும் பகுதியும் (ப. 34) அப்படிப்பட்டதே.

சிறுசிறு தொடர்களாய் உணர்ச்சியை உள்ளடக்கிக்கொண்டு படுவேகமாகச் செல்லும் நூலின் தனித்தமிழ் நடை தனித்துக் குறிப்பிடத் தக்கது. தமிழ்க்குடிமகன் பேச்சில் ஆங்காங்கே தலைகாட்டும் நகைச்சுவை நையாண்டிப் பொறிகள் போன்றவற்றை இந் நூலிலும் காணமுடிகிறது. குறட்டையொலியுடன் கூடிய தூக்கத்தைக் குறிப்பிட்டு "அதனால்தான் ஆங்கிலத்தில் 'Sound Sleep' என்றார்கள் போலும்!" (ப. 32) என்றும் "மணிப் பொறி கட்டாதவன் யார்? படிக்காதவன், மணிபார்க்கத் தெரியாதவன் கூடக்கட்டியிருக்கிறான். 'மணி என்ன? என்று கேட்டால் 'நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்று கையைத் தூக்கிக் காட்டுபவனும் இருக்கிறான்" என்றும் எழுதிச் செல்லும் பகுதிகள் இதற்குச் சான்றாவன.

தமிழ்க்குடிமகன் பாவாணரை நன்கு அறிந்தவர். பாவாணரிடம் மிகுந்த ஈடுபாடும் நெருங்கிய தொடர்பும் கொண்டவர். பாவாணர் செந்தமிழ்ச் சொற்பிறப்பு அகரமுதலித் திட்ட நிறைவேற்ற ஐவர் குழுவில் ஒருவராய் அரசொடு பேசியவர். இந் நூலில் (ப. 56) பாவாணரின் கருத்துகள் பல முழுமையாக வெளிவராமல் போயினவே என்று வருந்துகிறார். "அவர் சொற் பிறப்பியல் அகரமுதலித் துறையில் இயக்குநராகப் பணியமர்த்தப்பட்டும் ஆறாண்டுகட்குமேல் அத் துறையில் பணியாற்றியும் பல அகப் புறக் காரணங் களால் அவர் நினைத்த இலக்கை எட்டவில்லை. 13 மடலங்களில் அத் தொகுப்பு வந்திருக்க வேண்டும். ஆனால் அவர் தந்ததோ ஒரே மடலம்தான். மீதி 12 மடலங்கட்குரிய ஆராய்ச்சி அறிவு அவரிடத்தில் இருந்தது. ஆனால் அவர் என்ன கருதினார். பிற சொற்கள் குறித்த அவரது ஆராய்ச்சி முடிவுகள் எவை என்பது குறித்து எவரும் அறிய முடியாது போயிற்று. அவ்வளவு பெரிய அறிஞரைக் காலம் கவர்ந்து கொண்டது" இப் பகுதியில் 'பல அகப்புறம் காரணங்களால் அவர் நினைத்த இலக்கை எட்டவில்லை' என்னும் தொடர் விரிவான விளக்கத்திற்குரியது. அறிஞர்களை உரிய காலத்தில் இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான ஏந்துகளைச் சரிவரச் செய்து பயன்கொள்ளா விடில் இனிவருங் காலத்திலும் இந்த நிலைமைதான் ஏற்படும் என்பது மனங் கொள்ளத்தக்கது.

நூலில் ஆங்காங்கே ஒங்கியொலிக்கும் நம்பிக்கைக் குரல்கள் 'ஒரு சிலரையாவது இந்த நூல் தடுத்து நிறுத்தி நன்னெறி நோக்கில் நடக்க வைத்தால் அதுவே இதன் பயன், என்னும் ஆசிரியரின் விருப்பத்தை நிறை வேற்ற வல்லன.

"காலம் போதவில்லை 'முடிக்கமுடியவில்லை' என்று புலம்புவதை விட்டு, சிலவற்றை, மிகுதியும் பயன்தராதவற்றை முற்றிலும் தூக்கியெறிந்து விட்டு எதை எய்த வேண்டுமோ அதற்காக மட்டும் உங்கள் காலத்தைச் செலவிட முயன்று பாருங்கள். அப்புறம் உங்களுக்கே ஒரு மாறுதல் ஏற்பட்டு விட்டது தெரியும். வீண்புலம்பலை விட்டொழித்து வீறுகொண்டு எழுங்கள்." (ப. 49–50)

"ஆறு அன்று மழைநீர் குடித்ததால்தான் அதனை ஊற்றுநீராக மாற்றித் தர முடிந்தது. காலம் வாய்க்கும்போது எவை எவை தேவையோ அவற்றை யெல்லாம் கைப்பற்றுங்கள். அதுவே பின்னர் பகையை விரட்டும் தடியாகவும், தளர்ச்சியின்போது ஊன்றுகோலாகவும், எவர்க்கும் பணியாமல் நீங்கள் செம்மாந்து அரசோச்சும் செங்கோலாகவும் பயன்படும்." (ப. 58)

படிப்பவரை நெறிப்படுத்தி எழுச்சிகொள்ளச் செய்யும் இத்தகைய பகுதிகள் இந் நூலில் பல.

தனி மாந்த வளர்ச்சிக்குத் துணை செய்யும் பல்துறைப் பன்னூல்களை அயல்நாட்டார் வெளியிட்டுள்ளனர். அண்மைக் காலத்தில் அந் நூல்களில் பல தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன. அயல் நாட்டவரின் கருத்துகளைத் தழுவித் தமிழிலும் பல நூல்கள் வெளிவந்துள்ளன. அன்றைய அப்துற் றகீம் தொடங்கி இன்றைய உதயமூர்த்தி, மெர்வின் வரை பலபேர் பல நூல்கள் எழுதியுள்ளனர். அந்த வரிசையில் இணையும் இந் நூல் அவற்றினின்று வேறு பட்டது. தமிழ் மரபில் ஊன்றி நிற்பது. பாடல் விளக்கங்கள் வழிச் செய்திகளை நடத்திச் செல்லும் சீர்மையது. வேறு நூல்களில் காண இயலாத எளிய இனிய தனித்தமிழ் நடையில் இயங்குவது.

'பொழுது போகவில்லை' என்பார் இந் நூலைப் படித்தபின் 'பொழுது போதவில்லை' என்னும் முடிவுக்கு வருவர். காலத்தை கொன்றவர்கள் காலத்தை வென்றவர்களாக மாறுவர். பயன்மிகு இந் நூலைப் படைத் தளிக்கும் முனைவர் மு. தமிழ்க்குடிமகனார்க்கு அகம் கனிந்த பாராட்டுகள்.

ஆடவை 32 – 2033, நிறைந்த அன்புடன்

(16.7.2002). **இரா. இளவரசு.**

# பதிப்புரை

'காலம் எனும் காட்டாறு' எனும் இந் நூலின் ஆசிரியர் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் தனித்தமிழியக்க முன்னோடிகளில் முன்னவர். திராவிட இயக்கக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டவர். இன்றும் அதே உணர்வுடன் வாழ்பவர். இந் நூலுக்கான 'காணிக்கை' எனும் தலைப்பில் திராவிட இயக்கத்தைத் தோற்றுவித்த முப்பெருந் தலைவர்களில் ஒருவரான மரு. கி. நடேசனாரைப் பற்றிக் குறித்துள்ள செய்திகளைப் படித்தால்தான் முன்னோரின் பங்களிப்பை உணரமுடியும்.

முனைவர் இரா. இளவரசு அவர்கள் இந் நூலாசிரியரைப்பற்றி 'என்றும் தமிழோடு இருப்பவர்' எனும் தலைப்பில் குறிப்பிட்டுள்ள செய்திகள் நட்பிற்குக் கட்டியங்கூறி நிற்பவை. எண்ணிப் பார்க்கத்தக்கவை.

இந் நூலினைப் படிப்போர் தம் வாழ்வை இந்த மண்ணுக்குப் பயன்படும் வகையில் ஆக்கிக் கொள்வர் என்றும், நன்னெறி நோக்கி நடப்பர் என்றும் அசைக்கமுடியாத நம்பிக்கையை நூலாசிரியர் குறித்துள்ளார். அரசியலிலும், சமுதாய இயக்கப் பணிகளிலும் ஈடுபடுவோர் இந் நூலினை தம் வழிகாட்டி நூலாகக்கொள்ள வேண்டும். தமிழறிஞர்களும், தமிழினத் தலைவர்களும், தன்பெண்டு, தன்பிள்ளை, தன்சாதி என்று குறுகிய நோக்குடன் வாழாமல், இந்த மொழியும், இந்த இனமும், இந்த நாடும் மேன்மையுற பரந்த நோக்குடன் உழைக்க முன்வர வேண்டும்.

தமிழர்கள் இல்லந்தொறும் இருக்க வேண்டிய அரிய வரலாற்றுக் கருவூலமான மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் நூல்களை வெளியிட்ட '**தமிழ்மண்**' பதிப்பகம் பாவாணரால் பாராட்டப்பட்ட, அடையாளங் காட்டப்பட்ட பெருமைக்குரிய இப் பெருந்தமிழ்ச் சான்றோரின் நூலினை மறுபதிப்பாக வெளியிடுவதில் பெருமைப் படுகிறது. முனைவர் இரா. இளவரசு அவர்கள் இந் நூலாசிரியரைப்பற்றி மொழிஞாயிறு அவர்கள் புகழ்ந்துரைத்த செய்திகளைப் பதிவு செய்துள்ளார்.

இந்நூலாசிரியரை அரசியலோடு இணைத்துப் பார்க்காமல் என்றும் தமிழோடும், தமிழின உணர்வோடும் வாழ்பவர் என்பதை தமிழ் மண்ணில் வாழும் தமிழர்களும், அயலகத்தமிழர்களும் எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்.

நன்றி.

# காலம் எனும் காட்டாறு

புலர் காலைப்பொழுது; உறக்கம் கலையும் நேரம்; உழைத்துக் களைத்த உடம்பு நல்ல உறக்கத்துடன் ஓய்வு பெற்றபின் புத்துணர்ச்சியோடு சிலிர்த்தெழுந்து கடமைகளைத் தொடரும் தெம்பு பெற்ற நேரம்.

வெளியே பறவைகளின் ஒலி. கூட்டில் அடைந்து கிடந்த பறவைகள் எல்லாம் விழித்தெழுந்து சிறகை அடித்துச் சோம்பல் முறித்துக் கிளைகளில் வந்து அமர்ந்து இங்குமங்கும் பார்த்துக் கொண்டிருக்கின்றன. எங்கோ ஒரு கோழியின் கூவல் கேட்கிறது. 'கொக்கரக்கோ' எனும் ஒலி 'எழுந்திரப்பா!' என்று நம்மைச் செல்லமாக அதட்டுகிறது.

கப்பிக் கிடந்த இருள் மெல்லக் கரைகிறது. விடியல் வெளிச்சம் மெல்ல மெல்லப் பரவுகிறது. இந்தச் சூழ்நிலையை நம் கவிஞர்கள் எல்லாம் மிகச் சிறப்பாகப் படம் பிடித்திருக்கிறார்கள்.

பாரதி பாடுகிறான் :

*காலைப் பொழுதினிலே கண்விழித்து மேனிலைமேல்*
*மேலைச்சுடர்வானை நோக்கி நின்றோம் விண்ணகத்தே,*
*கீழ்த்திசையில் ஞாயிறுதான் கேடில் சுடர்விடுத்தான்;*
*பார்த்த வெளியெல்லாம் பகலொளியாய் மின்னிற்றே,*
*தென்னை மரத்தின் கிளையிடையே தென்றல்போய்*
*மன்னப் பருந்தினுக்கு மாலையிட்டுச் சென்றதுவே.*
*தென்னை மரக்கிளைமேற் சிந்தனையோ டோர்காகம்*
*வன்னமுற வீற்றிருந்து வானைமுத்த மிட்டதுவே,*
*தென்னைப் பசுங்கீற்றைக் கொத்திச் சிறுகாக்கை*

*மின்னுகின்ற தென்கடலை நோக்கி விழித்ததுவே.*
*வன்னச் சுடர்மிகுந்த வானத்தே தென்திசையில்*
*கன்னங் கருங்காகக் கூட்டம்வரக் கண்டதங்கே.*
*கூட்டத்தைக் கண்டஃது கும்பிட்டே தன்னருகோர்*
*பாட்டுக் குருவிதனைப் பார்த்து நகைத்ததுவே.*

மரக்கிளையில் காகம் வந்து அமர்ந்து 'கா! கா!' என்று காலை வரவுக்குக் கட்டியம் கூறும் காட்சியைப் பாரதி படம் பிடிக்கின்றான்.

பாரதிதாசனோ காலை நேரத்தில் குடும்பத் தலைவி எழுந்து எப்படித் தன் கடமைகளைத் தொடர்கிறாள் என்பதை அழகுறப் படம் பிடிக்கிறார்.

*'இளங்கதிர் கிழக்கில் இன்னும் எழவில்லை*
*இரவு போர்த்த இருள்நீங்க வில்லை'*

என்றாலும் நள்ளிரவு மெதுவாய் நடந்து நடந்து நகர்ந்து கொண்டிருக்கிறது. ஒருவன் கேள்விச் செல்வம் பெறப் பெறத்தான் அவனிடம் கப்பிக் கொண் டிருக்கும் அறியாமை இருள் மெல்ல மெல்ல அகலும். அதனால்தானே வள்ளுவர் கூடக் 'கற்றிலனாயினும் கேட்க' என்றார். பள்ளி சென்று பயிலாமலே ஒருவன் கேள்விச் செல்வத்தாலேயே அறிவொளி பெற முடியும்.

*'கேள்வியால் அகலும் மடமைபோல்*
*நள்ளிரவு மெதுவாய் நடந்து கொண்டிருந்தது'*

கும்மென்றிருந்த இருள், வெளிச்சம் பரவப் பரவத் தன் கட்டுக் குலைந்து இளகியது.

ஒரு தொட்டி நிறைய நீலம் கரைத்து வைக்கப்பட்டிருக்கிறது. இதை வெள்ளை நிறமாக்க வேண்டுமானால் என்ன செய்யலாம்? அதில் சுண்ணாம்பைக் கலக்க வேண்டும். சுண்ணாம்பு கலக்கக் கலக்க நீலம் தன் நிறத்தை இழந்து வெள்ளை யாகிக் கொண்டே வரும். கடைசியாக வெள்ளை நிறமாகவே மாறிவிடும். இருட்டும் அப்படித் தான். கரைந்து கரைந்து வெளிச்சம் பரவி விடுகிறது.

*'தொட்டி நீலத்தில் சுண்ணாம்பு கலந்த*
*கலப்பென இருள்தன் கட்டுக் குலைந்தது'*

இப்படியாகப் பாரதிதாசன் பொழுது விடியும் காட்சிகளை உவமைகளாய்க் குவித்து நம் முன் ஓவியமாக்கிக் காட்டுகிறார்.

பொழுது விடிந்து விட்டது; குடும்பத் தலைவி ஊக்கத்தோடும் சுறுசுறுப்பு உள்ளத்தோடும் எழுந்து விட்டாள். 'குடும்ப விளக்கின்' ஒருநாள் வாழ்க்கை தொடங்குகிறது என்கிறார் பாவேந்தர்.

காகம் மரக்கிளையில் அமர்ந்து கொண்டு குருவியையும் கிளியையும் அழைத்து வைத்துப் பேசிக் கொண்டிருக்கிறது என்கிறார் பாரதியார். இரைதேடப் பறக்குமுன் இப்படியோர் உரையாடலாம்.

ஆனால் உமார்கய்யாம் இந்தக் காலைப் பொழுதை எப்படிப் பார்க்கிறார்? காகம் கரைவது அவருக்கு எப்படிக் கேட்கிறது?

இந்த வேறுபட்ட கோணத்தில் பார்க்கும்போது நமக்கே பகீர் என்கிறது. பதைக்கப் பதைக்க எழுந்து கடமைகளை நிறைவேற்றக் கடுகி ஓட வேண்டியவர்களாகி விடுகிறோம்.

"காகம் கரைவது உங்கள் காதில் விழுகிறதா? எழுந்திருங்கள். இரவில் நிறைவுடன் நீங்கள் தூங்குவதற்காகச் சாத்தி வைத்துத் தாழ்போட்டு வைத்திருந்தீர்களே, உங்கள் வீட்டுக் கதவை! அதைத் திறவுங்கள். சாளரக் கதவுகளை எல்லாம் தாராளமாகத் திறந்து வையுங்கள். வெளிச்சம் நன்றாகப் பரவட்டும். விரைந்து எழுங்கள்!" என்கிறார். இப்படியே விட்டிருந்தால் ஓர் இனிய கனவைப் போல் – கட்டளைபோல் – இதை ஏற்று மகிழலாம். இல்லையே! எச்சரிக்கைச் சம்மட்டியை அல்லவா நம் தலையில் தூக்கி அடிக்கிறார்.

'தோழர்களே! இரண்டு கணப்பொழுதுக்கு மேல் நாம் இங்கே தங்கப் போவதில்லை. ஓடி ஓடி உழைத்த நம் உடல் ஒருநாள் ஒரேயடியாக ஓய்வு பெறப்

போகிறது. வாழ்வை முடித்துக் கொண்டு எங்கேயோ போகப் போகிறோம். போனால் திரும்பி வரமாட்டோம்' என்கிறார்.

பாரதியும், பாவேந்தரும் தந்த மகிழ்ச்சிச் சிந்தனையை உமார்கய்யாம் தரவில்லை. காலத்தின் கடுமையை நமக்கு உணர்த்துகிறார்.

*காகம் கரைதல் கேளீரோ?*
*கதவைச் சற்றே திறவீரோ?*
*ஆக இரண்டு கணப்பொழுதுக்கு*
*அப்பால் இங்கே தங்கோமே;*
*தேகம் அலுத்துச் செல்வோமே,*
*சென்றால் மீண்டு வாரோமே;*

என்கிறார்.

ஆம்! காகம் விடியலை வரவழைக்கப் பூபாளம் மட்டும் பாடவில்லை! உங்கள் வாழ்க்கையையும், அதன் கால அளவையும் கூட உணர்த்துகின்றது.

இதை நினைக்கும்போதுதான் காலத்தின் அருமை நமக்குப் புலப்படு கிறது.

**"காலத்திற்கு நண்பனோ, பகைவனோ, உறவினனோ கிடையாது. இந்த உறவுகளுக்கு அப்பாற்பட்டது தான் காலம்."**

*"காலம் வெறும் சாட்சிதான்*
*செயல்கள் எப்பொழுதும் நமதுதான்."*

*"கெட்டதோ, நல்லதோ காலம் அல்ல;*
*நல்லதோ கெட்டதோ எப்பொழுதும் அந்தக் காலங்களில்*
*செயல்படும் செயல்கள்தாம்"*

இந்த மூன்று கருத்துகளையும் சொல்பவர் யார் தெரியுமா? வியாசர்; ஆம்! வேத வியாசர்.

மேல்நாட்டு அறிஞர்கள் பலரும் 'காலம்' என்றால் என்ன என்பதை அழகுபடச் சொல்லியிருக்கிறார்கள்.

'Time is a legalizer, even in the field of morals' என்கிறார் எச். எல். மென்கன் (H. L. Mencken)

*"நல்லொழுக்கம் பேசும்உலகில் கூடக் காலம்தான் சட்டம்*
*பேசும் வழக்காளியாகச் செயல்படுகிறது"*

என்கிறார்.

நமக்கு நேரடியாகப் பாடம் கற்றுக் கொடுத்த ஆசிரியர்கள் பலர்; நூல்கள் வாயிலாக நம்மைக் கற்றுக் கொள்ள வைத்த ஆசிரியர்கள் பலர். என்றாலும் 'காலம்' தான் ஆசிரியர்கட்கெல்லாம் ஆசிரியர் என்கிறார் பேகன். (Time which is the author of author - Facon).

யார் யாரோ எதை எதையெல்லாமோ புதுப்பிக்கிறார்கள். ஆனால் காலம் போல உலகைப் புதுப்பிப்பவன், திருப்பணி செய்பவன், பழுது நீக்கிப் பளபளப்பு உண்டாக்குபவன் இன்னொருவன் இருக்க முடியுமா? முடியாது என்கிறார் பிரான்சிஸ் பேகன், (Time is the greatest innovator - Francis Bacon).

உலகப் புகழ் பெற்ற புதின ஆசிரியன் – பிரெஞ்சுப் புரட்சியை நம் கண் முன்னால் நிறுத்தும் கதையாசிரியன் – 'இரு நகரக் கதைகளை'த் தந்து நம் நெஞ்சத்தில் இடம் பெற்ற சார்லசு டிக்கன்சு இன்னும் அழகாகச் சொல்கிறான்.

"காலத்தின் தொழிற்சாலை ஓர் கமுக்கமான இடம்; அவனது வேலை என்பதே ஓசையே இல்லாதது. அவனது தொழிற்சாலையில் வேலை நடக்கும் ஒலியே வெளியில் கேட்காது. அவனுடைய கைகள் எதையும் நமக்குச் சைகையாலேயே தெரிவித்து விட்டுச் செல்கின்றன" என்கிறார் அவர். (His factory is a secret place, his work is noiseless and his Hands are mutes).

விதி என்பதைக் காலமாகக் கருதும் உமார்கய்யாம் கூட இதையே உறுதிப்படுத்துகிறான்,

*எழுதிச் செல்லும் விதியின்கை*
*எழுதி எழுதி மேற்செல்லும்;*
*தொழுது கெஞ்சி நின்றாலும்,*
*சூழ்ச்சி பலவும் செய்தாலும்,*
*வழுவிப் பின்னாய் நீங்கியொரு*
*வார்த்தை யேனும் மாற்றிடுமோ?*
*அழுத கண்ணீ ராறெல்லாம்*
*அதிலோர் எழுத்தை அழித்திடுமோ?*

என்கின்றான்.

காலம் எத்தகைய வல்லமை படைத்தது என்பதைத்தான் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோமே!

"காலம் ஆற்றைப் போன்றது : அதில் நீந்த விரும்புபவன் நீந்தலாம் : இயலாதவன் மூழ்கலாம். ஒருவன் நீந்தி மறுகரையை அடைந்தாலும் அடையாவிட்டாலும் அதற்காகக் காலம் மகிழ்ச்சியடையவோ, கண்ணீர் விடவோ போவதில்லை."

என்று கூறுகின்ற வியாசர்தான்,

"காலம் ஒடும் ஆற்றைப் போன்றது. அதனைச் சுகம், துக்கம் போன்றவை களால் தாக்க முடியாது," என்றும் குறிப்பிட்டார்.

ஆம்; காலம் ஒரு காட்டாறு. எங்கேயோ ஒரு மலையில் பெய்கின்ற மழை – மரம், செடி கொடிகளையெல்லாம் தாண்டி விழுந்தும் சாய்த்து இழுத்துக் கொண்டும் வேகமாகக் கீழிறங்கி அடர்ந்த காடுகட்குள் புகுந்து வெளியே வந்து சமவெளியில் ஒடும்போது ஆறு என்று பெயர் பெறுகின்றது. இந்தக் காட்டாறு தானாகவே உருவானது; அதனுடைய வழியை அதுவே

தேர்ந்தெடுத்துக் கொள்கிறது. தன் வழியில் எதிர்ப்பட்ட மரங்களையும் சாய்த்து விடுகின்றது. அதனால் தானே

*'ஆற்றங் கரை மரமும் அரசறிய*
*வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே'*

என்ற கவிதையே பிறந்திருக்கிறது.

இப்படி ஓடுகின்ற காட்டாற்றைப் போன்றதுதான் காலமும். இதனை மார்க்கசு அரேலியசு அழகாகக் கூறுகிறான். 'Time is a river of passing events, age, a rushing torrent' என்கிறான் அவன்.

காலம், நம்மைக் கடந்து செல்லும் நிகழ்ச்சிகளைக் கட்டி இழுத்துச் செல்கிறது; விசையோடு உந்தி விழும் நீரோட்டத்தைப் போலக் காலமும் நாலு கால் பாய்ச்சலில் விரைந்தோடுகிறது என்கிறான் அவன்.

கிறித்தோபர் மார்லி என்பவர் இதையே வேறுவகையாகக் கூறுகிறார். 'காலம் பொங்கி வரும் ஒரு பேராற்றைப் போன்றது. எதிர்ப்பு ஏதும் தெரிவிக்காமல், நீர் இழுப்புக்கேற்ப அதன் போக்கிலேயே இழுத்துச் செல்லப்பட இசைகின்றவர்கள் எல்லாருமே மகிழ்ச்சியாகத்தான் இருக் கிறார்கள். ஒவ்வொரு நாளும் அவர்கள் எளிதாக மிகக்கிறார்கள். கேள்விக்கு இடமின்றி, ஏன் இது? எப்படி அது? என்றெல்லாம் கேள்வி கேட்காமல் அந்தந்த நொடிக்கேற்ப வாழ்ந்து விடுகின்றனர், என்கிறார்.

ஆம்! எதிர்நீச்சல் போடாமல் காலமெனும் காட்டாற்றின் போக்கிலேயே தாமும் போகிறவர்களைத் தான் அவர் சுட்டிக்காட்டுகிறார். "Time is a flowing river; Happy those who allow themselves to be carried unresisting with current. They float through easy days. They live, unquestioning in the moment."

'மகிழ்ச்சியும் துயரமும் காலத்தின் இரு கரைகள்' என்றார் வியாசர். ஆம்! இந்த இரண்டும் தானே வாழ்க்கை. ஒன்றை வெறுத்தாலும் அது

விடுவதில்லை; ஒன்றை அழைத்தாலும் அது வருவதில்லை. இந்தப் போராட்டத்திலேயே நம் வாழ்வு ஓடிக் கொண்டிருக்கிறது.

'காலம் ஓர் ஆறுதான்; அதில் பொன்மங்களும் (உலோகங்கள்) திண்மை யான பொருள்களும் மூழ்கிப் போய் விடுகின்றன. அதே நேரத்தில் உமி, பதர் போன்ற புல் செத்தைகளும், வைக்கோல் போன்ற துரும்புகளும் ஆற்றின் மேல் மட்டத்தில் மிதந்து கொண்டுதானிருக்கும்' என்கிறார் பேகன். (Time is like a river, in which metals and solid substances are sunk while chaff and straws swim upon the surface - Bacon).

காட்டாறு எப்படியெல்லாம் போகும் என்பதை உமார் கய்யாம் சுட்டிக் காட்டுகிறான். அவனையே இந்தக் காட்டாறு இழுத்துக் கொண்டு போகிறது.

*"ஏனோ உலகில் வந்தேன்? முன்*
*இருந்த இடமும் எவ்விடமோ?*
*கானா றோடும் கதியேபோல்,*
*கண்ட கண்ட படிபோனேன்;"*

என்று திக்குத் தெரியாமல் தடுமாறுகிறான்.

காலம் பலவற்றை நிலைக்க விடாமல் செய்து விடுகிறது. அழித்து அடையாளம் தெரியாமல் செய்து விடுகிறது. உருக்குலைத்துச் சிதறடித்து விடுகிறது. இதுபற்றி நம் தமிழ் முன்னோர்களும் பலவாறு சிந்தித்து அதன் விளைவாகத் தான் நிலையாமைக் கருத்தைத் தெரிவித்தார்கள். நானும் இங்கே நிலையாமை பற்றிக் கூறி வாழ்பவர்களை அச்சுறுத்துவதற்காகச் சொல்ல வில்லை. வாழ்வின் உண்மைகளைத் தெரிந்து கொண்டு, சிறப்பாக வாழக் கற்றுக் கொள்ளுங்கள் என்பதற்காகவே இந்தக் கருத்துகளை இங்கே சுட்ட வேண்டிய நிலை.

முன்னோர்கள் யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை ஆகியவற்றைத்தான் முன்னிறுத்திப் பேசியுள்ளனர்.

இந்த மூன்றின் நிலையாமைத் தன்மைகளைப் படம் பிடிப்பதில் நாலடியார் சிறப்பிடம் பெறுகிறது.

செல்வம் இன்று ஒருவனிடத்தில் இருக்கும்; ஓராண்டு கழித்துப் பார்த்தால் அவன் ஒட்டாண்டியாகித் திரிவான்;

ஆனால் அவன் எதிரிலேயே புதிய பணக்காரன் முளைத்திருப்பான். செல்வம் வண்டியின் உருளையைப் போல உருண்டு செல்லக் கூடியது.

*"அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்*
*சகடக்கால் போல வரும்!"*

என்கிறது நாலடியார்.

இன்னும் சிலர் இருக்கிறார்கள்; முன்னோர் வழியிலோ, அல்லது முயற்சி வழியிலோ பொருள் சேர்த்து விடுவார்கள். ஆனால் அதை ஒழுங்காகப் பயன்படுத்த மாட்டார்கள்.

வேளாவேளைக்கு ஒழுங்காகச் சாப்பிடக்கூட மாட்டான்; தன் புகழ் நிலைபெறுவதற்கான செயல்களையும் செய்ய மாட்டான்; நெருங்கி வருகின்ற சுற்றத்தார்க்கு அவ்வப்போது ஏற்படும் துயரினைக் களைய முன்வர மாட்டான்; ஈகைப் பண்போடு ஏழை எளியவர்க்கு எடுத்து வழங்க மாட்டான். தானும் தின்னாமல் மாடுகளையும் பக்கத்தில் வரவிடாமல் வைக்கோல் போரில் படுத்துக் கொண்டு குரைத்துக் கொண்டிருக்குமேநாய் – அதுபோல் வீணே பொருளைப் பாதுகாத்துக் கிடப்பான்; இப்படிப்பட்டவனிடம் செல்வம் இருந்தாலும், அதனை இழந்தவனாகவே கருதப்படுவான்.

*"உண்ணான்; ஒளிநிறான்; ஓங்கு புகழ்செய்யான்*
*துன்னரும் கேளிர் துயர்களையான் - கொன்னே*
*வழங்கான்; பொருள்காத் திருப்பானேல் அ! ஆ!*
*இழந்தான்என் றெண்ணப் படும்"*

என்கிறது நாலடியார்.

இளமை எப்படி நிலைக்காமல் போகும்?

நாலடியார் அதற்கும் ஒரு விளக்கம் தருகிறது.

குளிர்ந்த சோலையில் எத்தனையோ பயன்மரங்கள்; எவ்வளவுதான் கனிகள் பழுத்துக் கொத்தாகத் தொங்கினாலும், ஒரு குறிப்பிட்ட காலம் சென்றபின் வெம்பியோ, முதிர்ந்தோ அவை உதிர்ந்துதானே ஆக வேண்டும்; இளமையும் அப்படித்தான்.

பெண்களின் கண்களை வேலுக்கு உவமை சொல்வதுண்டு; வேல் போன்ற கூர்மை படைத்திருப்பதால் கண்களுக்கு இந்த உவமை. இளமையில் 'வேற்கண்ணாள்' என்று பாராட்டப்பட்டவள் முதுமையானதும் நிமிர்ந்த நன்னடை தீர்ந்து போய்க் குனிந்து நடக்கும் நிலை. கையில் ஒரு கோல் வைத்துக் கொண்டு ஊன்றி நடக்கும் நிலை. அப்போது பார்வையாவது பளிச் சென்று தெரிகிறதா என்றால் இல்லை. எதைப் பார்த்தாலும் ஏதோ நிழலாடு வதைப் போல் தோன்றுகிறது.

கோலை ஊன்றிக் கொண்டு, அந்தக் கோலின் நுனியையே உற்றுப் பார்த்து அடையாளம் கண்டு செல்லும் அளவுக்கு மங்கிய கண்களாகி விட்டன. ஆம்! ஆம்! வேற்கண்ணாள் இப்போது கோற்கண்ணாள் ஆகிவிட்டாள்.

நாலடியார் கூறுகிறது :

*"பனிபடு சோலைப் பயன்மரம் எல்லாம்*
*கனிஉதிர்ந்து வீழ்ந்தற்று இளமை - நனிபெரிதும்*
*வேற்கண்ணாள் என்றிவளை வெஃகன்மின், மற்றிவளும்*
*கோற்கண்ணாள் ஆகும் குனிந்து."*

இதுபோலத்தான் நம் உடலும்.

மலைமீது உலாவுகிறது மஞ்சு; கொஞ்சம் நேரம் கழித்துப் பார்த்தால் மஞ்சு எங்கோ நகர்ந்து போய்விடுகிறது.

*''யாக்கை*
*மலையாடு மஞ்சுபோல் தோன்றி மற்றாங்கே*
*நிலையாது நீத்து விடும்''*

என்கிறது நாலடியார்.

உடம்பு பிணமான பிறகு அதற்கு மதிப்பளித்தால் என்ன? தூக்கி வெளியில் எறிந்தால்தான் என்ன? பிணத்தை நார்வைத்து இழுத்துக் கட்டினால் என்ன? மிகப் பெரிய ஆடம்பரத்தோடு தாரை தப்பட்டை முழங்கப் பல்லாயிரம் பேர் திரண்டு – பிணப் பெட்டியில் வைத்து அடக்கம் செய்தால் என்ன? அல்லது கண்டவிடத்தில் தூக்கி வீசி விட்டால்தான் என்ன? நாக்கு வெளியே தள்ளி, கண்கள் பிதுங்கி கன்னம் உப்பி நிணநீர் வடியும்போது பல பேர் பார்த்துப் பழித்தால்தான் என்ன?

உடலாகிய தோற்பைக்குள் நின்று விளையாடிய உயிர் புறப்பட்டு விட்டால் பிறகு நீங்கள் என்ன செய்தால் என்ன?

*''நார்த்தொடுத்து ஈர்க்கில் என்? நன்று ஆய்ந்து அடக்கில்என்?*
*பார்த்துழிப் பெய்யில் என்? பல்லோர் பழிக்கில்என்?*
*தோற்பையுள் நின்று தொழில்அறச் செய்துஊட்டும்*
*கூத்தன் புறப்பட்டக் கால்''*

என்கிறது நாலடியார்.

உடம்பு ஐம்பூதங்களால் ஆனது.

*'நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தின்*
*கலந்த மயக்கம் உலக மாதலின்'*

என்று ஐம்பூதத்தால் ஆன உலகைத் தொல்காப்பியர் தெளிவுபடுத்துகிறார். உலகமே உடல் – நம் உடலே உலகம்.

ஆம்! மனிதன் உயிரை விடுகிறான் என்றால் முதலில் வெளியேறுவது காற்று (வளி). இப்போது யாக்கை உயிரற்ற கட்டையாகி விடுகிறது. நீண்ட

நேரமானதும் குருதியோட்டம் நின்று உடம்பின் சூடு முற்றிலும் மறைந்து உடம்பே சில்லிட்டுப் போகிறது. இப்போது 'தீ' நம் உடலைவிட்டுப் போய் விட்டது. பிறகும் அப்படியே போட்டிருந்தாலும் அல்லது புதைத்து விட்டாலும் உடல் உப்பி நீர் – அதுவும் நிணநீர் வெளியாகி உடலை வெறும் சக்கையாகப் போட்டு விடுகிறது. இப்போது நீரும் நீங்கி விடுகிறது. கடைசியாக நம் உடல் நிலத்துள் புதைந்து மண்ணோடு மண்ணாகி விடுகிறது.

இதைத்தான் உமார்கய்யாமும் சொல்கிறான் :

*"மண்ணில் உடைந்து மண்ணாக*
*மாறி மண்ணில் மறைந்திடுமே;*
*மண்ணிலிருந்து மண்ணெடுத்து*
*வனைந்து வைத்தான் இவ்வுடலை;"*

உடலிலிருந்து நான்கு பூதங்களும் மறைந்ததும் நாம் அண்ட வெளியில் விசும்பில் நிறைகிறோம். நாம் பார்த்துக் கொண்டிருந்த விசும்பும் நம்மை விட்டு மறைந்து விடுகிறது.

இவற்றையெல்லாம் சொல்லக் காரணம், நிலையாமையை உணர்ந் தாவது நிலையான செயல்களை விரைவாகச் செய்வீர்கள் என்பதற்காகத் தான். அதற்கு நீங்கள் கருத வேண்டியது காலத்தைத் தானே!

அதையே நாலடியாரும் சொல்லி வற்புறுத்துகிறது.

*'புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி*
*இன்னினியே செய்க அறவினை - இன்னினியே*
*நின்றான் இருந்தான் கிடந்தான்தன் கேள்அலறச்*
*சென்றான் எனப்படுத லால்'*

இதையே முற்றிலும் வெறுக்கும்படியும் சொல்ல முடியுமல்லவா! சீத்தலைச் சாத்தனார் சொல்கிறாரே!

மணிமேகலையைப் பின்தொடர்ந்து உதயகுமாரன் ஓடுகிறான். அவளை எப்படியும் அடைந்துவிட வேண்டும் எனும் வெறி அவனுக்கு

இதனை எப்படியும் தடுத்துவிட வேண்டும் எனும் துடிப்பு தோழி சுதமதிக்கு. மணிமேகலையைப் பளிங்கறை மண்டபத்தில் புகுந்து ஒளிந்து கொள்ளச் செய்துவிட்டு உடம்பின் இழிவு குறித்து உரை செய்கின்றாள்.

இந்த உடல் எத்தகையது தெரியுமா?

*'வினையின் வந்தது; வினைக்குவிளை வாயது;*
*புனைவனநீங்கின் புலால்புறத் திடுவது*
*மூப்புவிளி வுடையது; தீப்பிணி இருக்கை*
*பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்*
*புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை'*

என்கிறார் சீத்தலைச் சாத்தனார்.

இப்படியே எண்ணிக் கொள்ளுங்கள் என்று உங்கள் இடத்தில் வேண்டுகோள் வைக்க மாட்டேன். ஆனால் காலம் சில கோலங்களைச் செய்து விடும் என்ற உண்மையை மறக்கக் கூடாதல்லவா?

காலம் நம் அழகிய உடலில்தான் எத்தனை மாற்றங்களைச் செய்து விடுகிறது.

ஓர் அழகிய இளம் பெண்ணை வருணிப்பதில் நம் புலவர்கள் யாரும் யாருக்கும் சளைத்தவர்கள் இல்லை.

*'கண்ணாடிக் கன்னத்தைக் காட்டி என் உள்ளத்தைப்*
*புண்ணாக்கிப் போடாதே! போ! போ! மறைந்துவிடு*
*ஆணிப்பொன் மேனி அதில் கிடக்கும் நல்லொளியைக்*
*காணிக்கை நீவைத்தால் காப்பரசர் வாராரோ?*
*பட்டாளச் சக்கரவர்த்தி பார்த்தாலும் உன்சிரிப்புக்*
*கட்டாணி முத்துக்குக் காலில்விழ மாட்டாரோ!'*

என்று வியந்து பாராட்டுகிறார் பாவேந்தர்.

முகில்போன்ற கூந்தல், பிறைபோல் நெற்றி, கண்ணாடிக் கன்னம், செம்பவழ இதழ்கள், காதளவோடிய கண், எட்பூ ஏசிய நாசி, சங்குபோல்

கழுத்து, காந்தள் மெல்விரல்கள், நாயின் நாக்கைவிட மென்மையான அடிகள் என்று எத்தனை எத்தனை வர்ணனைகள் நம் இலக்கியங்களில்!

இதுவே ஒரு காலத்தில் எப்படி மாறும்?

காலம் தம் கைவண்ணத்தை எப்படி வெளிப்படுத்துகிறது?

அழகிய இளம்பெண்ணாகத் தங்கத்தையும், அன்புக் கணவன் மணவழகரையும் அலசி ஆராய்ந்த பாவேந்தர் இருவரையும் முதியவராக்கி விடுகிறார். காலம் அவர்களது இளமையைப் பறித்துச் சென்று விடுகிறது.

இதோ! கிழவர் மணவழகர் எப்படியிருக்கிறார் பாருங்கள்!

*''மணவழகர்க்கு முன்போல்*
*வன்மையோ தோளில் இல்லை*
*துணைவிழி ஒளியும் குன்றக்*
*கண்ணாடித் துணையை வேண்டும்;*
*பணையுடல், சருகு! வாயிற்*
*பல்லில்லை! மயிர்வெண் பட்டே!''*

என்கிறார் பாவேந்தர்.

தங்கத்தை இப்போதும் நினைத்துப் பார்க்கிறார் மணவழகர். அவள் எப்படி இருக்கிறாளாம்!

*''புதுமலர் அல்ல; காய்ந்த*
*புற்கட்டே அவள் உடம்பு!*
*சதிராடும் நடையாள் அல்லள்;*
*தள்ளாடி விழும் மூதாட்டி;*
*மதியல்ல முகம் அவட்கு;*
*வறள்நிலம்! குழிகள் கண்கள்''*

காலம் இருவரையும் எப்படி மாற்றி வைத்துள்ளது! பார்த்தீர்களா?

கலைஞரும் 'குறளோவியம்' தீட்டும்போது காலத்தின் முத்திரைகளை எவ்வளவு அழகாகப் புலப்படுத்துகிறார்?

*'அற்றார்க்கொன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்*
*பெற்றாள் தமியள் மூத்தற்று'*

என்பது குறள்.

செல்வர் என்றிருந்தால் அவரது செல்வம் எதுவும் அற்ற ஏழைகளின் ஏற்றத்துக்கு உதவுவதாக இருக்க வேண்டும். அப்படியில்லாமல் தேங்கியும் அழிந்தும் போகும் செல்வம், அழகிய இளம்பெண்ணொருத்தி மணமாகாமலே, மக்கட்பயன் எய்தாமலே மூத்து முதிர்ந்து அழிவதற்கு ஒப்பாகும். இதையே கலைஞர் தன் நடையழகால் மிகச் சிறப்பாகத் தருகிறார்:

*"காளையொருவன் கரம்பட்டால் கட்டழகு கெட்டொழியுமே*
*என்று கவலைப்பட்டாள் அவள், - ஆனால்*
*காலத்தின் கரம்பட்டுக் கரைந்து போனாள் - அழகு*
*குறைந்து போனாள் - பிறகு*
*மறைந்து போனாள்*
*அவள்*
*மணவிழாப் பருவம் எய்தாமலேயே*
*மணிவிழாப் பருவம் எய்தினாள்*
*அவள்*
*பழமானாள்; நரைதிரை மூப்புடன் கூடிய*
*கிழமானாள்;"*

என்கிறார்.

காளை தொடக்கூடாது என்று வேண்டுமானால் அவள் மறுத்திருக்கலாம். ஆனால் காலம் தொடுவதை அவளால் தடுக்க முடியவில்லையே!

அவளுடைய ஒப்புதல் கேட்காமலேயே காலம் அவளது அழகையெல்லாம் அழித்து விட்டுப் போய்விட்டதே! வேண்டாம் வேண்டாம் என்று அவள் வெறுக்கலாம்; ஆனால் அவளுக்கு மணிவிழா (அறுபது) வருவதை மறுக்க முடியவில்லையே!

காலம் என்ன செய்யும்? பழத்தைக் கிழமாக்கும். இதை விட இனி எப்படி அழகுபடச் சொல்ல முடியும்?

உமார்கய்யாமும் இதனால்தானே மனமுருகி உரைக்கின்றான்:

*"மலர்ந்து நல்ல மணம்வீசி*
*வையம் புகழ வாழாமல்*
*உலர்ந்து வீழும் அரும்புகளிவ்*
*உலகில் யாரே எண்ணிடுவார்?*
*கலந்த திருவும் யௌவனமும்*
*கண்ணுக் கினிய மெய்யழகும்*
*குலைந்து போகும் என்றறிஞர்*
*கூறும் கூற்றில் ஐயமுண்டோ?*

இளமைக் காலம் ஓடிப் போய் விட்டதை எண்ணி முதுமையில் எவ்வளவு வருத்தப்பட வேண்டியிருக்கிறது?

புறநானூற்றில் ஒரு புலவர். அவரது இயற்பெயர் மறைந்து போய்விட்டது. அவர் பாட்டில் கையாண்ட உவமையே அவருக்குப் பெயராக ஆகிவிட்டது. 'தொடித் தலை விழுத்தண்டினார்' என்று பெயர் சூட்டிவிட்டோம். பூண் பிடித்த தண்டினை – கைத்தடியினை ஊன்றிக் கொண்டு தடுமாறி நடக்கும் முதியவர். வாயிலிருந்தோ முழுமையான சொற்கள் வரவில்லை. தட்டுத் தடுமாறி – பாதிச் சொற்கள் தொண்டையிலேயே விழுந்து மடிந்து விட்ட நிலையில், மேல் மூச்சு வாங்க ஏதோ சில சொற்களை உதிர்க்கும் முதியவர். அதையும் பேசவிடாமல் இடையில் பயங்கரமான இருமல் குறுக்கிட்டு ஓர் இடி முழக்கம் செய்து விட்டுப் போய் விடுகிறது.

*"தொடித்தலை விழுத்தண்டு ஊன்றி நடுக்குற்று*
*இருமிடை மிடைந்த சிலசொல்*
*பெருமூ தாளரோம்"*

ஆகிய பெரியவர் இந்த முதுமையில் தன் இளமைக் காலத்தை எண்ணி ஏங்குகிறார்.

துள்ளும் இளமைக் காலத்தில் கடல் மணலில் ஓடி விளையாடிய காலம்; மணலிலே வண்டல் இழைத்து, அங்கு வைத்து விளையாடும் வண்டல் பாவைக்குப் பூச்சூட்டி, குளிர்ந்த பொய்கையிலே இளமை அழகு பொங்க நீந்தி விளையாடும் மகளிரோடு கைகோத்து ஆடி மகிழ்ந்தோமே! அவர் தழுவத் தழுவினோம். அவர் அசைந்த விடத்து அசைந்து விளையாடினோம்.

எங்கள் வீரத்தை மெய்ப்பித்தால்தானே அந்தப் பெண்கள் எங்களை மெச்சி மகிழ்வர்! அதற்காக எவ்வளவு வேகம் காட்டினோம்! என்னொத்த இளைஞர்கள் சிலரையும் சேர்த்துக் கொண்டேன். நீர்த்துறை அருகே தாழ்ந்த கிளையுடைய மருத மரத்தில் ஏறி நின்றேன். பிறகு எதிரே ஆழ்ந்து கிடந்த மடு நீருள் துடுமெனப் பாய்ந்தேன். நான் பாய்ந்ததுமே கரையிலிருப்பவர்கள் மருண்டார்கள்; மடு நீரோ அலைஅலையாய்ப் பிதுங்கி ஓடியது. நீருக்குள் மூழ்கியவன் மடுவின்அடித்தளத்துக்கே போய் விட்டேன். கைநிறைய மணலை அள்ளிக் கொண்டு மேலே வந்தேன். நீரின் மேல்பரப்புக்கு வந்து தலையை வெளியே நீட்டிக், கையிலிருந்த மணலைக் கரையிலிருந்த மகளிர்க்குக் காட்டிய போது அவர்களுக்குத்தான் எத்தனை களிப்பு! எனக்குத் தான் எத்தனை எக்களிப்பு!

'இளங்கன்று அச்சமறியாது' என்பார்களே அந்த அச்ச மற்ற இளமை இப்போது என்னானது? இப்போது நினைத்தாலும் எம் தற்போதைய நிலையை நினைக்க எனக்கே இரக்கமாயிருக்கின்றதே!'

இப்படிப் புலம்புகிறார் முதியவர். அவர் மட்டுமல்ல. தொடித்தலை விழுத்தண்டினாராக ஆகப் போகும் ஒவ்வோர் ஆண் பெண்ணுக்கும் இதுதானே முடிவு!

இளமைக்காலத்தின் பசுமை நினைவுகளை அசைபோடுவதில்தான் எத்தனை மகிழ்ச்சி! அந்த நாளை எண்ணி எவ்வளவு ஏக்கம்! 'புறநானூறு' எவ்வளவு அழகாக இந்தப் பாடலை நமக்குத் தந்து நிற்கின்றது?

*"இனிநினைந்து இரக்கம் ஆகின்று; திணிமணல்*
*செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்,*

*தண்கயம் ஆடும் மகளிரொடு கைபிணைந்து,*
*தழுவுவழித் தழீஇத், தூங்குவழித் தூங்கி,*
*மறைஎனல் அறியா மாயமில் ஆயமொடு*
*உயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து,*
*நீர்நணிப் படிகோடு ஏறிச், சீர்மிகக்,*
*கரையவர் மருளத் திரையகம் பிதிர,*
*நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து,*
*குளித்துமணற் கொண்ட கல்லா இளமை*
*அளிதெோ தானே! யாண்டுண்டு கொல்லோ -*
*"தொடித்தலை விழுத்தண்டு ஊன்றி, நடுக்குற்று,*
*இருமிடை மிடைந்த சிலசொல்*
*பெருமூ தாளரேம்': ஆகிய எமக்கே?"*

இதனால்தானே உமார்கய்யாமும் இப்படிக் கூறினான்!

*"வீடும் பழவீ டாகுதடா!*
*விட்டம் கூரை சுவரெல்லாம்*
*ஆடி அலைந்து விழுநாளும்*
*அண்டி அண்டி வருகுதடா!"*

புறநானூற்றுப் புலவனுக்கிருந்த ஏக்கம் உமார் கய்யாமுக்கும் இருக்கத் தானே செய்யும்? இதோ இவன் புலம்பல்!

*"வசந்த காலம் வந்திடுமோ?*
*வாச மலர்கள் பூத்திடுமோ?*
*கசிந்து பாடும் குயில்இன்னும்*
*காது குளிரச் செய்திடுமோ?*
*இசைந்த இளமைப் பருவத்தின்*
*இனிமை இனியும் எய்துவனோ?*
*அசைந்தஉள்ளம் தேறுமொழி*
*ஆரே கூற வல்லாரே!"*

இதைக் கூறவல்லார் யாரும் உண்டா என்று கேட்கிறான். நாமும் அதே கேள்வியைக் கேட்டுக் கொண்டுதானே அலைகிறோம்! காலத்தின் பொல்லாக் கொடுமையை எண்ணி ஏங்குவது தவிர வேறு வழி?

நமது கலை, இலக்கியம் எல்லாம் காலத்தின் குரல் என்பதை நாம் அறிவோம். அந்தந்தக் கால மக்கள் வாழ்வையும் போக்கையும் நம் இலக்கியங் களைக் கொண்டு தானே அறிய வேண்டியிருக்கிறது!

சங்ககாலம் பொற்காலம் என்கிறோம். எப்படி? சங்க இலக்கியங்களை வைத்துத்தானே! கொடை, போர் வெற்றி, வாழ்க்கை நெறி கடைப்பிடித்தல் போன்றவற்றில் சங்ககாலம் 'ஓகோ' வென்றிருந்தது என்பதால்தானே இவ்வளவு பாராட்டு!

ஆனால் அதேநேரத்தில் கி.பி. 3–ஆம் நூற்றாண்டு முதல் 6–ஆம் நூற்றாண்டு முடிய 400 ஆண்டு காலம் தமிழக வரலாற்றில் இருண்ட காலம் ஆயிற்றே! இது இருண்ட காலம்தான் என்பதை எந்த வரலாற்றாசிரியனும் மறுக்கவில்லையே!

எப்படி வந்தது இது? ஒரு கால கட்டத்தைப் பொற்காலம் என்கிறோம். ஒரு கால கட்டத்தை இருண்ட காலம் என்கிறோம்! காலம் ஏன் இப்படி இருவகைக் கோலம் பூணுகிறது? பிற்காலச் சோழர் காலத்தையும் 'பொற்காலம்' என்றுதான் சொல்கிறோம். சில நச்சுச் செய்திகளை மட்டும் நீக்கிவிட்டால் இராசராசன், இராசேந்திரன் எல்லாம் பொற்காலத்தை உருவாக்கியவர்கள்தான் என்பதை மறுக்க முடியாதே!

போர் வெற்றிகள் – கடல் கடந்தும் அடைந்த வெற்றிகள் – ஆட்சிமுறை – மக்கள் நல்வாழ்வு – இலக்கண, இலக்கிய வளர்ச்சி – அயலவர் எவரும் வந்து புகுந்து வாலாட்டம் போட முடியாத கட்டுக்காவல் ஆகிய இவைதானே பொற்கால அடையாளங்கள்!

அப்படியானால் என்ன பொருள்? ஆண்டவர்கள் சிலர் ஆற்றல் மிக்கவர்களாக விளங்கியிருக்கிறார்கள். அதனால் அது பொற்காலம். ஆண்டவர்கள் சிலர் கையாலாகாதவர்களாக வாழ்ந்திருக்கிறர்ர்கள். சுகபோகங் களில் ஆழ்ந்து மக்கள் நலனைப் புறக்கணித்திருக்கின்றனர். மக்கள் சொல்லொணாக் கொடுமைக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

'குடிபழி தூற்றும் கோலோர்' ஆகியிருக்கிறார்கள். அதனால்தான் இருண்ட காலம்.

நமக்கு மிக முந்திய காலத்தில் நடந்த நிகழ்ச்சிகள் என்பதால் கிடைத்த நூல்களை வைத்தும், வரலாற்றாசிரியர்களின் குறிப்புகளை வைத்தும் பொற்காலம், இருண்ட காலம் என்பனவற்றை ஒப்புக்கொண்டோம்.

இப்போது இதுபோல் நான் சொன்னால் ஒப்புக் கொள்வார்களா? இன்னார் ஆட்சிக்காலம்தான் தமிழக அரசியலில் பொற்காலம் என்பேன் நான். இதைச் சில கோடி மக்கள் ஏற்கவும் செய்கிறார்கள். ஆனால் சில இலட்சம் மக்களாவது இதை மறுக்கவும் செய்கிறார்களே! செய்தித்தாட்களின் பெருக்கம், வானொலி, தொலைக்காட்சி போன்ற விளம்பர நிறுவனங்களின் வாயிலாக உண்டாக்கப்படும் சொல்வீச்சு வலிமை ஆகிய இவையெல்லாம் உண்மையைப் பொய்யாக்குகின்றன: பொய்யை மெய்யாக்குகின்றன. உண்மையான உழைப்பாளிகளை ஒதுக்கித் தள்ளுகின்றன. போலிகளைப் போற்றிப் பாடி மகிழ்கின்றன.

எனவே பொற்காலமா இருண்டகாலமா என்று திட்டவட்டமாகச் சொல்ல முடியாத மயக்க காலமும் உண்டு என்று தெரிகின்றதல்லவா?

காலம் காட்டாறுதான். ஆனால் 'கங்கையாகி, யமுனையாகிப் புனிதப் பெயர் தாங்கவும் செய்கிறது. கூவமாகி நாறவும் செய்கிறது. காலம் அந்தந்த வேளையில் ஏற்பட்ட வரலாற்று ஏற்றம், வீழ்ச்சிக்கு ஏற்ப அரிதாரம் பூசி அழகாக மின்னவும் செய்கிறது. கரியை முகத்தில் அப்பிக் கொண்டு தலை கவிழ்ந்து ஓடவும் செய்கிறது.

அன்றிருந்த கலைகள் பல இப்போது இல்லை; பல அழிந்து போய் விட்டன. சில சிதைந்து வருகின்றன, சிற்பக்கலை பற்றி எழுதிய மயிலை. சீனி வெங்கட சாமி ஆங்காங்கே தன் வருத்தத்தை எப்படியெல்லாம் வெளிப்படுத்தியுள்ளார்?

இலக்கியங்களும் அப்படித்தானே! அழிந்தவை பல. கிடைத்த இலக்கியக் கூறுகளிலும் இப்போதுள்ள இலக்கியங்களை ஒப்பிடும்போது எத்தனை மாறுபாடுகள்!

சங்க இலக்கிய நடையில் இப்போது யாரும் பாடுவதில்லையே! பாடினால் எவனுக்கும் விளங்காது என்று முடிவு கட்டிவிட்டதால், அல்லது அது புலவர்க்கே உரியது என்று தள்ளப்பட்டதால் பொதுமக்களும் விளங்கி ஏற்குமாறு எளிய நடைக்கு வந்து விட்டோமே! 'பாஞ்சாலி சபதம்' எழுதிய பாரதி 'எளிய நடை, எளிய சந்தங்கள்' ஆகியவற்றைக் கொண்டு ஒரு காப்பியம் செய்ய வேண்டும் என்று தானே ஆசைப்படுகிறான்.

'எளிய நடையில் தமிழ் நூல் எழுதிடவும் வேண்டும்' என்று பாரதிதாசன் கட்டளையே பிறப்பிக்கிறாரே!

நடை (Style) மட்டுமா? வடிவம் (Form) மாற வில்லையா? ஆசிரியம், வெண்பா, கலி, வஞ்சி எல்லாம் மாறி சிந்து வகை கூட மாறி இன்று வடிவமே இல்லாத வெள்ளைக் கவிதைகள் (Blank Verse) புதுக்கவிதைகள் என்ற பெயரில் புறப்படவில்லையா! அவையும் நம் நெஞ்சில் இடம் பிடித்துத்தானே இருக்கின்றன.

'உலா' போன்ற இலக்கியங்களின் தகாத போக்கை ஏற்பார் இல்லை. பேதை, பெதும்பை எனப்படும் எழுவகை மகளிர் ஒரு தலைவனைக் கண்டு உள்ளம் நெகிழவிடும் ஒவ்வாப்போக்கை இக்காலத்தில் எவனும் எழுதக் கூசுகிறானே! அது அவனவன்வீட்டுப் பெண்களையும் பாதிக்கும் என்று நினைக்கின்றானே!

அரசியலில் இன்று புதிய உலாக்கள் நடக்கின்றன. என்றாலும் அவற்றைப் போற்றிப் பாடி வரவேற்காமல், மனம் புழுங்கும் நிலைதானே உள்ளது! இந்த உலா காப்பியமாவதில்லையே!

ஏன் இலக்கியத்தின் உள்ளடக்கம் (Content) கூட மாறியிருக் கின்றதே! சங்க காலத்தில் காதலும் வீரமும்! காதல் மட்டும் காலம் மாறியும் தான் மாறாமல் பாடுபொருளாகி நிற்கிறதே!

*'செம்புலப் பெயல்நீர் போல*
*அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே!'*

என்ற சங்க இலக்கிய வரியும்,

*'ஆதலினால் மானிடரே காதல் செய்வீர்*
*அஃதன்றோ இவ்வுலகத் தலைமை இன்பம்'!*

எனும் பாரதி வரியும் முரண்பாடு காட்டவில்லையே!

ஆனால் வீரம்!

காளை மாட்டை அடக்கினால்தான் வீரம்; அப்படி அடக்கியாளும் வீரனைத்தான் சங்ககாலப் பெண் மணந்து கொள்வாள்!

அப்படி அடக்க முடியாதவனை – அவள் கோணத்தில் ஒரு கோழையை இந்தப் பிறவியில் மட்டுமல்ல, அடுத்த பிறவியிலும் மணந்து கொள்ள மாட்டாளாம் அந்த மங்கை!

*'கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்*
*புல்லாளே ஆயமகள்'*

என்றுதான் 'முல்லைக்கலி' சொல்கிறது.

இன்று அத்தகைய வீரம் என்னவாயிற்று? வீரமும் இல்லை. அது ஏற்கப்படும் நிலையும் இல்லை.

வீரம் எங்கேயிருக்கிறது என்று தேட வேண்டிய நிலை?

*'வேலேடுத்துப் போர்தொடுத்த வீரம் எங்கே?*
*வெங்குருதி வாளெங்கே தோள்கள் எங்கே?*

என்று தேட வேண்டிய நிலையை அல்லவா 'காலம்' நம்முன் உருவாக்கிக் காட்டிவிட்டது!

பக்தியைப் பாடிய காலம், பண்ணையார்களைப் பாடிய காலம் எல்லாம் மாறி சமுதாய சீர்திருத்த காலம் என்றல்லவா இலக்கியத்தின் உள்ளடக்கம் மாறிப் போயிருக்கிறது!

*'காப்பாற்ற மனைவியிடம் காசைக் கேட்போன்*
*கணவன்தா னாபிச்சைக் கழுதை தானா?'*

என்று 'வரதட்சிணைக் கொடுமை'யை முரட்டுத்தனமாகத் தாக்கும் போக்குதான் இன்றைய கவிதையின் உள்ளடக்கம்.

இப்படி வடிவத்தால், உள்ளடக்கத்தால் காலம் எத்தனை மாறுபாடு களைச் செய்துவிட்டது.

நம் உவமைகூடக் காலத்தால் மாறிப் போயிருக்கிறதே!

'ஓர் அணா நாணயத்தின் விளிம்புபோல நெளிநெளியான அவளது கூந்தல்' என்று கலைஞர் ஓரிடத்தில் உவமை கூறியுள்ளார்.

'அணா' மறைந்து போய்க் காசு வந்து விட்டது. இந்தத் தலைமுறை சற்று மாறியதும் அணாவின் வடிவமும் மனத்திலிருந்து மறைந்து போகும்! பின்னால் வருபவர்கள் = – அடுத்த நூற்றாண்டில் இந்த நூலைப் படிப்பவர்கள் 'அணாவா?' என்று திகைத்து நிற்பார்கள்.

ஏன்? பெண்களின் முகத்துக்கு நிலவை ஒப்பிடாத கவிஞர் யாராவது உண்டா?

*நீலவான் ஆடைக்குள் முகம் மறைத்தே*
*நிலவென்று காட்டுகிறாய் ஒளிமுகத்தை!'*

என்கிறார் பாவேந்தர்.

நிலவைப் பார்த்துக் கட்டளையே பிறப்பிக்கிறார் வள்ளுவர்.

'நிலவே! நீ என் காதலியின் முகத்துக்கு ஒப்பாவது உண்மையானால் நீ ஒன்று செய்ய வேண்டும். இப்படி ஊர் உலகமெல்லாம் பார்க்கும்படி நீ உலா வரக் கூடாது. ஏன் தெரியுமா? என் காதலி எனக்கு மட்டும்தானே காட்சி யளிப்பாள். என் காதலியின் முகத்துக்கு ஒப்பான நீயும் அப்படித்தானே இருக்க வேண்டும்?'

எப்படி இருக்கிறது கதை!

*'மலர்அன்ன கண்ணாள் முகம்ஒத்தி யாயின்*
*பலர்காணத் தோன்றல் மதி!'*

என்கிறது குறள்.

ஆனால் காலம் நம் கைகளையல்லவா கட்டிப் போட்டு விட்டது? நிலவைப் பார்த்து உவமை சொல்லலாம் என்றால் காதலி மகிழ்வதற்குப் பதிலாகக் கனல்கக்கும் விழியோடல்லவா எழுந்து நிற்கிறாள்? ஏன்? என்ன காரணம்? ஒரு கவிஞர் எழுதுகிறார் பாருங்கள்!

*'பெண்மகளின் முகத்துக்கே உவமை உன்னைப்*
*பேசுகிறார் புலவர்; இனி அமெரிக் காவோ*
*மண்ணுலகம் விட்டேகி வானில் நீந்தி*
*வளியுலகைத் தானடக்கி நிலவாம் உன்றன்*
*தண்ணுலகைத் தானடைந்தார்; அவர்போய்க் கண்டு*
*தரும் செய்தி தனைக் கேட்டால் உன்னைப் பாடும்*
*எண்ணம் இனி எவருக்கும் வாரா தென்பேன்!*
*எம்புலவர் கற்பனைதாம் பொய்யா யிற்றே!*

*விரும்பியவள் முகம்போல விளங்கு வாயாம்!*
*வேண்டு மட்டும் கண்ணாடித் துகள்கள் உன்னில்*
*இருந்ததெனச் சொல்கின்றார்; இனிமேல் உன்னை*
*என்றனிரு கையாலே வருடு வேனோ?*
*அருமைமிகு குளிர்முகமாம்; அதிலே மீன்கள்;*
*அது நிலவின் தண்மையைப் போல் குளிரும் என்றார்*
*கருங்கல்லால் ஆனபல பாறை ஆங்கே*
*கண்டுவந்தார்; அமெரிக்கர் கொண்டும் வந்தார்*

*அன்னவற்றை முன்னிருந்து பார்த்த பின்பும்*
*அழகிமுகம் அதுவென்று சொன்னால், கேட்டே*
*என்னையவள் வெறுப்பாளே! என்ன செய்வேன்?*
*எழிற் கூந்தல் இடைமலர்ந்த முகத்தை நாங்கள்*
*துன்றுகரு முகிலுக்கும் நிலவி னுக்கும்*
*கூசாமல் சொல்லி வந்தோம்! 'நிலவில் மாந்தன்*
*சென்றுவந்தான்' என்றதுமே உணர்ச்சி வற்றிச்*
*செத்துவிட்ட நிலையிங்கே! என்ன செய்வேன்?*

*பேருலகில் அமெரிக்கா தொடங்கி விட்டால்*
*பிறகென்ன உருசியர்க்கே! அவரும் போனார்!*
*யாரு மற்ற நிலவுலகில் ஆளில்லாமல்*
*அடுத்தடுத்தே உந்தோட்டம் நடத்து கின்றார்;*
*ஆருமினி நிலவைப் போய்க் கண்ணே! பொன்னே!*
*அழகொளியே! என்றெல்லாம் கூறார்; நானும்*
*வேறுவழி யில்லாமல் தலைக விழ்ந்தேன்*
*விரித்துவிட்ட தாள்மட்டும் கிடந்த தங்கே!'*

எனவே காலம் சிலவற்றைச் சிதைத்திருக்கிறது; பலவற்றை அழித்திருக்கிறது. சிலவற்றை உருமாற்றியிருக்கிறது. 'காதல்' போன்றவற்றை மட்டும் தொடமுடியாமல் தோல்வியும் கண்டிருக்கிறது.

காலம் எத்தனை நாடுகளை, நகரங்களை அழித்து இடம் தெரியாமல் செய்திருக்கிறது! தொல்லியல் துறையைப் போய்ப் பாருங்கள்! அவர்கள்தானே பலவற்றைத் தோண்டித் தோண்டி எடுத்துத் துருவித் துருவி ஆராய்ந்து காலம் செய்த கோலத்தை நம் கண்முன் கொண்டுவந்து காட்டியிருக்கிறார்கள்?

அன்றைக்கு – மூவேந்தர் கோலோச்சிய காலத்தில் – உறையூர் எனப்படும் உறந்தை தான் சோழ நாட்டின் தலைநகரம்!

*ஊர்எனப் படுவது உறையூரே!'*

என்று எல்லோரும் பேசும் அளவுக்குப் புகழ் பெற்ற உறையூர் இன்று ஒதுங்கிப் போய் ஓரத்துக்குப்போய்விட்டது! திருச்சிராப்பள்ளியல்லவா சிறந்து நிற்கிறது!

கடல்கோள் எவ்வளவு பரப்புள்ள மண்ணை விழுங்கி விட்டது? குமரிக்கண்டம்தான் மனிதன் பிறந்த தொட்டில் (Lemuria is the cradle of mankind) என்று மேனாட்டறிஞர்களும் பாராட்டினார்களே! இன்று எங்கே அந்தக் கண்டம்? கடல்கோளால் காணாமல் போய்விடவில்லையா?

*'வடிவேல் எறிந்த வான்பகை பொறாது*
*பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்*
*குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள'*

என்ற வரிகளுள் மூழ்கிப் போன ஆறும், மலையும் எத்தனை?

அதே நேரத்தில் 'சிங்கப்பூர்' போன்ற நாடுகள் புதிதாக எழுந்து நிற்கின்றன. உலகெங்குமுள்ளவர்களை 'ஓடி வா! ஓடி வா!' என்று அழைப்பு விடுத்துக் கொண்டு அழகாக நிற்கிறது அந்த நாடு.

மனோன்மணீயம் சுந்தரனாரும் அதனால்தான் இப்படிக் கூறினார் போலும்!

*"காலம் என்பது கறங்கு போல் சுழன்று*
*மேலது கீழாய்க் கீழது மேலாய்*
*மாற்றிடும் தோற்றம் என்பது மறந்தனை"*

என்று நமக்கு உணர்த்துகிறார்.

ஆம்! உமார்கய்யாமும் இதை அழகுபடக் கூறுகிறானே!

*'கொற்ற மன்னர் முடிசூடிக்*
*கொலுவில் அமர்ந்த திருக்கோயில்,*
*முற்றுங் கூகை ஆந்தையொடு*
*முதுபேய் வாழும் காடாமே;*
*வாரி வாரிக் கொடுத்தவரும்*
*வழங்கி டாது வைத்தவரும்*
*பாரில் மண்ணாய்ப் போனதலால்,*
*பசும்பொன் னானது அறியோமே!*

*ஊரில் அவர்தம் உடலையெடுத்து*
*உரையும் நிறையும் காணாரே!*
*ஓரும் உள்ளத் துண்மையிதை*
*ஊன்றி நோக்கி உணர்வாயே.*

*வையம் பழைய அரண்மனையாம்;*
*வாயில் இரவு பகலேயாம்;*
*மெய்யின் இங்குக் கொலுவிருந்து*
*விதித்த காலம் அரசாண்டு,*

*செய்ய மணிமா முடிவீழச்*
*சென்ற மன்னர் எண்ணிலரால்;*
*ஐய! இதனை உள்ளத்தில்*
*ஆழ்ந்து காணல் அறிவாமே*
*யானும் நீயும் இறந்தபினும்,*
*இராஜ ராஜன் பட்டபினும்,*
*ஊனம் இன்றி இவ்வுலகம்*
*ஊழி ஊழி நின்றிடுமால்;*

மதுரையில் உள்ள திருமலை நாயக்கர் அரண்மனையைப் பாருங்கள்! கொற்ற மன்னர் அரசு வீற்றிருந்த கோயில் தானே! பின்னர் நீதிமன்றமாகி இன்று கண்காட்சிப் பொருளாகி, கூகை ஆந்தையெல்லாம் குடியிருக்கும் இடமாகி விட்டதே!

ஒரு வீரன் இருபது அகவை இளைஞனாக, நாற்பது அகவை நாயகனாக இருக்கும்போது வில்லேந்தி வேட்டைக்குச் சென்று விலங்குகளை விரட்டி விரட்டி அடித்திருக்கலாம். அவனே எண்பது அகவையில் வேட்டைக்குப் போகிறான். வில்லை எடுக்கிறான்; நாணை ஏற்றுகிறான். அம்பைத் தொடுக்கிறான். அம்பு நகர மறுக்கிறது. நாண் அதிரவில்லை. ஆம்! அவன் கையில் ஒரு பிடிப்பு; தசைப்பிடிப்பு; இழுத்த கை இழுத்தபடியே நின்றுவிட்டது. கொஞ்ச நேரத்தில் பிணமானான்; மரம் போலச் சாய்ந்தான். இவன் சாய்ந்து ஓய்ந்து விட்டான் என்று தெரிந்தால் ஏய்ப்புக் காட்டும் நரிகள் – ஓடிப் போகாமல் ஒளிந்து பார்த்துக் கொண்டிருந்த நரிகள் வாளா இருக்குமா? வந்து குவிந்தன. காலையும் கையையும் பிடித்து இழுக்கத் தொடங்கி விட்டன.

ஆம்!

*"வெற்றி வில்லை ஏந்திமுனம்*
*வேட்டை செய்த வேடன்கை*
*பற்றி நரிகள் இழுப்பதையும்*
*பாரில் கண்ணாற் பார்ப்போமே."*

என்கிறார் உமார்கய்யாம்.

காலம் இப்படிச் சில அதிசயங்களை நிகழ்த்தியே தீரும். இந்தியா விடுதலை அடையும் முன்பு நோய்ப் படுக்கையில் இருந்த கவியரசர் தாகூர் 'இந்தியாவைக் காலம் விடுவிக்கும்' என்றுதான் கூறினார்.

'The wheel of fate will compel the English to give up their Indian Empire' இதில் விதி என்று அவர் கூறுவது வரவிருக்கும் காலத்தின் மீது வைத்த நம்பிக்கைதான். காலம் பதிக்கும் முத்திரைகள் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் அல்லவா?

பாரி மகளிர் தம் தந்தை பாரி இருந்த போது எவ்வளவு செல்வாக்கோடு இருந்தனர். பாரி உயிரோடிருந்தபோது நிலா முற்றத்தில் நின்று கொண்டு வெண்ணிலவைக் கண்டு எப்படியெல்லாம் மனம் பூரித்திருப்பார்கள்? அப்போது நாடு அவர்கள் கையில். ஆனால் ஒரு பெரிய போருக்குப் பின்னால் மூவேந்தரும் சேர்ந்து பறம்புமலையைக் கைப்பற்றி விட்டார்கள். இன்று பாரியும் உயிரோடில்லை. இன்று அதே வெண்ணிலவைப் பார்க்கும் பாரி மகளிர்க்கு எவ்வளவு வேதனையிருக்கும்? களிப்பைக் கொட்டித் தந்த காலம் இன்று வேதனையை மலைபோல் குவித்து அதில் இவர்களை வேக வைத்து விட்டதே!

புறநானூற்றுப் பாடலில் அவர்கள் புலம்பலைக் கேளுங்கள் :

*'அற்றைத் திங்க ளவ்வெண் ணிலவின்*
*எந்தையு முடையேமெங் குன்றும் பிறர்கொளார்*
*இற்றைத் திங்க ளிவ்வெண் ணிலவின்*
*வென்றெறி முரசின் வேந்தரெம்*
*குன்றுங் கொண்டார்யா மெந்தையு மிலமே.'*

இவ்வளவிருந்தும், எத்தனையோ காலம் உருண்டோடியும் அன்றும் இன்றும் நம்மை வாட்டிக் கொண்டிருக்கும் வறுமை மட்டும் மாறவில்லையே! வியப்புத்தான்.

*நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்*
*யாதொன்றும் கண்பாடு அரிது*

என்றார் வள்ளுவர். நெருப்பில் எவரும் தூங்கிட முடியாது. இது தெரிந்த உண்மைதான். ஆனால் வள்ளுவர் கூறுகிறார், "நெருப்பில் கூடத் தூங்கி விடலாம்; ஆனால் வறுமையில் எவனும் தூங்க முடியாது' என்று.

காலம் இந்த வறுமையைப் போக்கியதா? இல்லையே! பொற்காலமாகிய சங்க காலத்திலும் வறுமையின் படப்பிடிப்பு மாறவில்லையே!

'சிறுபாணாற்றுப்படை' வறுமையை என்ன அழகாகப் படம் பிடிக்கிறது!

புலவர் வீட்டில் வறுமை வாட்டுகிறது. அடுப்பெரிந்தால் தானே வயிறு நிரம்பும்? அதற்கு வழியில்லாதபோது அந்த அடுப்படியில், அடுக்களையில் ஆள் நடமாட்டமே இல்லாமல் போய் விட்டது. ஆள் நடமாட்டமில்லாத இடத்தைக் கருவுற்ற பெண்நாய் பிடித்துக் கொண்டு விட்டது. வீட்டாரும் அதை வெளியே விரட்டவில்லை. விரட்ட வேண்டிய தேவை ஏற்படவில்லை. நாய் குட்டி போட்டு விட்டது. குட்டிகள் எல்லாம் பாலுக்காகத் தாயின் மடியை முட்டிமுட்டிப் பார்க்கின்றன. ஆனால் பால் சுரக்கவில்லை. நாய்க்குச் சாப்பாடு இல்லை. அதுவே பட்டினி. பின் எப்படிப் பால் ஊறும்? வீட்டிலேயே பட்டினி. பிறகு எப்படி நாய்க்குச் சோறு போடுவார்கள்?

இதன் விளைவு பாலுக்காக ஏங்கும் குட்டிகள் தாய் நாயின் மார்பினைப் பிடித்து இழுக்க அந்தத் துன்பம் தாங்காது தாய் நாய் ஈனக்குரலில் புலம்பும் ஒலி அந்த வீட்டில் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறது.

இதுதான் வறுமையின் கொடுமை. இது சங்ககாலத்தில் இருந்ததாக இலக்கியம் படம்பிடிக்கிறது.

*"திறவாக் கண்ண சாய்செவிக் குருளை*
*கறவாப் பால்முலை கவர்தல் நோனாது*
*புனிற்று நாய் குரைக்கும் புல்லென் அட்டில்"*
*என்கிறது சிறுபாணாற்றுப்படை.*

சங்ககாலத்தில் உள்ள வறுமை எங்கள் காலத்திலாவது மாறியிருக்கிறதா? இல்லையே!

ஐந்தாண்டுத் திட்டங்கள், அதற்குக் கோடிக்கணக்கான தொகை ஒதுக்கீடு, திட்டங்களைச் செயற்படுத்த நிர்வாக இயந்திரங்கள், பல்வேறு மாநிலங்களின் வரவு செலவுத் திட்டங்கள், பல கோடி உருபாவில் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள் – ஏழை எளிய மக்கள் ஏற்றம் பெற எண்ணற்ற இலவசத் திட்டங்கள், இலவச வீடுகள், மானிய விலையில் அரிசி என்றெல் லாம் என்னென்னவோ முயற்சிகள். எல்லாம் என்ன ஆயின? புதிய அர்சத் மேத்தாக் களைத்தான் நமக்கு அறிமுகம் செய்து வைத்திருக்கிறார்கள்.

வறுமை மாறவில்லை. இவ்வளவு காலம் கழித்து 'வறுமைக்கோடு' எனும் ஒரு கோட்டையே நம் பொருளாதாரப் புலிகள் கண்டுபிடித்துத் தந்துவிட்டார்கள்.

நம் காலக் கவிஞன் மட்டும் வறுமையைப் படம் பிடிக்க மாட்டானா என்ன? இதோ சுருக்கமாகப் புதுக் கவிதையில் சொல்லிவிடுகிறான். நறுக் கென்று தைப்பது போல் நாலைந்து சொற்களில் சொல்லிவிடுகிறான்.

*"எங்கள் நாட்டு ஏழைப் பெண்களுக்கு*
*அவர்கள்*
*கருவுறுகிற காலத்தில் மட்டும்தான்*
*வயிறு நிரம்புகிறது"*

எவ்வளவு 'பச்சையான' உண்மை பாருங்கள்!

இப்படி, எவ்வளவு காலம் மாறினாலும் 'வறுமை' மட்டும் மாறாமல் வாழ்ந்து கொண்டு நம்மை வாட்டிக் கொண்டுதான் இருக்கிறது. இதில் காலத்தின் தாக்கம் எதுவும் இல்லை. ஒருவகையில் பார்த்தால் காலம் தோல்வியடைந்திருக்கிறது என்றுகூடச் சொல்லலாம்.

இவற்றையெல்லாம் நினைத்ததும் மனம் பகீர் என்கிறது. நம் இளமைக்கு அகவை இவ்வளவுதானா? ஈளை கட்டி, இருமல் வந்து தண்டூன்றித் தடுமாறத் தான் போகிறோமா? நம் உடம்பின் பளபளப்புக் குன்றி ஒய்ந்து போகத்தான் போகிறோமா?

ஆம்! இதுதான் நடக்கப் போகிறது. நீங்கள் நினைப்பது உண்மைதான்.

என்றாலும் தோழர்களே! இப்படி ஆகப் போகிறது என்பது தெரிவதால் ஒரு வெறுப்பு நிலைக்கு வந்து விட வேண்டாம். உண்மையைத் தெரிந்து கொண்டு இருக்கும் காலத்திற்குள் நல்வாழ்வு வாழ்ந்துவிட முயல வேண்டும். அதுதான் நாம் செயத்தக்க கடமை.

வாழ்வில் இரண்டு வகையான அணுகுமுறைகள் உண்டு. ஒன்று நம்பிக்கைப் போக்கு (Optimism). எத்தனை துன்பம் வந்தாலும் தடங்கல் நேர்ந்தாலும் இறுதி இலக்கினை அடைந்தே தீர்வோம் எனும் நம்பிக்கையோடு செயற்படுவது ஒரு வகை. இந்த நம்பிக்கைதான் மனிதனை வாழ வைக்கிறது.

உமார் கய்யாம் இத்தகைய நம்பிக்கைப் போக்கு கொண்டவன்தான். அதனால்தான்,

*"இருக்கும் காலம் சிறிதேயாம்*
*இதற்குள் இன்ப வாழ்வினையாம்*
*பெருக்குமளவு பெருக்கிடு வோம்"*

என்று நம்பிக்கை தோன்றக் கூறுகிறான்.

தன் காதலியைப் பார்த்து எவ்வளவு நம்பிக்கையோடு பேசுகிறார் பாருங்கள்!

*"அன்பே! யானும் நீயும்இசைந்து*
*அயலில் எவரும் அறியாமல்,*
*வன்பே உருவாம் விதியினையும்*
*வளைத்துள் ளாக்கி முயல்வோமேல்*

*துன்பே தொடரும் இவ்வுலகைத்*
*துண்டு துண்டாய் உடைத்துப்பின்*
*இன்பே பெருகி வளர்ந்திடு மோர்*
*இடமாய்ச் செய்ய இயலாதோ?"*

சரியான முயற்சி எடுத்தால் ஊழையும் உப்பக்கம் கண்டு விரட்டி விட்டு, துன்ப உலகை உடைத்து நொறுக்கி இன்ப உலகை உருவாக்கி விடலாம் என்பதுதானே நமக்கு வேண்டிய அசைக்க முடியாத நம்பிக்கையாக இருக்க வேண்டும்!

*"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்*
*தாழாது உஞற்று பவர்"*

எனும் குறள் 'நம்பிக்கை', 'நம்பிக்கை' என்றுதானே கூவுகிறது!

மற்றோர் அணுகுமுறையும் உண்டு. அதுதான் நம்பிக்கையிழந்த போக்கு (Pessimism). 'காயமே இது பொய்யடா; வெறும் காற்றடைத்த பையடா' என்று கூறிக் கொண்டே வாழ்வை உணராமல் பரதேசிக் கோலம் பூண்டுவிடுவது.

காயம் பொய் என்பது தெரியும்; அதற்காக என்ன? அன்றாடம் குளித்து அழகுபட உடுத்தி, பிறர்பார்த்து அயரும்படி தோற்றமளிப்போமே! அது நமக்கு மகிழ்ச்சி! பிறர்க்கும் மகிழ்ச்சியல்லவா? அழகின் சிரிப்பை அனுபவிப்போமே! இந்த எண்ணம் வாராவிட்டால் மனம் சோர்வடைந்துவிடும்; உடல் சுமையாகி விடும்; மனம் வெறுப்பின் எல்லைக்கே போய்விடும்.

காலத்தின் வேகத்தை உணர்ந்து நம்பிக்கையோடும் ஏதாவது ஒன்றைச் சாதித்துவிட வேண்டும் எனும் வெறியோடும் செயலாற்றுவோம். இதை உணரும் போது ஒன்றை நாம் மறந்து விடக்கூடாது. நம் வாழ்வில் ஒவ்வொரு நொடியும் நம் கல்லறை நோக்கி எடுத்து வைக்கப்படும் ஒவ்வோர் அடியாகும்.

"Every second is a step towards our graveyard" என்பது நினைவிருக்கட்டும்.

காலையில் பூத்துக் குலுங்கி நம் கண்களுக்கு விருந்தான மலர்கள் மாலையில் சுருங்கி, உலர்ந்து, சுருண்டு விழுந்து கிடக்கவில்லையா!

*"புலர்ந்து விடியும் பொழுதினிலே*
*பொய்கைக் கரையஞ் சோலையிலே,*
*மலர்ந்து நல்ல மணம்வீசி*
*மகிழும் மலர்கள் ஆயிரமாம் :*
*உலர்ந்து வாடிச் சேற்றினிலே*
*உதிருமவையும் ஆயிரமாம்;*
*கலந்த உலக வாழ்வைஇதில்*
*கண்ணாற் கண்டு தெளிவாயே."*

என்றானே உமார் கய்யாம்!

"Time's fatal wings do ever forward fly
so every day we live, a day we die"

என்கிறார் காம்பியன் (Compion).

தமிழ் அறிஞர்களும் நமக்கோர் உண்மையைப் புலப்படுத்திச் சென் றிருக்கிறார்கள்.

இரவு தூங்கச் செல்கிறோம். பலர் நன்றாகவே தூங்கி விடுகிறார்கள். அடுத்தவனைத் தூங்கவிடாத அளவுக்குக் குறட்டை ஒலியுடன் கூடிய தூக்கம். அதனால்தான் ஆங்கிலத்தில் 'Sound sleep' என்றார்கள் போலும்! தூக்கமே வாராமல் புரண்டு புரண்டு தொல்லைப்படுபவர்களும் இருக்கிறார்கள்.

எப்படியிருந்தாலும் காலையில் படுக்கையிலிருந்து எழுகிறோம். எழுந்ததும் என்ன செய்ய வேண்டும்? பலரும் பலவகையாகக் கூறுகிறார்கள்; பலரும் பல பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக்கிறார்கள். பல் துலக்காம

லேயே காப்பி குடிப்பவர்கள் (Bed coffee), படுத்துக் கொண்டே செய்தித்தாள் படிப்பவர்கள், காலையில் சிறிது தொலைவு நடந்து வரச் (walking) செல்பவர்கள்; எழுந்து மொட்டை மாடிக்குச் சென்று உடற்பயிற்சி செய்பவர்கள்; காப்பி குடித்ததும் எழுத உட்கார்ந்து மளமளவென்று எழுதித் தள்ளுபவர்கள்; தேங்கிக் கிடந்த கோப்புகளில் சிலவற்றை மடமடவென்று பார்த்து முடித்துக் கையொப்பம் இடுபவர்கள்; வெளியூரில் உள்ள அலுவலகத் துக்கோ பள்ளிக்கோ போவதற்காகக் காலைக் கடன்களை அசுரகதியில் முடித்து அலறிப் புடைத்துக்கொண்டு ஓடுபவர்கள்; காலையில் எழுந்து தேநீர்க் கடையில் போய் உட்கார்ந்து கொண்டு வெட்டி அரட்டை அடிப்பவர்கள்.

இப்படி எத்தனையோ வகை!

ஆனால் ஒருவர் நாம் காலையில் எழுந்ததும் என்ன செய்ய வேண்டும் என்கிறார் தெரியுமா?

காலையில் எழுந்து உட்கார்ந்ததும் படுக்கையில் இருந்தபடியே 'ஓ' வென்று உரக்கக் கூவி மனம்விட்டு அழவேண்டும். அதன்பிறகு எழுந்து கடமையைச் செய்ய வேண்டும். ஏன் அழ வேண்டும்? ஆம்! நாம் நம் வாழ்நாளில் யார்யாரோ மறைந்ததற்கெல்லாம் அழுது தீர்த்திருக்கிறோம். சிலபேருடைய மறைவு குறித்து இப்போது நினைத்தாலும் அழுது கொண்டிருக்கிறோம். இப்படிப் பிறர்க்காக அழும் நாம் நமக்காக அழ வேண்டாமா?

உண்மைதானே! 'நேற்று' என்ற ஒருநாள் நம் வாழ்நாளில் தீர்ந்து போய்விட்டது. அதாவது ஒருநாள் நம் வாழ்வில் செத்துப் போய்விட்டது. ஆம்! நேற்றை நாம் இழந்திருக்கிறோம். எனவே, நாம் ஒரு நாள் இழப்பிற்காக நம் வாழ்வில் ஒரு நாள் போய்விட்டதற்காகக் காலையில் எழுந்து நமக்கு நாமே அழுது தீர வேண்டும் என்கிறார்.

*"நாளும் நாம் சாகின்றோமால்*

*நமக்குநாம் அழாததென்னே!*

என்கிறார். எவ்வளவு பெரிய உண்மை!

**9–11–92** இல் இதை எழுதிக் கொண்டிருக்கிறேன். **8–11–92** என் வாழ்வு பறிபோய்விட்டது. இனி இந்த நாள் என் வாழ்வில் என்றுமே திரும்ப வாராது. **8–11–93** வரலாம். **8–12–92** வரலாம். **9–11–93** வரலாம். ஆனால் **8–11–92** – அவ்வளவுதான்! போனது போனது தான். வரவே வாராது! நான் இதற்காக – இந்த இழப்புக்காக அழுதுதானே தீரவேண்டும்.

திரும்பப் பெற முடியாத மூன்று உண்டு.

ஒன்று – எய்து விட்ட அம்பு

இரண்டாவது – பேசி விட்ட பேச்சு

மூன்று – இழந்து விட்ட நேரம்.

எய்துவிட்ட அம்பையாவது அது செல்லும் வெகு தொலைவு வரை நடந்து சென்று தேடி அலைந்து கண்டுபிடித்துக் கொண்டு வந்து விடலாம். அதனால் அதைக் கொஞ்சம் மாற்றி – இந்தக் காலத்துக்கும் பொருந்தும்படி துப்பாக்கியிலிருந்து வெளியேறிவிட்ட குண்டு என்று சொன்னால் பொருத்த மாக இருக்குமல்லவா! ஒரு குண்டு வெடிக்கப்பட்டால், துப்பாக்கியிலிருந்து வெளியேறி விட்டால் அதைத் திரும்பப் பெற முடியாதல்லவா!

அடுத்தது பேசிவிட்டபேச்சு!

மூன்றாவது இழந்து விட்ட நேரம்! போனது போனதுதான்! காலத்தை இழந்து விட்டால் திரும்பப் பெற முடியாது. எனவே, இதனை உணர்ந்து செயற்படுங்கள். உணரத் தவறிக் காலத்தை இழந்து விட்டுப் பிற்காலத்தில் வந்து நின்று கதறுவதில் பயனில்லை.

வாழ்க்கை எனும் பறவை வேகமாகப் பறந்து விடும். பறவை ஒரு மரக் கிளையில் அமர்ந்து கொண்டிருக்கிறது. நீண்டநேரம் அப்படியே அமர்ந்து

இருக்கும் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் நாம் இப்படி நினைத்துக் கொண்டிருக்கும் போதே வாழ்க்கை எனும் பறவை பறக்கத் தொடங்கி விடுகிறது.

உமார் கய்யாம் கவிதையைத் தமிழில் தந்த கவிமணி இப்படிக் கூறுகிறார்:

*"தேரா வாழ்வின் பறவை இனும்*
*செல்லும் தூரம் சிறிதேயாம்!*
*பாராய் பாராய் பறவை அதோ*
*பறக்கச் சிறகும் விரித்ததடா!"*

என்கிறார். இதையே பிட்செரால்டு (Fitzerald) கூறும்போது

"The bird of time has
but a little way to fly!
And Lo! The bird is on the wing!"

என்று அழகுபடக் குறிப்பிட்டார்.

எனவே, இழந்து விட்ட நேரம் திரும்ப வாராது எனும் நினைப்பு எப்போதும் நெஞ்சில் இருக்கட்டும். அதற்காக அது நம் கைவசமே நிற்காது என்பதும் நினைவில் இருக்கட்டும். எனவே ஓடி விடும் காலத்தில் நம்மால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு செய்து விடுவோம்! நம்மால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு வாழ்ந்து காட்டுவோம்!

All past time is lost time; the very day which we are now spending is shared between ourselves and death. (Seneca)

'கடந்த காலம் என்றாலே அது இழந்த காலம் தான். இன்று நாம் செலவிட்டுக் கொண்டிருக்கும் இந்த நாள் கூட நமக்கும் சாவுக்கும் இடையிலே பங்கிட்டுக் கொள்ளப்படத் தான் போகிறது' என்கிறார் செனாக்கா.

நாட்டு விடுதலை வேண்டும் என்று நம்பிக்கையோடு பாடிய பாரதி கூடக் காலம் ஓடிப் போய்விட்டால் கைக்கு வாராது என்பதை அழகுபடக் கூறுகிறார்.

*"சென்றதினி மீளாது மூடரே! நீர்*
*எப்போதும் சென்றதையே சிந்தை செய்து*
*கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து*
*குமையாதீர்! சென்றதனைக் குறித்தல் வேண்டாம்*
*இன்றுபுதி தாய்ப் பிறந்தோம் என்று நீவிர்*
*எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு*
*தின்றுவிளை யாடியின்புற் றிருந்து வாழ்வீர்;*
*தீமையெலாம் அழிந்துபோம் திரும்பி வாரா."*

எனவே, வாழ்வில் கிடைத்தற்கரியதாகத் தெரிவது காலம்தான். சிலர் 'காலம் பொன் போன்றது; கடமை கண் போன்றது' என்று எழுதி வைத்துக் கொண்டு உணர்ந்து செயற்படுகின்றனர். ஆனால் காலம் பொன்னிலும் பல மடங்கு உயர்ந்தது என்பதை மறந்து விடக்கூடாது. எனக்குத் தெரிய ஒரு பவுன் தங்கம் ரூ. 15/– ஆக இருந்ததைப் பார்த்திருக்கிறேன். இன்றோ ஒரு பவுன் ரூ. 3000–க்கும் மேல், என்றாலும் பொன்னை வாங்கி விடலாம். ஆனால் பொழுதை வாங்க முடியாதே; இதற்கொரு சீனப் பழமொழியே இருக்கிறது.

'ஓர் அங்குலம் பொன் கொடுத்தாலும் ஓர் அங்குல நேரத்தை வாங்க முடியாது' என்கிறது அது. (An inch of time cannot be bought by an inch of gold).

இவ்வளவு உண்மைகள் காலத்துக்குள் அடங்கிக் கிடக்கின்றன. காலத்தின் அருமை பலர்க்கும் தெரிகிறது. ஆனாலும் பலர் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. "பத்தோடு பதினொன்று அத்தோடு இது ஒன்று" என்று கூட்டத்தோடு கூட்டமாக அலைந்து அழிகிறார்கள். வாழ்க்கையில் எந்த இலக்கும் இன்றி வெறும் வாழ்க்கை வாழ்பவர்கள் கூறும் கூற்றுத்தான் "பொழுது போகவில்லை" என்பது. நாம் 'அய்யோ! காலம் ஓடிக் கொண் டிருக்கிறதே!' என்று பதற்றத்துடன் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால்

பலர்க்குப் பொழுது போகவில்லையாம். வீட்டில் குட்டி போட்ட பூனைபோல் இங்கும் அங்கும் உலாவு வார்கள். படுக்கையில் படுத்துக் கொண்டு புரண்டு புரண்டு எழுவார்கள். பிறகு வெளியே புறப்பட்டு விடுவார்கள். எங்கே போகிறோம்? தெரியாது. ஏன் வெளியே கிளம்பினோம்? சொல்ல முடியவில்லை. எல்லாவற்றுக்கும் ஒரே காரணம்தான். 'பொழுது போகவில்லை'. அவர்கள் அப்படிப் போகும்போது யாராவது எதிர்ப்பட்டு "எங்கே இப்படி?" என்று கேளுங்கள். எந்தத் தயக்கமுமின்றி ஒரு பதில் வரும். "சும்மா போகிறேன்" என்று. இந்தச் சும்மா பேர்வழிகள்தான் நாட்டைக் கெடுப்பவர்கள். இப்படி அலையும் வெட்டிக்கூட்டம் நிறையவே இருக்கிறது.

தாயத்து விற்பவனின் வாயைப் பார்த்துக் கொண்டே நிற்கும் வெட்டிக் கூட்டம். கீரி, பாம்பு சண்டை பார்ப்போம் என்று கடைசிவரை காத்திருந்து, சட்டைப் பையைக் காசோடு சேர்த்து இழந்து விட்டு வரும் வெட்டிக் கூட்டம், இப்படி எத்தனையோ கூட்டத்தை வருணித்துக் கொண்டே போகலாம். இவர்களுக்கும் காலம் பற்றிய சிந்தனைக்கும் கடுகளவு தொடர்பும் இல்லை. இவர்களில் அறிமுகமான நாலைந்து பேர் சேர்ந்தால் அதுதான் 'அரட்டை' ஆகி விடுகிறது. இரு நண்பர்கள் வெளியூர் சென்று நினைத்த வேலை முடிவதற்காக இரண்டொரு நாள் தங்கியிருக்கும் போது 'அரட்டை' அடித்தால் குற்றமில்லை. ஆனால் அன்றாடம் ஏதாவது ஓர் இடத்தில் சந்தித்து அரசியலில் தொடங்கி அடுத்து வரும் திரைப்படம் வரை பல மணி நேரம் அரட்டை அடிக்கும் கூட்டத்தை என்னென்பது? மேலும் தேவையில்லாததை, நம் வாழ்க்கைக்கு எந்த வகையிலும் பயன்படாதவற்றையெல்லாம் தேடி அலைந்து காலத்தை வீணாக்குகிறோம்.

உமார் கய்யாம் இதனை உணர்ந்து கூறுகிறான் :

*"இதற்கும் அதற்கும் எத்தனைநாள்*
*இரவும் பகலும் சண்டை? அப்பா!*
*புதர்க்குள் இல்லாக் கனிதேடிப்*
*புற்றில் நாக மணிதேடிப்*
*பதைத்து வீழ்ந்து பயனுண்டோ?"*

என்று கேட்கும்போது நாம் பல வகையிலும் பயனற்ற வெட்டிக் கூட்டமாக இருந்திருக்கிறோம் என்பது விளங்கி விடுகிறது.

வெட்டிக் கூட்டம் என்றதும் மற்றொன்றும் நினைவு வருகிறது. நமது பொதுக்கூட்டங்களில், இலக்கிய மற்றும் சிறப்புக் கூட்டங்களில் ஏற்படும் கால விரையம் தான் அது.

கூட்டச் சுற்றறிக்கையில் 'மாலை 7 மணி அளவில்' என்று போட்டு விடுவார்கள். ஆனால் கூட்டம் 9 மணிக்குத் தான் தொடங்கும். இதில் இன்னொரு ஏமாற்றும் இருபுறமும் நடக்கிறது. கூட்டம் நடத்துகிறவன் என்ன நினைக் கிறான்? 7 மணிக்கு என்று போட்டால்தான் எட்டு மணிக்காவது ஆள் வரும் என்று நினைக்கிறான். கூட்டம் கேட்பவன் என்ன நினைக் கிறான்? 7 மணிக்கு என்றுதான் போடுவார்கள்; ஆனால் எட்டு மணிக்குத் தான் தொடங்குவார்கள் என்று நம்புகிறான். இரண்டு பேருமே 'ஏழுமணி' என்று போட்டிருப்பதை நம்புவதில்லை. அது ஒப்புக்காகத் தான் என்று நினைக்கிறார்கள்.

இப்படி ஒருவரை ஒருவர் ஏமாற்றிக் கொள்வதை விடச் 'சரியாக 8 மணிக்கு' என்று போட்டுவிட்டுக் கூட்டம் நடத்தும் பழக்கம் என்றுவரப் போகிறதோ தெரியவில்லை. இதில் இன்னொரு கூத்து என்னவென்றால் '7 மணிக்கு' என்று சுற்றறிக்கையில் பார்த்து விட்டு 7 மணிக்கே வந்து உட்காரு கிறான் பாருங்கள்! அந்த ஒழுங்கானவன் தண்டிக்கப்படுகிறான். தண்டிக்கப் பட்டுத் தண்டிக்கப்பட்டு நாளடைவில் அவனும் நம்மைப் போலவே ஆகி விடுகிறான்.

சில சுற்றறிக்கைகளில் இடம் பெற்றுள்ள பெயர்களை 'அவர்களே!' 'அவர்களே' என்று விளிப்பதிலேயே காலம் கடந்து விடுகிறது. கூட்டம் கேட்பவனுக்குக் கடுப்பேறி விடுகிறது. ஒருநாள் ஒரு பொதுக்கூட்டத்தில் நான் பேசும்முன் சுற்றிக்கையில் அச்சிடப்பட்ட மொத்த பெயர்களையும் எண்ணிப் பார்த்தேன். மொத்தம் 221 பேர் அதில் இடம் பெற்றிருந்தனர். இதில் குறைந்தது 30 பேராவது பேசியிருப்பார்கள். 30 பேரும் 30 பேரையும்

'அவர்களே! அவர்களே!' என்று விளித்து முடித்திருந்தால் இதில் விரயமாகும் நேரம் எவ்வளவு என்று சிந்தித்தோமா? கீழே இருந்து கூட்டம் கேட்பவன் மேலிருந்து நாம் அறுத்துக் குவிப்பதாக எண்ணி அயர்ந்து போகமாட்டானா? கடைசியில் வரும் நல்ல பேச்சினைக் கேட்பதற்காகக் காத்திருப்பவனை ஒரேயடியாகச் சோர்வடையச் செய்து சுருண்டு படுக்கவைத்துவிட்டால் கடைசிக் கட்டத்தில் அவன் உணர்ச்சி குன்றியிருக்கமாட்டானா?

'காலம்' எப்படிக் கொலைக்காளாகிறது என்பதைக் கண்ணாரக் கண்டு அனுபவிப்பவன் அல்லவா நான்? அதனால்தான் இதைக் கூற நேர்ந்தது.

'காலத்தில் செய்தல்' (Punctuality) என்ற அரிய பழக்கம் மேனாட்டவர் களிடம் இருக்கிறது. இந்தியாவில் அதிலும் குறிப்பாக தமிழகத்தில் இந்தப் பழக்கம் ஒரு சிலரிடத்தில் மட்டும்தான் வாழ்கிறது, பெரும்பாலும் 'Punctuality' என்பதற்கு மதிப்பே இல்லை. அதனால்தான் 'Indian Punctuality' என்ற புதுத் தொடரே உருவாகியிருக்கிறது. 'Indian Punctuality' என்றால் காலம் கடந்து எதையும் செய்யும் கெட்டபழக்கம் என்று தெளிவுபடுத்தி விட்டோம். இந்த நிலையில் சுவர்களில் மணிப் பொறிகள் (Wall Clocks); ஒவ்வொருவர் கையிலும் மணிப்பொறி (wrist watch); மணிப்பொறி கட்டாதவன் யார்? படிக்காதவன், மணிபார்க்கத் தெரியாதவன் கூடக் கட்டியிருக்கிறான். 'மணி என்ன? என்று கேட்டால் 'நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்' என்று கையைத் தூக்கிக் காட்டுபவனும் இருக்கிறான்.

படித்து நாகரிகம் படைத்த நாம் அனைவரும் மணிப் பொறி (கடிகாரம்) கட்டியிருக்கிறோம். ஆனால் அந்த நேரத்தைப் பார்த்து அதன்படி செயல்களை ஆற்றுகிறோமா? கையில் அதை ஓர் அழகுப் பொருளாகக் கட்டியிருக்கி றோமே தவிர, காலத்தின் அருமையை உணர்ந்து நடக்கிறோமா?

இதையெல்லாம் பார்க்கும்போது 'கடிகாரத்தைக் கழற்றி எறியுங்கள்!' என்று கத்தத்தான் தோன்றுகிறது.

8 மணிக்கு வண்டி புறப்படும் என்று தெரிந்தும் கால் மணி நேரம் முன்னதாக வந்து பரபரப்பில்லாமல் இடத்தில் வந்து அமர்ந்து பயணம் செய்வதை விட்டுவிட்டு, வீட்டிலிருந்து 'அவக்!' 'அவக்!' என்று புறப்பட்டு வண்டி போய்க் கால்மணி நேரம் கழித்து வந்து நிற்கும் பயணிகள் எத்தனை பேர்? அப்போதாவது தங்கள் தவற்றை உணர்வார்களா? அதுதான் இல்லை.

கேளுங்கள். 'வண்டி போய்விட்டது' என்று வாய் கூசாமல் சொல் வார்கள். 'வண்டியை விட்டுவிட்டேன்' என்று மனதாரச் சொல்லமாட்டார்கள்.

இவர்கள் இப்படித்தான் வாழ்க்கையில் எத்தனையோ வண்டிகளைத் தவறவிடப் போகிறார்கள்.

நிகழ்ச்சிகளில் காலந்தவறாமையைக் கடைப்பிடிப்பதில் பலர் வழிகாட்டியாக இருக்கிறார்கள். எனக்குத் தெரிய, உலகம் அறிந்த தலை வர்கள் பலர் எதையும் காலத்தில் செய்ய வேண்டுமென்று நினைப்பவர்கள். நிகழ்ச்சி களில் உரிய நேரத்தில் பங்கு பெறுவார்கள். தமிழ்ப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் திரு. வ.அய். சுப்பிரமணியம் எதையும் காலத்தில் செய்பவர் என்பதை அறிவேன். அண்ணா பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் திரு. வா.செ. குழந்தைசாமி இதில் மிகவும் கருத்தாக இருப்பார். நானும் அவரும் சந்தித்த முதல் நிகழ்ச்சியே 'காலத்தின் அருமை'யை உணர்த்துவது தான். அவர் மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தலைவரானதும் அவர்க்கும் ஆட்சிக்குழு உறுப்பினர்க்கும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் ஒரு பாராட்டு விழா. விழா மாலை 6 மணிக்கு. அவர் 5.50–க்கு வந்து விட்டார். ஆட்சிக்குழு உறுப்பினர்களில் வேறு எவரும் 6 மணிக்குக்கூட வரவில்லை. பாராட்டுரை வழங்குபவர்களில் நானும் ஒருவன், கல்லூரி ஆசிரியர்கள் சார்பில் நான் 5.55க்கு அரங்கில் இருந்தேன். முதன்முதலாக அவரைச் சந்தித்து உரையாடியபோதே 'காலத்தில் வருகை தந்தவர்கள்' என்ற உணர்வுதான் இருவரிடமும் மேலோங்கி நின்றது. அந்த உணர்வுதான் இன்றும் நிலைத்து நிற்கிறது.

பறம்புக்குடியில் நான் பணியாற்றியபோது ஆ. வை. மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் திரு. சங்கர நாராயணன் பல வழிகளில் வழிகாட்டி யாக இருந்தார். பள்ளி இலக்கிய மன்றத்தின் சார்பில் நிகழ்ச்சி ஏற்பாடாகி இருக்கும். நிகழ்ச்சியை பிற்பகல் 3 மணிக்குத் தொடங்கினால்தான் பிள்ளைகளை 5 மணிக்குள் வீட்டுக்கு அனுப்ப முடியும். அதுவும் பெண்கள் அதிகம் பயிலும் பள்ளி. 3 மணி நிகழ்ச்சி என்றால் அனைத்து வகுப்பு மாணவ மாணவியரும் திறந்தவெளி அரங்கத்தில் 2.45–க்கே உட்கார வைக்கப்படு வார்கள். மர நிழலில் இருப்பவர்கள் போக மற்றவர்கள் வெயில் கொடுமை தாங்க முடியாமல் நெளிந்து கொண்டிருப்பார்கள். உடற்பயிற்சி ஆசிரியர் களும் வாயில் ஊதலும் கையில் பிரம்புமாக இங்குமங்கும் நடந்து மிரட்டி அதட்டி வைத்திருப்பார்கள். ஒருவகை இராணுவக் கட்டுப்பாடு தான்.

இந்த நிலையில் ஒப்புக் கொண்ட பேச்சாளர் உரிய நேரத்தில் வந்திருக்க மாட்டார். பிள்ளைகளோ காத்துக் கிடக்கிறார்கள். அனைவரும் கேட்க அணியம்! பேசுபவர் வரவில்லையே! 3 மணி ஆகிவிட்டது. பேச்சாளர் வரவில்லை. தலைமை யாசிரியர் சற்றும் தயங்க மாட்டார். கூட்டத்தில் அமர்ந்திருக்கும் என்னைக் கூப்பிட்டனுப்புவார். ஒரு நொடியில் மேடைக்கு வருவோம். அவர் முன்னுரை பேசுவார்; வரவேற்புரை நிகழும்; என்னைப் பேசச் சொல்லி விடுவார். சிறப்புப் பேச்சாளர் வரவில்லையே என்று கிஞ்சிற்றும் கவலைப்படாமல் கூட்டத்தை உரிய காலத்தில் தொடங்கி நடத்திவிட வேண்டும் என்று எங்களை மேடையேற்றிய அவரது நடவடிக்கை இன்றும் நெஞ்சில் நிழலாடுகிறது. 'காலம் கடைப்பிடித்தல்' என்பது இதுதானோ?

'ஐயர் வரும்வரை அமாவாசை காத்திராது' என்ற பழமொழி இதன் மறுவடிவம் தானோ!

உலகமெலாம் ஒப்புக்கொண்ட உண்மை காலத்தை மூன்றாகப் பிரிப்பது. இறந்தகாலம், எதிர்காலம், நிகழ்காலம். இறந்தகாலத்தை நாம்

நன்கு பயன்படுத்தி வளர்ந்து வந்திருக்கிறோமா? அரையும் குறையுமாகப் பாழடித்து விட்டு இப்போது வருந்திக் கொண்டிருக்கிறோமா? என்பதெல்லாம் நம் மனச் சான்றுக்குத்தான் தெரியும். இயலாத காரணம், அறியாத காரணம் என்று பல காரணங்களால் நம் இறந்தகாலம் பல கசப்புகளை மனத்தில் தோற்றுவித்துக் கொண்டே இருக்கும்.

*'எல்லையறு ஞாலத்து வாழ்வு தன்னில்*
*இயலாமல் அறியாமல் பன்னாள் போக்கித்*
*தொல்லையிலா நல்வழிக்காய்த் துடிக்கும் என்னைச்*
*சுடரொளியில் இட்டழைத்துச் செல்வாய் நாளே!'*

என்று காலத்தை வேண்டி நான் எழுதிய கவிதை என் பழைய நாட் குறிப்புகளின் முகப்பில் உள்ளது.

எனவே, நம் கடந்த காலம் குறித்து மகிழ்ச்சி மேலிடுவதைவிட, வருத்தம் மேலோங்குவதே அதிகம் என்று கருதுகிறேன்.

நம் கையில் உள்ள மிச்சம் எதிர்காலம்தான். அது எத்தனை நாள் எத்தனை மணி நேரம் என்று சொல்ல முடியாது. நேற்றைக்கிருந்தவர் இன்றைக்கு இல்லையே!

*'நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்*
*பெருமை உடைத்துஇவ் வுலகு'*

என்பதுதானே குறள்.

'இருக்கும் காலம் சிறிதேயாம்!' என்று உமார் கய்யாம் சுட்டுவதை மீண்டும் நினைப்போம்.

இந்த எதிர்காலத்தை நம்பித்தான் நாம் வாழ்கிறோம். இதுவரை நம்மால் முடியாததை இனியாவது அமைக்க, எய்திட முடியுமா என்று பார்க்கப் போகிறோம்.

இதன் தொடக்கம்தான் இன்றைய நாள்.

ஆம்! நிகழ்காலம்!

இதிலாவது நாம் ஒழுங்காக நடந்து கொள்ள வேண்டும். நம்பிக்கையோடு, முழு முயற்சியோடு நடைபோட வேண்டும்.

"நிகழ்காலம் விதியின் வயிற்றிலிருந்து பிறப்பதில்லை; நிகழ்காலம் என்றுமே இறந்த காலத்தின் மடியிலிருந்துதான் பிறக்கும்" என்றும்

"நிகழ்காலம் கடந்த காலத்தைத் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தால் சமூகம் முன்னேறாது", என்றும் வியாசர் கூறுவதையும் நினைத்துப் பார்த்துக் கொள்ளலாம்.

எனவே கடந்த காலத்தை எண்ணிக் கவலையுறுவதை விட்டு எதிர்காலம் நம் கையில் உள்ளது, எதையும் இயற்றிக்காட்டலாம் எனும் நம்பிக்கையோடு நிகழ்காலத்தில் எழுந்து நடைபோட வேண்டும்.

காலம் தன் நிலையிலிருந்து மாறுவதில்லை; வேண்டுமென்றே நீள்வதும் இல்லை; தொட்டாற் சுருங்கி போல் சுருங்குவதுமில்லை. ஒருநாள் என்றால் எல்லார்க்கும் 24 மணி நேரம் தான். அறிவியல் வழியில் கோள் மாற்றங்கள் இடப் பெயர்ச்சிகள் வரும்போது ஒரு சில நொடிகள் மாறலாம். ஆனால் அதற்கும் நமது நாள் – மணி மணித்துளி – நொடிக் கணக்கு களுக்கும் தொடர்பில்லை,

சில பேர்க்கு ஓடி உழைக்க – குவிந்து கிடக்கும் வேலைகளை முடிக்க 24 மணி நேரம் போதவில்லை; சில பேர்க்கு நேரமே போகவில்லை. அதிலும் தலைவன் தன் உடன் இருந்தால் தலைவிக்கு நேரம் போவதே தெரியவில்லை.

விடியல் வந்ததும் வாரிச் சுருட்டி எழும் தலைவி "அதற்குள்ளாகவா விடிந்து விட்டது?" என்று கேட்பதும் உண்டு. தலைவனைப் பிரிந்திருக்கும் காலத்தில் ஒவ்வொரு நொடியும் ஒவ்வோர் ஊழியாக இழுப்பதுபோல் உணர்வு. மாலை நேரம் வந்து விட்டால் மயக்கம்; ஐயோ! இனி இரவு நேரத்தையும் தனியாகக் கழிக்க வேண்டுமே என்று நினைக்கும்போதே மேலும் மயக்கம்!

இப்படி மயங்கும் தலைவி மாலை நேரத்தைப் பார்த்துக் கூறுகிறாள்;

*"ஒருதான் அன்றே! கங்குலும் உடைத்தே!"*

அதனால் மற்றோர் இலக்கிய ஆசிரியன் குறிப்பிட்டான்.

*"நாளொன்று போவதற்குள் நான்பட்ட பாடனைத்தும்*
*தாளம் படுமோ! தறிபடுமோ யார்அறிவார்?"*

என்று உணர்த்துகிறான்.

என்றாலும் ஓர் உண்மை தெரிகிறது. காலம் அதன் போக்கில் அதற்கு வரையறுத்த எல்லையில்தான் போய்க் கொண்டிருக்கிறது. நம் மனம் எப்படி உணர்கிறதோ அதற்கேற்பக் 'காலம் ஓடியதே தெரியவில்லை' என்றும் 'இன்னும் உரிய இடம் வந்து சேர எவ்வளவு நேரமாகும்?' என்றும் இருவகையாக உணர் கிறோம். எனவே குறை காலத்தில் இல்லை; நம் மன உணர்வில்தான் இருக்கிறது.

காலம் எத்தனையோ வகையில் பாழடிக்கப்படுகிறது. பலர் உறக்கத்தி லேயே பாதிக்கு மேற்பட்ட வாழ்நாளை வீணாக்கி அழித்து விடுகின்றனர். தவிர்க்க முடியாத களைப்புக் கருதி இரவில் ஆறேழு மணி நேரமும் பகலில் ஒரு மணி நேரமும் உறங்குவது விழித்திருக்கும்போது மேலும் தெம்புடன் உழைப்பதற்காகத் தான். ஆனால் மணிக் கணக்கில் தூங்கினால்? அதிலும் பகலில் நேரம் காலம் இல்லாமல் தூங்கினால் மன்னிக்க முடியுமா? முன்னேற முடியுமா? அதனால் தனி மனித முன்னேற்றமும் தடைப் படுகிறது; நாட்டு வாழ்வும் நலிந்து போகிறது.

*"சில*
*பொறுப்புள்ள மனிதரின் தூக்கத்தினால் - பல*
*பொன்னான வேலையெல்லாம் தூங்குதப்பா!"*

எனும் பட்டுக்கோட்டையாரின் வரிகள் எண்ணத்தக்கவை.

நம் வாழ்வில் பயணத்தில் அதிக நேரம் போய்விடுகிறது. அதைவிட நகருந்துக்காக, வெளியூர்ப் பேருந்துக்காக, காலம் கடந்து வரும் தொடர் வண்டிக்காக நாம் காத்திருக்கிறோமே அதில் சாகடிக்கப்படும் காலத்தை எண்ணித்தான் கலக்கமடைய வேண்டியிருக்கிறது! அண்மையில் பெய்த மழை வெள்ளத்தில் ஏற்பட்ட பாதிப்பில் பாண்டியன் விரைவு வண்டி கல்லக் குடியிலேயே நின்றுவிட்டது. காலை 6.10க்கு மதுரை சென்று சேர்ந்திருக்க வேண்டிய பயணிகள் பிற்பகல் 2.45க்குப் போய்ச் சேர்ந்தனர். இந்த எட்டரை மணி நேர வீணடிப்பு எல்லார்க்கும் நேர்ந்திருக்கும். ஏறத்தாழ 2000 பயணிகள் எட்டு மணி நேரம் என்ன செய்திருக்க முடியும்? வெறும் அரட்டை, வெட்டி அளப்பு, தேவை யில்லாத உறக்கம், வீண் வம்பு இவைதானே மிச்சம்! எத்தனைபேர் படித்திருக்கப் போகிறார்கள்? ஒரு பத்து, இருபது பேர் நேரத்தைப் பயன்படுத்தியிருந்தால் அதுவே பெரிது. பேருந்து வரும் வரும் என்று காத்திருப்போம். அது எங்காவது அச்சொடிந்து போய்க் கிடக்கும். அடுத்து ஒரு மணி நேரம் கழித்து வரும் பேருந்து இரண்டு மடங்கு கூட்டத்தை ஏற்றிக் கொண்டு நிற்காமலே போய்க் கொண் டிருக்கும்.

காத்திருந்து காத்திருந்து நாம் வேறுவழியின்றி ஒட்டுகின்றோமே காலத்தை! அதை நினைத்தால் நெஞ்செல்லாம் வேகின்றது. வேறு வழியில்லை. இப்படித் தான் வாழ்ந்தாக வேண்டியிருக்கிறது. இப்போதிருக்கிற வசதிகளைப் பார்த்தால் நாம் எவ்வளவோ காலத்தை மிச்சப்படுத்த முடிகிறது. இதுவே பழங்காலமானால்.....? நம் முன்னோர்கள் குமரியிலிருந்து சென்னை வர வேண்டுமானால் எவ்வளவு காலம் ஆகியிருக்கும்? நம் அரசரது படைகள் ஓர் இடத்தை அடைந்து போர் செய்ய எவ்வளவு காலம் ஆகியிருக்கும்?

இப்போது நம்மைச் சுற்றி எத்தனை வகையான அறிவியல் வசதிகள்! இவ்வளவு வாய்ப்பும் வசதியும் உள்ள காலத்தில் காலத்தைச் சரியாகப் பயன்படுத்திடத் தெரியாவிட்டால் நம்மை விடத் தறுதலைகள் வேறு யார் இருக்க முடியும்? காலம் சில வியப்பான தன்மைகளைக் கொண்டிருக்கிறது. வாழ்வில் நமக்கு ஏற்பட்ட புண்ணை ஆற்றும் மாமருந்தாக விளங்குகிறது.

என் முன்னால் பிறந்த என் தமக்கையர் மூவர். தமையன்மார் இருவரும் இறந்துபோன பின்பும் அந்தத் துயரத்தைத் தாங்கிக் கொண்டு என் அன்னை என்னை வளர்த்திருக் கிறார். காலம்தானே அவரது மனப்புண்ணை ஆற்றியிருக்க வேண்டும். என்னிடம் இன்முகம் காட்டியே வாழ்ந்த அவர், நான் இல்லாத நேரத்தில் அழுது புலம்பியிருக்கலாம். அதுவும் கூடக் காலம் செல்லச் செல்லக் குறைந்திருக்கலாம்.

எனக்கு வருத்தங்களே இல்லையா? எனது நம்பிக்கைக்கு இரண்டகம் செய்த ஒரு சிலரை நினைத்தால் இப்போதும் மனம் கொதிக்கிறது. காலம்தான் கொதிப்பைச் சற்றுக் குறைத்திருக்கிறது. இப்படி ஒவ்வொருவர் வாழ்விலும் நடந்த துயர நிகழ்ச்சியை மட்டும் நினைத்துக் கொண் டிருந்தோமானால் நாம் வாழவே முடியாது. நமக்கு மகிழ்ச்சி என்பதே கிடையாது.

'காலம் மனப்புண்ணாற்றும் மாமருந்து' என்பதால்தான் துயரங்களை மறந்து, நன்றி கெட்டவர்களை மறந்து சில நேரங்களிலாவது மகிழ்ச்சியுடன் கலகலப்பாக உலவுகிறோம். உமார் கய்யாமும் இந்த உண்மையை உணர்த்தத்தான் செய்கிறான்.

*தேறா உலகின் மாற்றமெலாம்*
*தேறும் உண்மை ஞானியர்கள்,*
*மாறா இன்ப துன்பத்தால்*
*மயக்கம் கொள்வது என்றுமிலை;*
*கூறாய் இன்பம் மறைவதுபோல்*
*குறைந்து மறையும் துன்பமுமே;*
*ஆறாப் புண்ணும் உலகிலில்லை;*
*ஆற்ற மருந்தும் அதற்கில்லை.*

எதையும் காலத்தில் செய்ய வேண்டும். அப்போதுதான் பயனும் உருப் படியாக இருக்கும். ஆனால் நம் நாட்டில் அப்படி முடிகிறதா? நாம் எவ்வளவு தான் வேகப்பட்டாலும் சில வேலைகளைப் பிறர்தான் செய்தாக வேண்டும்.

அந்தச் சிலர் செய்யும் இழுத்தடிப்புகள் எவ்வளவோ காலத்தைச் சாப்பிட்டு விடுகின்றன. இன்று நீதி கூட உரிய காலத்தில் கிடைப்பதில்லையே! ஒரு நீதிமன்றத்தில் 18000 வழக்குகள் தேங்கியிருக்கின்றனவாம். அத்தனை பேருக்கும் வழக்கு முடிந்து எப்போது தீர்ப்புக் கிடைக்கும்? அப்படிக் கிடைக்கும் போது அந்தத் தீர்ப்பின் பயனை அனுபவிக்கக்கூட அவர்கள் உயிரோடு இருக்கமாட்டார்கள்.

'Justice delayed means Justice denied'

என்ற தொடரே உருவாகி விட்டதே! காலந்தாழ்த்தித் தீர்ப்பு வழங்கினால் அது நீதி மறுக்கப்பட்டது போலத்தான் ஆகும். ஒரு வழக்குக்கு இவ்வளவுதான் காலம் என்று வரையறை செய்ய இயலுமா? நீதி காலத்தில் கிடைக்குமா?

காலந்தான் பதில் சொல்ல வேண்டும். சிலவற்றுக்குக் காலம்தான் பதில் சொல்லுகிறது.

21–5–91–இல் இராசீவ்காந்தி மறைவதற்கு முன்னால் இருந்த நிலைவேறு. மறைவுக்குப் பின் இந்தியா முழுவதும் ஏற்பட்ட நிலை வேறு. அவர் மறைவு தமிழகத்தில் ஏற்பட்டுவிட்டதால் 'தி.மு. கழகம் தான் கொன்றது' என்று துணிந்து சொன்னார்கள். 'இராசீவ் காந்தியைக் கொன்றவர்களுக்கா உங்கள் வாக்கு?' என்று மேடைக்கு மேடை கேட்டு, மக்களும் அதை நம்பி எங்களைத் தோல்வியடையச் செய்து விட்டார்கள். ஆனால் இப்போது புலனாய்வு முடிந்து முதல் தகவல் அறிக்கை (F.I.R) யையும் தாண்டி, 1000 பக்கங்கள் கொண்ட குற்றக் குறிப்பும் (Charge Sheet) தரப்பட்டுவிட்டது. 26 பேர் சிறைப்படுத்தப் பட்டனர். இறந்து போன 12 பேர்; பிடிக்கப்பட வேண்டிய மூவர் என 41 பேர். குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இவற்றில் எதிலும் தி.மு. கழகத்தவர் பெயர் வரவில்லையே! 22–5–91–இல் ஏற்பட்ட மக்கள் கருத்து இன்று தவறு என்றால் அவர்கள் அளித்த தீர்ப்பும் தவறு என்றாகி விட்டதே! நாங்கள் விளக்கம் சொல்லத் தேவையில்லை; ஆனால்

காலம் பதில் சொல்லிவிட்டதே! 'Time is the old Justice that examines all offenders!' என்று சேக்சுபியர் கூறியது எவ்வளவு உண்மை! காலம் என்ன மாறுதலைச் செய்யும்? காலம் எப்படிப் பதில் சொல்லும்? என்பதைச் சேக்சுபியர் மற்றோர் இடத்திலும் குறிப்பிட்டுள்ளார்.

**SHAKESPEARE - Sonnet - 5**

Those hours that with gentle word did frame
The lovely gaze where every eye doth dwell,
Will play the tyrants to the very same
And that unfair which fairly doth excel;
For never-resting time leads summer on
To hideous winter and confounds him there.

நாம் ஒரு செயலைச் செய்ய வேண்டும் என்று நினைக்கும்போது தக்க சமயத்தில் – தக்க காலத்தில் அதை முடிக்கப் பார்க்க வேண்டும். ஓர் ஆளைப் பார்க்கப் போனபிறகு அவரைச் சந்திக்கச் சரியான சமயம் – காலம் இல்லாமல் இருந்தால் திரும்பி விடலாம். மற்றொரு சமயத்தில் அதை முடித்து விடலாம். ஆனால் புறப்படும் போதே காலம் சரியில்லை என்று உட்கார்ந்து விட்டால்......? அதனால் நாம் எவ்வளவு காலத்தை வீணடித்து, செயல் நடைபெறாத அளவுக்கு முடக்கப்பட்டு விடுகிறோம்?

சிலர் வீட்டை விட்டு வெளியேறும் போதே நிலைப்படியில் தலை தட்டினால் தொடர்ந்து போக மாட்டார்கள். வெளியிலே பூனை குறுக்கே போனால் முழுப் பயணத்தையும் ஒத்தி வைத்து விடுவார்கள். இப்படிச் 'சகுனம்' பார்த்துச் செயலாற்றும் மூடப்பழக்கம் நம்மிடம் தொற்றிக் கொண்டு நமது அரிய காலத்தைக் கொன்று விடுகிறது.

சிலர் நீண்ட நாட்களாகவே காலத்தில் சில கருப்புப் பகுதியைக் காட்டி இதில் எந்த நல்ல செயலும் நடக்கக் கூடாது என்று விதித்து விட்டார்கள்.

சில நாட்களில் சில திசைகளில் பயணம் செய்யக் கூடாதாம். 'செவ்வாய் புதன் வடக்கே சூலம்' என்று அந்தத் திசையிலேயே திரும்பிப் பார்க்காமல் செய்து விடுகிறார்கள். அப்படியானால் கன்னியாகுமரி, மதுரையிலிருந்தெல்லாம் செவ்வாய், புதன் கிழமைகளில் புறப்படும் தொடர் வண்டிகளும், பேருந்துகளும் ஆளே இல்லாமல் காலியாகத்தான் ஓடிக் கொண்டிருக்கின்றனவா?

சென்னை எழும்பூர் வரும் தொடர் வண்டிகள் காலியாகவா வருகின்றன? இல்லையே!

பின் ஏன் இந்தச் 'சூலம்' எல்லாம்?

இதில் இராகு காலம் பார்க்கும் பழக்கம் வேறு.

| | | | | |
|---|---|---|---|---|
| ஞாயிறு | மாலை | 4.30 | – | 6.00 |
| திங்கள் | காலை | 7.30 | – | 9.00 |
| செவ்வாய் | மாலை | 3.00 | – | 4.30 |
| புதன் | பகல் | 12.00 | – | 1.30 |
| வியாழன் | பகல் | 1.30 | – | 3.00 |
| வெள்ளி | காலை | 10.30 | – | 12.00 |
| சனி | காலை | 9.00 | – | 10.30 |

இதற்கு மேல் எமகண்டம் வேறு.

ஞாயிறு பகல் 12.00 – 1.30

இப்படி எல்லா நாளுக்கும் உண்டு.

எனவே, ஞாயிறு அன்று பகல் 12 முதல் 1.30 மணி வரையிலும், மாலை 4.30 முதல் 6.00 மணி வரையிலும் நல்ல செயல்களைத் தொடங்க மாட்டார்கள். காலம் நமக்குத் தரப்பட்ட நன்கொடை. மனிதனைத் தீண்டத் தகாதவனாக்கிய இனவெறி போன்ற கொடுமை 'காலத்தின்' பேரிலும் ஏன்?

இன்றும் சிலர் கணவன் ஊரிலிருந்து திரும்புவானா மாட்டானா என்பதைச் சுவரிலிருக்கின்ற பல்லி சொன்ன பிறகுதான் முடிவு செய்வார்கள் சங்ககாலத்தில் அந்த மூடநம்பிக்கை இருந்திருக்கின்றது.

விரிச்சி பார்த்தலும் இருந்திருக்கிறது.

இப்படியாக இயற்கை நமக்களித்த பகுத்தறிவையும், வாழ்வதற்கென்று அளித்த காலத்தையும் தக்கவாறு பயன்படுத்தி வையம் பயனுறவும், வான்புகழ் எய்தவும், மனம் மகிழவும், மாற்றார் நினைந்து நெகிழவும் வாழாமல் அதிலேயே ஒரு பகுதியை வெட்டி எறிந்துவிட்டு, வீட்டுக்குள் முடங்கிக் கிடந்தால் நாம் காலத் தின் அருமையை உணர்ந்தவர்கள் என்று எவனாவது ஒப்புக் கொள்வானா?

நம் பயணத்தைப் பல்லியும், பறவைகளும், நரிகளுமா முடிவு செய்வது? பகுத்தறிவு பெற்ற நாம் இதற்காக வெட்கப்பட வேண்டாமா?

சிலர் சில துறைகளில் மட்டுமே தேர்ச்சி பெற்று அதிலேயே வல்லவர்களாக விளங்குகின்றனர். பலர் அப்படியில்லை. ஆற்றிலொரு கால் சேற்றில் ஒரு கால் என்பது போல் அரைகுறைப் போக்கு; எதிலும் முழுமை எய்துவதில்லை. எய்துவதற்காகக் காலத்தைச் செலவிடுவதுமில்லை. ஒவ்வொன்றிலும் கொஞ்சம் கொஞ்சம் தெரிந்து வைத்துக் கொண்டு ஏதோ ஒரு வகையில் பொருள் ஈட்டிக் கொண்டு காலத்தை ஓட்டுபவர்கள் பலர் இருக்கிறார்கள். 'A Jack of all trades, but master of none' என்று இவர்களைப் பற்றிச் சொல்வது உண்டு.

ஏன் இத்தனையும் இழுத்துப் போட்டுக் கொண்டு அலைகிறீர்கள் என்று கேட்டால் 'என்ன செய்வது, காலம் போதவில்லை' என்கிறார்கள்.

எல்லாவற்றையும் செய்ய முற்படுவதால் எதையும் முடிக்க முடியவில்லை என்று புலம்புவோரும் உண்டு. உலகில் பிறந்த அத்தனை பேர்க்கும் வாய்க்கும் காலத்தின் அளவு ஒரே வகைதான். அதை எப்படிப்

பயன்படுத்துகிறோம் என்பது தானே நமக்கு விடப்படுகின்ற அறைகூவல். எனவே 'காலம் போதவில்லை' 'முடிக்க முடியவில்லை' என்று புலம்புவதை விட்டு, சிலவற்றை, மிகுதியும் பயன் தராதவற்றை முற்றிலும் தூக்கியெறிந்து விட்டு எதை எய்த வேண்டுமோ அதற்காக மட்டும் உங்கள் காலத்தைச் செலவிட முயன்று பாருங்கள். அப்புறம் உங்களுக்கே ஒரு மாறுதல் ஏற்பட்டு விட்டது தெரியும். வீண்புலம்பலை விட்டொழித்து வீறுகொண்டு எழுங்கள்.

இந்தியா முன்னேறியிருக்கிறதா? விடுதலைக்குப்பின் 55 ஆண்டுகள் ஓடி விட்ட பிறகும் இந்தியா முன்னேறியிருக்கிறதா? என்ற வினாவை எழுப்பினால் எதிரே இருப்பவன் புருவத்தை மேலே ஏற்றி நெற்றியைச் சுருக்கிக் காட்டுகிறான்.

இந்தியாவா? முன்னேற்றமா? இப்போதுதான் அயோத்திச் சிக்கல் எனும் பெயரில் 1200 பேர் மண்டையைப் போட்டிருக்கிறார்கள். நான்கு மாநில அரசுகள் கலைக்கப் பட்டிருக்கின்றன. ஐந்து தீவிரவாத இயக்கங்கள் தடை செய்யப்பட் டுள்ளன. நாடே கொதித்துப் போய்க் கிடக்கின்றது. உலக நாடுகள் எல்லாம் நம்மை முறைத்துப் பார்த்துக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் இந்தியா..... முன்னேறியிருக்கிறதா? இப்படியொரு வினாவை வீசிவிட்டு நம்மை உறுத்துப் பார்ப்பது தெரிகிறது.

இது ஒரு நிலை. அகநிலையில் நம் முன்னேற்றம் எப்படி? நம் நாட்டு அலுவலகங்கள் – கல்விக்கூடங்களை எடுத்துக் கொள்ளுங்களேன். நாம் உழைக்கும் காலத்தை விட விடுமுறை காலம்தான் நமக்கு அதிகம். ஒவ்வோர் ஆட்சியிலும் ஏதோ ஒரு காரணத்துக்காக, சமய விழாவுக்காக, பெரியவர் களின் நினைவுக்காக என்று விடுமுறைகளை அறிவித்து அறிவித்து இப்போது ஒரு பட்டியலே நம்மிடம் உள்ளது.

ஒருமுறை 1992இல் ஒரு மாதத்தில் மாதத்தின் 2, 3, 4, 5, 6 ஆகிய ஐந்து நாட்களும் தொடர்ந்து அரசு விடுமுறை. ஆக, ஒருவர் மாதத்தின் முதல் நாள் அலுவலகத்தில் வேலை பார்த்திருந்தால் மறுபடியும் ஏழாம் நாள்தான்

எட்டிப் பார்க்கப் போகிறார். நாட்டின் அலுவல்கள் நகருமா? 'அட நீங்க ஒண்ணு! நல்ல நாள்லேயே நகர மாட்டேங்குது! நீங்க விடுமுறை நாளைப் போய்ச் சொல்லப் போய்ட்டீங்க' என்று படியேறி அலுத்துப் போன பயனாளி (Consumer) ஒருவரின் முணுமுணுப்பு என் காதில் கேட்கிறது.

'காலம்' எனும் ஒரு கோணத்தில் மட்டுமே இப்படி எடுத்துக் காட்டினேன். இன்னும் எல்லாக் கோணத்திலும் அலசினால் அப்புறம் நான் இந்த நூலை முடிக்க முடியாது.

போகட்டும்; கல்லூரிகள் எப்படி? 365 நாளில் 180 நாள்கள் தான் பல்கலைக் கழகம் வகுத்திருக்கும் வேலை நாள். பிறகு மாணவர் வேலை நிறுத்தம், கல்லூரி அடைப்பு, ஆசிரியர்கள் போராட்டம் என்று எத்தனையோ வகையில் கல்லூரி அலுவல் பாதிப்புகள். அவற்றை எண்ணி முடியாது; எண்ணில் அடங்காது. கல்லூரி நடக்கின்ற நாட்களிலும் கைவசம் உள்ள மருத்துவ விடுப்பு பெரிதும் கைகொடுக்கிறது.

மொத்தத்தில் கல்லூரியில் பாடம் நடக்கும் காலம் மிகமிகக் குறுகிப் போய்விட்டது என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். மேலும் நான் இதற்குள் நுழையவில்லை. நான் கூற வருவதெல்லாம் குறுகிய காலத்தில் – மூன்றாண்டுப் பட்டப்படிப்பில் ஒரு 300 நாட்கள் மட்டுமே ஒருவன் பாடம் கேட்டு அவன் பட்டம் பெறுவான் என்றால் அதன் ஆழம் எப்படியிருக்கும்? ஒருவனது இளமைக் காலம் – இந்திய இளைஞர்களின் பொன்னான இளமைக் காலம் எவ்வளவு பெரிய வீணடிப்புக்கு உள்ளாகிறது என்ற வேதனை உணர்ச்சியால்தான் இதனைக் கூறுகிறேன்.

இதுவாவது கல்விக்கூடம். திரைப்பட அரங்குகளில் சீட்டு வாங்கு வதற்காக நாள் கணக்காக, மணிக்கணக்காக நாடு முழுதும் உள்ள அத்தனை ஊர்களிலும் காத்துக் கிடக்கின்றார்களே கணக்கற்ற பெருமக்கள். இந்த நாட்டின் எதிர்கால ஏந்தல்கள்! அவர்கள் விரையம் செய்யும் காலத்தின் அளவு நம்மை மலைக்கச் செய்து விடுமே!

ஏன், கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்பவர்களையே எடுத்துக் கொள்ளுங்களேன். இன்று ஐயப்பன் கோயில், திருச்செந்தூர், பழநி, திருத்தணி முருகன் கோயில்கள் ஆகியவற்றுக்கு இறையன்பர்கள் நடைப் பயணம் மேற்கொள்கின்றனர். ஒரு நோன்பாக, ஒரு நேர்த்திக் கடன் செலுத்துவதற்காகப் பல நாள் நடைப் பயணங்கள். தொடர் வண்டி, பேருந்து, மகிழுந்து என்று எத்தனையோ வசதிகள் வந்துவிட்ட இந்தக் காலத்தில் இந்த நடைப் பயணங்கள் பெருகியுள்ளன. தேவைதானா? அப்படியானால் நாம் மீண்டும் பின்னோக்கிப் போகிறோமா? விளங்கவில்லை.

மேலை நாடுகளில் கிறித்துவ ஆலயங்களை – ஏன் இங்கேயும் கூட – கொஞ்சம் கவனியுங்கள். ஞாயிற்றுக் கிழமை மட்டும் வந்து வழிபாடு செய்வ தோடு சரி. மற்றநாட்களில் பலர் இறை வழிபாட்டுக்காக ஆலயங்களை நோக்கி நடப்பது குறைவு. வீட்டிலேயே படங்களை, சிலைகளை வணங்கி விட்டு ஓடிச் சென்று உழைக்கின்றனர். நாம் அதிலும் பல சடங்கு முறைகளைப் பெருக்கிக் கொண்டு 'முன்னோர் போன வழி பின்னோர்' என்ற பழமொழிப்படி தொடர்ந்து அவற்றைக் கடைப்பிடித்து வருகிறோம். இதனால் ஏற்படும் காலக் கழிவினைக் கனிவுடன் எண்ணிப் பார்ப்பார்களா கடவுள் நேயர்கள்?

காலத்திற்கு என்னென்னவோ பெயர்கள். காலத்தை வரையறுத்து எத்தனையோ வகைகள் – பிரிவுகள்.

ஆங்கிலத்தில் winter, summer, spring என்றெல்லாம் பெயர்கள். தமிழில் ஓராண்டை ஆறாகப் பிரித்தார்கள். ஆவணி, புரட்டாசி – கார்காலம், ஐப்பசி, கார்த்திகை – கூதிர்காலம், மார்கழி, தை – முன்பனிக் காலம், மாசி, பங்குனி – பின்பனிக் காலம், சித்திரை, வைகாசி – இளவேனிற் காலம் ஆனி, ஆடி – முதுவேனிற் காலம்.

இந்த ஒவ்வொரு காலத்திலும் மரம், செடி, கொடிகளில்–மழை, வெயில் அளவுகளில் – மக்கள் இயக்கம் போன்றவற்றில் ஏற்படும் மாறுதல்களைப்

படம் பிடிக்காத இலக்கியம் ஏது? ஒரு கிழமைக்குள் ஏழு நாட்கள்; அவற்றுக்குப் பெயர்கள். ஆண்டினை ஆறு பருவங்களாகப் பிரித்து அதற்குப் 'பெரும் பொழுது' என்று பெயர் வைத்த தமிழன் ஒருநாட்பொழுதினை ஆறாகப் பிரித்து அதற்குச் 'சிறு பொழுது' என்று பெயரிட்டான். எற்பாடு, காலை, நண்பகல், மாலை, இரவு, யாமம் என்று பெயரிட்டு ஒவ்வொன்றுக்கும் உள்ள நேர அளவையும் கணக்கிட்டுக் கூறி இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னே நமக்கு வழி காட்டினார்கள்.

வழிகாட்டி என்ன பயன்? நாம் அதன்படி வாழ்ந்து காட்டவில்லையே!

இன்று உலகத்தில் ஒப்புக் கொள்ளப்படாத இனம் தமிழினம்தானே! நமீபியாவுக்கும், பாலச்தீனத்துக்கும் கிடைத்த வரவேற்பு தமிழ் ஈழத்துக்கு இல்லையே!

இன்று இந்தியாவிலேயே பலவகையிலும் பிரிந்தும், பிளந்தும் அடையாளம் மாறிப்போய் வீழ்ந்து கிடக்கும் இனமும் தமிழினம்தானே! காலத்தைப் பகுத்துக் கணக்கிட்டுச் சொன்னவர்கள், தன் கால்வழியினருக்கு (வாரிசுகளுக்கு) வாழக் கற்றுக் கொடுக்கவில்லையே!

என்றாலும் 2500 ஆண்டுகட்குமுன் இப்படி பகுத்துக் கொண்டு வாழ்ந்த என் முன்னோனை எண்ணி நான் நெஞ்சு நிமிர்த்துகிறேன்.

'காரும் மாலையும் முல்லைக்குரிய' என்று பெரும் பொழுது, சிறுபொழுது ஆகியவை ஒரு நிலத்துக்கு எப்படிப் பொருந்துகின்றன என்று கூறி அதன் அடிப்படையில் எண்ணற்ற இலக்கியங்களை அள்ளிக் கொடுத்துவிட்டுப் போன என் முன்னைத் தமிழர்களின் முறையான வாழ் வினை எண்ணிக் கொண்டுதான் என் காலத்தை நான் பயன்படுத்துகிறேன்.

காலத்தின் அருமையை உணர்ந்து கிடைத்ததைக் கொண்டு சிறப்பாக வாழ்ந்து விட வேண்டும். ஆனால் பலர் வீண் கற்பனைகளில் மிதந்து வாழ்க்கையை வீணாக்கிக் கொள்கிறார்கள். இந்த உலகத்தில் நல்லபடியாக வாழ வேண்டும். 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' எனும் தமிழ் இலக்கிய

வரியையும் மனத்திற் கொள்ள வேண்டும். சிலர் இந்த உலக வாழ்வுக்கு மேல் துறக்கம் என்று தனியாக ஒன்று இருப்பதாக நம்மைநம்ப வைத்து அதனைச் சுற்றி எத்தனையோ புனைந்துரைகளையும் பின்னியிருக்கிறார்கள்.

ஆனால் உமார் கய்யாம் ஒரே வரியில் அடித்துச் சொல்லிவிடுகிறான்:

*மண்ணில் மறையும் முடிமன்னர்*
*வாழ்வும் அரிய வாழ்வாமோ?*
*கண்ணிற் காணாச் சொர்க்கமுமோர்*
*கனவே யன்றி நனவாமோ?*
*நண்ணும் உன்கைப் பொருளதனை*
*நம்பி யிருநீ, நண்ணாதது*
*எண்ணி யெண்ணி எந்நாளும்*
*ஏங்கி யலைவது ஏன்? ஐயா!*

எனவே கண்ணிற் காணாச் சொர்க்கம் பற்றிய கனவுகளில் காலத்தைக் கழிக்காமல் இந்த வையம் தரும் வாழ்வு பற்றிய நினைவுகளில் தெளிவை உண்டாக்கிக் கொள்ளுங்கள். அவனே இந்த வையம் எத்தகைய சிறந்த துறக்கம் என்பதைத் தெளிவுபடுத்தி விடுகிறான்.

*வெய்யிற் கேற்ற நிழலுண்டு;*
*வீசும் தென்றல் காற்றுண்டு;*
*கையில் கம்பன் கவியுண்டு;*
*கலசம் நிறைய மதுவுண்டு; (அமுதுண்டு)*
*தெய்வ கீதம் பலவுண்டு;*
*தெரிந்து பாட நீயுண்டு;*
*வையந் தருமிவ் வனமன்றி*
*வாழும் சொர்க்கம் வேறுண்டோ?*

தென்றல் தவழும் நிழற்சோலை; கையில் சுவைதரும் இலக்கிய நூல்; பருகுவதற்கும் அமுதம் (உமார் 'மது' என்றால் நாம் நம்நாட்டிற்குப் பொருந்த அமுது என்று மாற்றிக் கொள்கிறோம்) நெஞ்சை உருக்கும் பாடல்கள்; அவற்றை நயமுணர்ந்து பாட அழகிய இளம் பெண் ஒருத்தி அருகில்.

இதுதான் சொர்க்கம்; இதுதான் வாழும் சொர்க்கம். இதுவன்றி வேறு சொர்க்கம் ஏன்? என்று கேட்கும் உமார் கய்யாம் பார்வை தெளிவானது.

எவ்வளவோ அரும்பாடுபட்டுக் கற்கிறோம். அகவை வளர வளரப்புதிய புதிய நூல்களைக் கற்கிறோம். ஆனால் நாம் படித்த அவ்வளவும் நினைவில் நிற்கிறதா? 1961 இல் பி. எசி கணிதம் பயின்றேன். முதல் வகுப்பில் வெற்றி பெற்றேன். எண் கணிதம் எனப்படும் 'Algebra' வில் 95க்கு மேல் மதிப்பெண் எடுத்தேன். பதினொன்றாம் வகுப்பில் கணிதத்தில் 97 மதிப்பெண் எடுத்தேன்.

அதன்பிறகு தமிழ்க் கல்வி; தமிழ் நூற்பயிற்சி; தமிழ் வழிச் சிந்தனைகள். இப்போது எனக்கு 'அல்ஜீப்ரா'வில் எதுவும் நினைவில் இல்லை. ஒன்றிரண்டு எளிய நூற்பாக்களைத் தவிர மற்ற அனைத்தும் என்ன ஆயின? கால வெள்ளம் என் மூளையைத் தாக்கி அழித்து அங்கே குறிக்கப்பட்டிருந்த கணிதக் குறிப்புகளையெல்லாம் வாரிக் கொண்டு போய் விட்டதா?

உண்மைதான்; நினைப்பதெல்லாம் பதிவாவதில்லை; படைப்புகளாக உருவாவதில்லை. காலம் எவ்வளவு பெரிய மறதியை நமக்குத் தந்து செல்கிறது?

இதனை உமார் கய்யாம் நன்கு வலியுறுத்துகிறார்.

*நினைப்பு நீண்டு தழைத்துவரும்;*
*நீறி வெந்து சாம்பருமாம்;*
*அனைத்தும் பாலை வனத்தினிலே*
*அமையும் பனிபோல் அரைநொடியில்,*
*மனத்தில் தோன்றி நிலையாது*
*மாண்டு மறைதல் உண்மையதாம்;*
*எனைத்து நூலின் வலியாலும்*
*இதனை மறுக்க இயலாதே.*

மின்னல் வேகத்தில் தோன்றும் பல எண்ணங்கள் மின்னல் வேகத்திலேயே மறைந்து போய்விடுகின்றன. கற்று, மூளையில் பதிந்து, முறைப்படி அவற்றை வெளிப்படுத்தி, ஆசிரியர்களின் உயர் மதிப்பீட்டையும்

பாராட்டையும் பெற்ற செய்திகளைக் காலம் என் நினைவிலிருந்து அழித்து விட்டதே! உமார் கய்யாம் புலம்புவதைப் பாருங்கள்.

*அன்றென் இளமைப் பருவத்தில்*
*அறிவிற் சிறந்த புலவரையும்,*
*நன்று சீல முடையபெரு*
*ஞானி களையும் அடிபணிந்து*
*நின்று கேட்ட வாதங்கள்*
*நினைப்பின் அரிய ஆயிடினும்,*
*சென்ற வாயில் வழியேதான்*
*திரும்பி அந்தோ! வந்தேனே.*

*அரிய பெரிய ஞானிகளோடு*
*அறிவின் விதைகள் விதைத்துவந்தேன்;*
*பெருகி ஞானம் வளர்ந்தோங்கப்*
*பேணிப் பணிகள் பலசெய்தேன்;*
*உரிய காலைக் கண்டபலன்*
*உண்மை கூறின் இதுவேயாம்;*
*வருதண் ணீரைப் போல்வந்தேன்;*
*மாயக் காற்றைப் போல்மறைந்தேன்*

எனவே எவ்வளவு கற்றாலும் கடைசி வரையும் தொடர்வதும், தக்க நேரத்தில் கைகொடுப்பதும் மிகச் சிலவாகத்தான் இருக்கும். இந்த உண்மை ஒருபுறம் நமக்கு எப்போதும் வெளிச்சம் தந்து கொண்டே இருக்க வேண்டும்.

சில அறிஞர்கள் காலமெல்லாம் முயன்று கடுமையான செய்திகளைப் படித்து நுட்பமறிந்து தெளிவு பெற்று அறிவுக் களஞ்சியமாக விளங்கு கிறார்கள். ஆனால் அவர்கள் அதைப் பயன்படுத்தி உலகுக்கு உய்வு தேட முனையும் போது மறைந்து விடுகிறார்கள். அவர்கள் திரட்டிய அறிவு அனைத்தும் ஒரு நூலகம் பல நூல்களைக் கொண்டிலங்குவது போல் ஒரு

காட்சிப் பொருளாக இருந்ததே தவிர, பூட்டப்பட்ட நூலகம் போல் அந்த அறிஞர்களின் கருத்துகள் புரட்டப்படா மலேயே புதைந்து விட்டன. அறிஞர் தேவநேயப் பாவாணர் தனித் தமிழில் ஈடுபாடு கொண்ட சொல்லாய்வறிஞர். அவர் சொற்பிறப்பியல் அகரமுதலித் துறையில் இயக்குநராகப் பணியமர்த்தப் பட்டும் ஆறாண்டுகட்கு மேல் அத்துறையில் பணியாற்றியும் பல அகப் புறக் காரணங்களால் அவர் நினைத்த இலக்கை எட்டவில்லை. 13 மடலங்களில் அத்தொகுப்பு வந்திருக்க வேண்டும். ஆனால் அவர் தந்ததோ ஒரே மடலம்தான். மீதி 12 மடலங்கட்குரிய ஆராய்ச்சி அறிவு அவரிடத்தில் இருந்தது. ஆனால் அவர் என்ன கருதினார், பிற சொற்கள் குறித்த அவரது ஆராய்ச்சி முடிவுகள் எவை என்பது குறித்து எவரும் அறிய முடியாது போயிற்று. அவ்வளவு பெரிய அறிஞரைக் காலம் கவர்ந்து கொண்டது. அவர் திரட்டிய அறிவெல்லாம் பயனின்றிப் போய்விட்டது. என் போன்றவர்கட்கு வழிகாட்டிய அவரது அறிவு முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லையே எனும் வருத்தம் என்றும் மறையாமல் நிற்கிறது.

வாழ்வுக்கு முடிவு வந்தால் அதற்குரிய காலம் வந்தால் உறவு, நட்பு எல்லாம் ஒரு நொடியில் ஒழிந்து போகின்றன.

*திட்டிக் கதவு தெரிந்ததடா!*
*திறவு கோலும் இல்லையடா!*
*கட்டித் திரையும் கண்டதடா!*
*கண்ணும் மயங்கி நின்றதடா!*
*ஒட்டிச் சிறிது நீநானென்று*
*உரைத்த உரையும் கேட்டதடா!*
*நட்ட காலம் பின்னையடா!*
*நான்நீ அற்றுப் போச்சுதடா!*

என்கிறார் உமார் கய்யாம்.

ஏற்கனவே நம் வாழ்நாளில் பெரும்பகுதி ஓடிவிட்டது. இப்போதே கண்ணுக்கு ஆடி போடும் அளவுக்கு வந்து விட்டோம். வெள்ளை முடிகள் சில வெளியே எட்டிப் பார்த்துக் கால வேகத்தை உணர்த்தி விட்டுச்

சிரிக்கின்றன. இப்போதாவது வேகமாகச் செயற்பட்டாக வேண்டும். இருக்கும் காலத்தை உருப்படியாகப் பயன்படுத்த வேண்டும்.

உமார் கய்யாமின் கீழ்வரும் நான்கு வரிகளையும் நம் நெஞ்சில் எழுதி ஒட்டி வைப்போம்,

*"இருக்கும் காலம் சிறிதேயாம்;*
*இதனுள் இன்ப வாழ்வினையாம்*
*பெருக்கு மளவு பெருக்கிடுவோம்;*
*பிழையொன் றதனால் உண்டா? சொல்"*

பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம் கூறிய வரிகளையும் சேர்த்து நினைப்போம்.

*'என்றும் துன்பமில்லை; இனிச் சோகமில்லை*
*வரும் இன்பநிலை வெகு தூரமில்லை'*

என்றும்,

*'கொடுமையையும் வறுமையையும் கூடையிலே வெட்டிவை*
*கொஞ்சநஞ்ச பயமிருந்தால் மூலையிலே கட்டிவை*
*நெடுங்கவலை தீர்ந்த தென்று நெஞ்சில் எழுதி ஒட்டிவை'*

என்றும் அவன் கூறிய கருத்துகளின் அழகும் உண்மையும் நம் கண்முன்னாலேயே இருக்கட்டும்.

சிலர் சில காலத்தில் ஒரு பெரும் ஆற்றலைத் திரட்டி வைத்துக் கொள்வார்கள். அதைத் தேட இயலாதவர்கள் அணுகும்போதோ, இவரே அதைத் தேட முடியாத போதோ அந்த ஆற்றல் அனைவர்க்கும் கைகொடுக்கும். வர்மக் கலையில் வல்லவர் ஒருவர் அகவை முதிர்ச்சியால் தளர்ச்சியடைந்தாலும் கலையை விளக்கிச் சொல்லி ஒருவர்க்குக் கற்றுக் கொடுக்க முடியுமே! மழை காலத்தில் வெள்ளப் பெருக்கெடுக்கும்போது ஆறு தண்ணீரை மேலெல்லாம் பரவச் செய்து கால்வாய், வாய்க்கால், கடல் என்று பிரித்து அனுப்புகிறது. தானும் உட்கொண்டு தாகம் தணித்துக் கொள்கிறது.

ஆனால் கோடைக் காலத்தில், கொடும் வெயில் காலத்தில் தண்ணீரே காணாமல் கால்நடைகள் கூடத் தவிக்கும் காலத்தில் அந்த ஆறு பயன்படத் தான் செய்கிறது. ஆற்று நீர் கிடைக்காவிட்டாலும் தோண்டப்படுவதன் வாயிலாக மக்களுக்கு ஊற்று நீர் கிடைக்கிறது.

*"ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் அந்நாளும் அவ்வாறு*
*ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்"*

எனும் முதுமொழியை உணர்வோம்.

இதுபோலத்தான் நாம் உழைக்க முடியாத காலத்திலும் உயர்வோடு வாழ வேண்டுமானால் காலம் நமக்களித்த இளமையைப் பயன்படுத்திக் கல்விச் செல்வத்தை நம் கையகப்படுத்திக் கொள்ள வேண்டும்; பொருட் செல்வத்தையும் திரட்டியாக வேண்டும். இதில் காலத்தை விட்டுவிட்டால் பின்னால் கண்கலங்க வேண்டியிருக்கும். ஆறு அன்று மழைநீர் குடித்ததால் தான் அதனை ஊற்று நீராக மாற்றித் தர முடிந்தது. காலம் வாய்க்கும் போது எவைஎவை தேவையோ அவற்றையெல்லாம் கைப்பற்றுங்கள். அதுவே பின்னர் பகையை விரட்டும் தடியாகவும், தளர்ச்சியின்போது ஊன்றுகோலாக வும், எவர்க்கும் பணியாமல் நீங்கள் செம்மாந்து அரசோச்சும் செங்கோலாக வும் பயன்படும்.

ஒரு காலத்தில் நம்மிடையே பொதுநல உணர்வு மேலோங்கி நின்றது. பிறர்க்குதவுதல் எனும் பெரும் பண்பைப் பெற்று மிளிர்ந்தோம். ஆனால் இப்போது என்ன ஆயிற்று? அந்தப் பொதுநலம் எங்கே போய்விட்டது?

*"சுயநலத்தால் கோட்டை கட்டிச்*
*சூழ்ச்சியிலே சுவரெழுப்பும்'*

கொடிய குணம் வந்து விட்டதே! 'இந்தக் காலம் அப்படி' என்று எல்லாரும் பழிக்கும்படி ஆகி விட்டதே!

ஓர் ஊரில் கோயிலுக்கு நன்கொடை தர மறுக்காத மக்கள் பள்ளிக்கு ஒரு மிசை (மேசை), நாற்காலி வாங்கித்தர மனம் உள்ளவர்களா? பல

ஊர்களில் கண்மாய்களில் காட்டுக் கருவேல மரம் வளர்ந்து கிடக்கிறது. அவை முற்றி விற்பனைக்கு ஏற்ற நிலையில் ஊர் மக்களேசேர்ந்து அதை ஏலத்திற்கு எடுக்கிறார்கள். அப்படி எடுப்பதால் போட்டி இல்லையென்றாகி, வெட்டி விற்பதால் ஏற்படும் ஊதியம் பெருகுகின்றது. இந்தத் தொகையினை அந்த ஊர் மக்கள் எப்படிப் பயன்படுத்துகிறார்கள்? ஒன்று—புதிய கோயிலைக் கட்டுகிறார்கள்; அல்லது பழைய கோயிலைப் புதுப்பித்து, குடமுழுக்கு வைத்துக் கொண்டாடி இருந்த காசையெல்லாம் இழந்து விடுகிறார்கள். அவர்கள் பிள்ளைகள் படிக்கும் பள்ளிக்கூடம் கோடையில் வெளிச்சத்தையும், கார்காலத்தில் மழையையும் உள்ளே விடும் ஓட்டைக் கூரைகளைக் கொண்டுள்ளது. சில அறைகட்குக் கதவுகள் இல்லை. பல இடங்களில் சாளரங்கள் இல்லை. எங்கும் உடைந்து சிதைந்த மிசை நாற்காலிகள், பள்ளிக்கூடமே ஊனமுற்று விளங்குகிறது. நல்லெண்ணம் கொண்டோர் நினைத்திருந்தால் இந்த ஊனமுற்ற நிலையை உடனே போக்கிவிட முடியும். ஆனால் அந்த எண்ணம் எவருக்கும் வரவில்லையே! காலம் ஏன் இப்படிக் கெட்டுப் போய்விட்டது என்று வாய்விட்டுப் புலம்பாதவர்களே இல்லை இந்த நாட்டில்! 'காலம்' கெடுமா? சிங்கப்பூரிலும் சப்பானிலும் காலம் இப்படிக் கெட்டு விட்டதா? இல்லையே! ஆனால் இங்கு மட்டும் ஏன் காலம் கெட்டு விட்டது என்று கருதுகிறோம்? நாம் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு கெடுதல்களைச் செய்து, முடிந்தவரை சமுதாயத்தைச் சீரழித்து விட்டுக் கொஞ்சமும் கூசாமல் காலத்தின்மேல் பழியைப் போடுகின்றோம். பாவம் காலம்!

காலத்தின் அருமை குறித்து இப்படி எத்தனையோ பேர் சிந்தித்திருக்கும் போது வள்ளுவர் சிந்திக்காமல் இருந்திருப்பாரா? எப்படி இருந்திருக்க முடியும்? பலவற்றில் நமக்கு வழிகாட்டியாக விளங்கும் வள்ளுவர் இதிலும் ஒரு தெளிவான பார்வையை நமக்குக் காட்டுகிறார். அரசியல் அதிகாரத்தில் அரசனுக்காக இது சொல்லப்பட்டாலும் பொதுவாழ்வுப்

பணியாற்றுபவனும், எடுத்த செயலில் வெற்றியடைய வேண்டும் என்று கருதும் தனிமனிதனும் காலத்தின் அருமையை உணர்ந்துதானே ஆக வேண்டும். வள்ளுவர் கருத்து எல்லாக் காலத்துக்கும், எல்லா மனிதர்க்கும் பொருந்தும். வல்லாண்மை படைத்த இட்லர் கூட வெற்றி பெற வேண்டுமானால் காலம் அறிந்துதான் செயற்பட வேண்டும்.

கோட்டானுக்குப் பகலில் சரியாகக் கண் தெரியாது; பார்வை மங்கி இருக்கும். எனவே காக்கை வலிமை குன்றியதாக இருப்பினும் அது பகல் நேரமாக இருந்தால் கோட்டானை வென்று விடும். இதுவே இரவு நேரமானால் கோட்டான் காகத்தை வென்று விடும். அதுபோல் பகையை வெல்லக் கருதும் ஓர் அரசர்க்கும் அதற்கு ஏற்ற காலம் வேண்டும்,

*"பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்*
*வேந்தர்க்கு வேண்டும் பொழுது"*

ஒரு செயலை முடிப்பதற்குத் தேவையான கருவி வசதிகளைச் செய்து கொண்டு ஏற்ற காலத்தில் செயற்படுத்தினால், எய்த முடியாத அருஞ்செயல் என்று எதுவுமில்லை.

*"அருவினை என்ப உளவோ கருவியால்*
*காலம் அறிந்து செயின்".*

உலகமே நம் கைக்கு வரவேண்டும் என்று கருதினாலும் தக்க காலத்தை அறிந்து தக்க இடத்தில் செயற்படுத்தினால் அதுவும் கைகூடக் கூடியதே. உலகம் நம் கைக்கு வந்து விடும் என்பதில் ஐயமில்லை. அப்படி உலகத்தைக் கைக்கொள்ள வேண்டும் என்ற கருதுபவர்கள் கலக்கம் எதுவுமின்றி, தக்க காலத்தை எதிர்பார்த்துப் பொறுத்திருப்பார்கள்.

*'ஞாலங் கருதினும் கைகூடும் காலம்*
*கருதி இடத்தாற் செயின்"*

*'காலம் கருதி இருப்பர் கலங்காது*
*ஞாலம் கருது பவர்.'*

சிலர் செய்கிற அழிம்பைப் பார்த்துப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை என்பது உண்மைதான். சில பகைவர்கள் நமக்கு நேருக்கு நேர் நின்று தீங்கு செய்கிறார்கள். சினம் கொப்பளிக்கத்தான் செய்கிறது. என்றாலும் உடனே சீறி விடக்கூடாது. சினத்தை அகத்தில் அடக்கி வைத்து வெல்வதற்கு ஏற்ற காலம் பார்த்து வெளிப்படுத்துபவனே அறிவாளியாவான். காலம்தான் இங்கே அவன் வெற்றிக்குக் கைகொடுக்கிறது.

*'பொள்ளென ஆங்கே புறம் வேரார்; காலம்பார்த்து*
*உள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.'*

பொறுத்திருப்பது சரிதான்; 'நிதானம்' என்ற பண்பு ஏற்கத் தக்கதுதான். ஆனால், எல்லா நேரத்திலும் 'நிதானம்' என்றால் வழவழாப் போக்குதான் வெளிப்படும். செயல் நிறைவேறாது. எனவே தக்க காலம் வந்து வாய்க்குமானால் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அப்போதே செயற்கரியவற்றைச் செய்து தீர வேண்டும்.

*'எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே*
*செய்தற் கரிய செயல்.'*

ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு.

'To seize the chance by its forelock'

என்று. வாய்ப்பு என்று வரும்போது அதன் முன் குடுமியை இறுகப் பற்றிக் கொள்ள வேண்டும். பின்புறம் பிடித்தால் வழுக்கிக் கொண்டும் ஓடிப் போகலாம் அல்லவா? எப்படி இருக்க வேண்டும் நாம்?

பொறுத்திருக்கும் காலத்தில் கொக்கைப் போல் அமைதியாக இருக்க வேண்டும். காலம் வந்து வாய்க்கும் போது, மீனைக் கண்டால் கொக்கு எப்படித் தன் அலகால் ஒரே குத்தாகக் கொத்தி அதனைப் பற்றிக் கொள்கிறதோ அதைப்போல் செயலாற்ற வேண்டும்.

*'கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்*
*குத்தொக்க சீர்த்த விடத்து.'*

இதையே மற்றொரு தமிழ்ப் பாடலும் உணர்த்துகின்றது. சிலர் காலம் கருதி அடக்கமாக அமர்ந்திருப்பார்கள். அவர்களைப் பார்த்து 'அறிவிலர் – செயலிலர்' என்றெல்லாம் எண்ணி விடக்கூடாது. அவர்களும் கொக்கைப் போல் காலம் கருதித்தான் காத்திருக்கிறார்கள்.

*'அடக்க முடையார் அறிவிலர் என்றெண்ணிக்*
*கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில்*
*ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்*
*வாடி யிருக்குமாம் கொக்கு.'*

வள்ளுவர் முதலாகப் பலரும் காலம் அறிந்து செயற்பட வேண்டிய இன்றியமையாமையை மிகச் சிறப்பாகப் புலப்படுத்தி விட்டனர். உண்மை தெரிகிறது. காலத்தின் அருமையும் புரிகிறது. இதைச் சொல்லி இரண்டாயிரம் ஆண்டுகள் (மிகப் பெரிய காலம்) ஓடிவிட்டன. இனியாவது காலம் அறிந்து செயற்படுவோமா?

காலத்தை உருவகமாக்கிப் பலர் தங்கள் கதைகளில் பிற படைப்புகளில் காலதேவனாக உலவ விட்டுள்ளனர். கலிங்கத்துப் பரணியை அடித்தளமாகக் கொண்டு புனையப்பட்ட என் நாடகத்தில் நானே காலதேவனாக அதாவது பரணிபாடும் செயற்கொண்டாராக நடித்திருக்கிறேன். கலிங்கவேந்தன் அனந்தவர்மனைப் பார்த்து, "அனந்தவர்மா! காலதேவன் வந்து நிற்பது உன் கண்களில் படவில்லையோ!" என்று வரும் உரையாடல் கூட ஓர் உருவகம்தான்.

அதனால்தான்

*"அனந்தவர்மா! பரணி பாடப்போவது உறுதி! அந்த நாள்*
*பான்மை கெட்ட உனக்கு இறுதி! இது என்*
*பாட்டு வல்லமை தரும் அறுதி!"*

என்று அனந்தவர்மனின் காலத்தை முடிவு செய்யும் உருவகமாகக் காலதேவர் வருகிறார்.

'காலன்' என்பதும் ஓர் உருவகந்தானே! நம் காலம் முடிந்து விட்டது என்பதைத் தானே, 'காலன்' கொண்டு போய்விட்டான், என்கிறோம். இந்தக் காலன் என்னென்ன செய்வான் என்பதை உமார் கய்யாம் அழகுபடப்படம் பிடிக்கிறார்.

*'ஒருகை அன்னம் இடமாட்டான்;*
*ஊரு ராகத் துரத்திடுவான்;*
*பருக நீரும் தரமாட்டான்;*
*பழியில் மூழ்கச் செய்திடுவான்;*
*இரவும் பகலும் ஓயாமல்*
*என்னை மானம் கெடுத்திடுவான்;*
*கருணை யில்லாக் காலனவன்*
*காட்டும் கொடுமை சிறிதளவே.*
*'உண்ணும் உணவை அழித்திடுவான்;*
*உடலை மெலியச் செய்திடுவான்;*
*கண்ணுக் கினிய ஆடையினைக்*
*கந்த லாகக் கீறிடுவான்;*
*பண்ணற் கரிய மாளிகையும்*
*பாழ்மண் ணாகக் கண்டிடுவான்;*
*எண்ணிற் காலன் கொடுமையெலாம்*
*யாரே கூற வல்லவராம்?*

இப்படிக் 'காலன்' கொடுமைகளைச் சொல்லும் உமார் கய்யாம் காலச் சக்கரம் என்ன செய்யும் என்பதையும் கூறுகிறார்.

*'வாடி நித்தம் வருந்திடினும்*
*வயிற்றுக் குணவு தரமாட்டாய்;*
*தேடி வைத்த பொருளையெல்லாம்*
*திருடிக் கொண்டு போய்விடுவாய்;*
*ஆடிச் சுழலும் ராட்டினமும்*
*ஆடைக் குதவு நூல்தருமே;*
*நீடு காலச் சக்கரமே!*
*நின்னால் ஏதும் பயனுண்டோ?*

காலச் சக்கரம் நம்மை ஏதுமற்றவர்களாக்கி இழுத்துச் சென்று விடுகிறது என்பதைத் தவிர வேறென்ன சொல்ல முடியும்?

கால வெள்ளத்தோடு நீந்தினாலும் சரி; எதிர்நீச்சல் அடித்தாலும் சரி; கடைசியில் ஒரு சலிப்பே மிஞ்சுகிறது. எனக்கு அகவை 63. ஆனால் ஆறாண்டு காலத்தைத்தான் என் வாழ்வின் பொற்காலம் என்று கூற முடிகிறது. ஏனைய 57 ஆண்டுகளில் வெற்றி – தோல்வி – ஏமாற்றம் – எரிச்சல் – வேதனை என்று எத்தனையோ வகையான சுழற்சிகட்கு ஆட்பட்டு நலிந்தும் மெலிந்தும் ஒருவகையாகக் கரையேறி வந்திருக்கிறேன்.

என்றாலும் ஒரு நம்பிக்கையோடு வாழ்ந்தாக வேண்டும். அதுதான் குறிக்கோள் உடையவர்களுக்கு அழகு.

இப்போது குளிர்காலம்தான். அதுவும் இலையுதிர் காலம். ஆனாலும் வசந்தகாலம் வாராமலா போய்விடும் என்ற நம்பிக்கையோடு நடைபோட வேண்டும்.

புகழ்பெற்ற கவிஞன் செல்லி அப்படித்தானே எதிர் பார்த்தான்!

'If winter comes
Can spring be far behind?'

என்கிறானே!

உமார் கய்யாமும் நமக்கு நெஞ்சில் உறைப்பதுபோல் அழகாக உரைத்தாரே!

*'வாராய் நண்பா! வருத்தமெனும்*
*வாடைக் காலப் போர்வையினை,*
*நேரா வருமிவ் வசந்தமெனும்*
*நெருப்பில் வீசி எறிவாயே'*

காலம் என்னும் காட்டாறு என்றும் அதன் போக்கிலே தான் ஓடிக் கொண்டிருக்கும்.

Time and Tide wait for none.

ஆனால் அந்தக் காட்டாற்றில் நம் நிலை என்ன?

காலத்தின் இழுவிசைக்கு ஏற்ப, உந்து சக்திக்கு ஏற்ப அதன் ஓட்டத்தி லேயே நீங்களும் ஓடி – வாழ்ந்து மறைந்து விடப் போகிறீர்களா?

அதனை எதிர்த்து நீச்சலடித்து இறுதி வெற்றியை அடைய முடியாமல் இடையிலே முறித்து 'நடுகல்'லாக நிற்கும் 'தியாகி' ஆகப் போகிறீர்களா?

காட்டாற்றின் வேகம், அதனைக் கட்டுப்படுத்தி விடுவதற்கான திட்டம், அதற்கான கருவிகள், அதை நிறைவேற்றுவதற்கான துணை முயற்சிகள் ஆகியவற்றையெல்லாம் ஒழுங்கு செய்து வைத்துக் கொண்டு காட்டாற்றின் குறுக்கே ஒரு மாபெரும் அணையைக் கட்டி எழுப்பி நீரின் போக்கை ஒரு நிலைக்குக் கொண்டு வந்து; அந்த அணைக்கட்டின் மீது ஏறி நின்று கூவும் சாதனையாளராக மாறப் போகிறீர்களா?

சொல்லுங்கள்; சிந்தியுங்கள்; செயலில் இறங்குங்கள்! சிந்திப்பதி லேயே காலம் செலவழித்து விடாதீர்கள்!

நீங்களே சிந்தை தெளிந்து எழுவதற்குள் காலம் உங்களை வேறெங்கோ மூலையில் உருட்டித் தள்ளி விட்டிருக்கும்!

'இருந்தவன் எழுவதற்குள் நடந்தவன் நாலு காதம்' போயிருப்பா னல்லவா? முயல் ஓய்வெடுத்ததால்தானே ஆமை வெற்றிக் கம்பத்தை எட்டிப் பிடித்தது? எனவே எழுந்திருங்கள்! இப்போதே எழுந்திருங்கள்!

மாசினி சொன்னது போல

*'எழுந்திருங்கள், இப்போதே, இங்கேயே...*
*இல்லையேல் நாளை 'தடைகள் அதிகமாகி விடும்.'*

"Rise! Oh! Rise today! Tomorrow
the obstacles will be greater!"

*நன்றே செய்க! அதுவும்*
*இன்றே செய்க! அதுவும்*
*இன்னே செய்க?*

எனும் அடுக்கு மொழிகளை நெஞ்சில் அடுக்கி வையுங்கள்.

'அன்றறிவாம் என்னாது அறம் செய்க' எனும் குறள் வரியும் உங்கள் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கட்டும்.

நமக்கு விவரம் புரிகிறது; எப்படி வாழ்ந்தாக வேண்டும் என்று எடுத்துச் சொல்லப் பலநூறு நூல்களும் தேவையான ஆட்களும் உண்டு. இன்று வேகமாகச் செயல்பட அறிவியல் வசதிகளும் ஏராளம்; ஏராளம். எனவே நன்றாக, மேம்பாடாக, பலர் வியந்து பாராட்டும்படி வாழ்ந்தாக வேண்டும்; அதுவும் முத்திரை வாழ்வு வாழ்ந்தாக வேண்டும்.

பாரதி எவ்வளவு தன்னம்பிக்கையோடு கூறுகிறான்? தான் ஒரு வேடிக்கை மனிதனாக வாழ்ந்து மறைய விரும்பவில்லை என்று தெரிவித்து விட்டானே!

*தேடிச் சோறுநிதம் தின்று - பல*
*சின்னஞ்சிறு கதைகள் பேசி - மனம்*
*வாடித் துன்பமிக உழன்று - பிறர்*
*வாடப் பலசெயல்கள் செய்து - நரை*
*கூடிக் கிழப்பருவம் எய்தி - கொடும்*
*கூற்றுக் கிரையெனப்பின் மாயும் - பல*
*வேடிக்கை மனிதரைப் போலே - நான்*
*வீழ்வேன் என்றுநினைத் தாயோ?*

என்று எவ்வளவு எக்களிப்போடு, ஒரு திமிரோடு கேட்கிறான்.

சரி! வாழ்ந்து காட்டுவோம் என்கிறீர்களா?

வரிந்து கட்டிக் கொண்டு எழுந்து விட்டீர்களா? சொல்லுங்கள்! இப்போது என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள் என்கிறீர்களா?

நான் சொல்வது இருக்கட்டும். நான் உங்கள் சமகால மனிதன். (Contemporary) சமகால மனிதனையும் அவன் கருத்துகளையும் மதிக்கும் மனப்பாங்கு எப்போதுமே நம் சமூகத்தில் மிகமிகக் குறைவு. அதனால் வாழ்வை ஊடுருவிப் பார்த்த உமார் கய்யாம் மொழியிலேயே சொல்கிறேன், கேளுங்கள்.

*'ஆழி சூழும் உலகாளும்*
*அரச னாக வேண்டுமெனில்,*
*வாழும் வாழ்வில் உன்னையும்நீ*
*மறந்து வாழ வேண்டுமடா!*
*ஏழை யாகி எளியவரின்*
*எளிய னாக வேண்டுமடா!*
*தோழ னாகி யாவர்க்கும்*
*தொண்ட னாக வேண்டுமடா!'*

*'இல்லாப் பொருளுக் கேங்காமல்*
*இருக்கும் பொருளும் எண்ணாமல்*
*எல்லாம் வல்ல எம்பெருமான்*
*இரங்கி அளக்கும் படிவாங்கி,*
*நல்லார் அறிஞர் நட்பையும்நீ*
*நாளும் நாளும் நாடுவையேல்,*
*நில்லா உலகில் நிலைத்த சுகம்*
*நீண்டு வளரும் நிச்சயமே.'*

எல்லாம் வல்ல எம்பெருமான் மீது எனக்கு நம்பிக்கையில்லை. இயற்கை தரும் வாய்ப்பைப் பயன்படுத்தி இனிதாக வாழும் முயற்சியே என்னிடம் மேலோங்கி நிற்கிறது.

இப்போது காலம் ஓடிக் கொண்டிருக்கிறது. மணிப் பொறியின் 'டிக் டிக்' ஒலி என்னை விழிப்படையச் செய்கிறது. எழுதிக் கொண்டேயிருந்தால் எப்போது செயற்படுவது? தூவலை (Pen) மூடி வைக்கிறேன்.

நீங்களும் படித்துக் கொண்டேயிருந்தால் அந்தப் படிப்பினை எப்படிப் பயன்படுத்துவது? எப்போது பயனுற வாழ்வது? எனவே நூலை மூடுங்கள். புதிய விழிப்புணர்ச்சியோடு, தெளிவான திட்டத்தோடு வாழ்ந்தாக வேண்டும் எனும் வெறியோடு எழுந்திருங்கள்.

கடைசியாக ஒன்று மட்டும் நினைவில் நின்று கொண்டேயிருக்கட்டும்.

*'சித்தர்களும் யோகிகளும்*
*சிந்தனையில் ஞானிகளும்*
*புத்தரோடு ஏசுவும்*
*உத்தமர் காந்தியும்*
*எத்தனையோ கருத்துகளை*
*எழுதிஎழுதி வைச்சாங்க!*
*எல்லாம்தான் படிச்சீங்க!*
*என்னபண்ணிக் கிழிச்சீங்க?*

என்று கேட்கிறானே பட்டுக்கோட்டை! அதை நினைவிற் கொண்டு 'என்ன பண்ணிக் கிழிக்கலாம்' என்பதை ஆர அமரச் சிந்தித்து முடிவு செய்யுங்கள். செயற்படுங்கள்.

நமக்கு முன்னோர்கள் பல ஆயிரம் கோடிப் பேர். நமக்குப் பின்னே வரப் போகிறவர்கள் நூறாயிரம் கோடிப் பேர். இடையில் நாம்.

*'இருந்து சென்ற முன்னோரின்*
*இடத்தி லெல்லாம் யாம்இன்று*
*விருந்து செய்து வாழ்கின்றோம்;*
*விகடம் சொல்லி மகிழ்கின்றோம்;*
*இருந்த இடம்விட்டு யாமும்இனி*
*எழுந்து சென்றால் இங்கிருந்து*
*விருந்து செய்வார் யார்யாரோ?*
*விகடம் சொல்வார் யார்யாரோ?*

இந்த நினைவோடு வாழத் தொடங்குங்கள்.

இப்போது தேவையற்றவை விலகி ஓடக் காண்பீர்கள்!

தேவையானவை மட்டுமே முன்னிற்கக் காண்பீர்கள்!

ஓ! நீங்கள் வரலாற்றில் இடம் பெற்று விட்டீர்கள்!

பொழுது புலர்ந்து விட்டது; புள்ளினங்கள் ஆர்ப்பரிக்கின்றன. இன்னும் எவ்வளவோ தொலைவு போக வேண்டும்,

காலம் நம் கையமிருக்கின்றது; கவனமாகச்

செலவழிப்போம்!

காலம் எனும் காட்டாறு கரைமீறி

ஓடுகிறது! அதையும் கட்டுப்படுத்தி

ஒழுங்கு செய்யும் ஆற்றல் மறவனே!

புலியெனச் செயல்செயப் புறப்படு வெளியில்!

*****



உலகத்தமிழ்க் கழகக்கிளை
உற்றபல மாவட்டங்கள்
முலமுலெனக் கிளைகள்மொய்த்த
முதன்மையது முகவையாகும்
பலகிளையும் பாங்காமேனும்
படைப்புமுறைத் தலைமை சொல்லின்
தலைவன்தமிழ்க் குடிமகனே
தங்கியதாம் பறம்புக்குடி

- ஞா. தேவநேயப் பாவாணர்

தமிழ்க்குடி மகனே! நின்றன்
தமிழறி வதைக்கண் ணுற்றேன்
தமிழ்க்குடி மலர, நந்தாய்த்
தமிழ்மொழி வளர, நந்தம்
தமிழ்க்கிடை யூறு செய்யும்
சழக்கர்க ளொழிய என்றும்
தமிழ்க்கட னாற்றி வாழ்க!
தனித்தமிழ் அறிவு தானே!

- புலவர் குழந்தை

தமிழ்மண் பதிப்பகம்
அகமது வணிக வளாகம்
எண்:293, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
இராயப்பேட்டை, சென்னை- 600 014